
கல்கி




KALKI ஜூலை 8, 1951 4 அணா



நாளுக்கு நாள் அதிக தெளிவானதும் அழகா னதுமான சருமம்





ரெக்ஸோனுவிலிருக்கும் 'கேடில்' உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும் எழிலும் தரும்

ரெக்ஸோனு

'கேடில்'* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.

RP. 71-X30 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது


மோகன சுந்தரம்
தமிழ்
கூட்டாளியைக் கெடுக்க
நினைக்கிறான் கூட்டாளி...
அதற்காக அவன் கொலை
செய்யவும் தயங்கவில்லை...
கடைசியில் தானே அழிகிறான்
ஜே. ஆர். ரங்கராஜுவின் மப்புகழ் பெற்ற நவீனம்
M.S. PICTURES
MADRAS.14
சென்னையிலும் தமிழ்நாட்டிலும்
.....விரைவில் வெளிவருகிறது....
ஸ்ரீ சுகுமார் ...தயாரிப்பு...
எம். எஸ். பிக்சர்ஸ் ....வெளியீடு....
டைரக்ஷன் A.T. கிருஷ்ணஸ்வாமி B.A.,
விநியோகஸ்தர்கள் :
சென்னை : கே. எஸ். பிக்சர்ஸ், சென்னை 1
வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு & சித்தூர் ஜில்லாக்கள் : கீதா பிக்சர்ஸ், குடியாத்தம்
மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி : ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி
கோயமுத்தூர் & நீலகிரி : ஸ்ரீ ஆறுமுகம் பிக்சர்ஸ், பொள்ளாச்சி
சேலம் : ராஜா பிலிம்ஸ் சர்க்யூட் லிமிடெட், பொள்ளாச்சி
மைசூர் : விஜய ஸ்ரீ பிக்சர்ஸ், பெங்களூர் சிடி
எம். எஸ். எம் : பஜாஜ் பிரதர்ஸ், பம்பாய்



ஆர்.எம். எஸ். & கோ., லிட்.,

16, பிராட்வே :: மதராஸ் - 1

(போன் : 4060)

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும் !

எவ்வளவு நாட்பட்டதாயினும், மிகக் கடுமையாக இருப்பினும் நவீன ரஸாயன முறைத் தயாரிப்பான **வீனஸ் சார்ம்** வியாதியை முற்றிலும் குணமாக்கி விடும். அடங்காத பசி, மரண தாகம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சொரி சிரங்கு ஆகிய இவைகளே இவ்வியாதியின் முக்கிய அறிகுறிகள். இதை கவனிப்பின்றி விட்டு விட்டால் கட்டி, பிளவை, கண் கோளாறு முதலிய உபத்திரவங்களில் முடியும். **வீனஸ் சார்ம்** ஆயிரக்கணக்கானவர்கள் மரிப்பினின்றும் பிழைக்க உதவியுள்ளது. உபயோகித்த மறு தினமே நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து இதமளிக்கும். இரண்டு மூன்று தினங்களில் பாதி குணமடைந்ததாக நீங்களே உணர்வீர்கள். ஆகார நிபந்தனை கிடையாது. இலவசமான விபரங்கள் அடங்கிய காட்லாகிற்கு எழுதவும்

50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 6-12-0

(தபாற் செலவு இலவசம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரடரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா



குடும்ப ஆரோக்யத்தைப் பாதுகாக்க சாதாரண உணவு போதாது என்று டாக்டர்களுக்குத் தெரியும். குறைபாடுகளை நிவர்த்தி செய்து குடும்பத்தில் ஆரோக்யமும் சந்துஷ்டியும் நிலவ ஓவல்டின் அதிகப்படியான போஷாக்கு அளிக்கிறது. இந்த ருசியான உணவு பானத்தில் சேர்த்துள்ள இயற்கை உணவுகளும் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால் பழுத்த பார்லிமால்ட், சிறந்த கோக்கோ, இயற்கை பாஸ்படைட்கள் பி & டி. விடமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விடாமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினைப் போல் சிறந்தது வேறு கிடையாது. பெரியவர்கள் திடசாலிகளாக இருக்க ஓவல்டின் பருகவேண்டும். இது குழந்தைகளுக்கு வளர்ச்சியைத் தூண்ட உதவுகிறது. இரவில் நித்திரைக்குமுன் சாப்பிட்டால் ஆழ்ந்த, சுகமான நித்திரையைத் தருகிறது. போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள் : கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லி-ட்.



ஓ வ ல் டி ன்

குடும்ப ஆரோக்ய பானம்.

OV. 326

SWASTIK OIL MILLS LTD
BOMBAY

777
SOAPS

சிறப்பாகவும்

சிரமமின்றியும்

சிக்கனமாகவும்

சலவை செய்கின்றன

பார்களாகவும் மிக நேர்த்தியான
கேக்குகளாகவும் கிடைக்கும்.



ஸ்வஸ்திக்கின் தொடர்ந்து வேலை செய்யும் சோப் இயந்திரத்தில் தயாரிக்கப்படுகிறது. இவ்வகை இயந்திரம் ஆசியாவிலேயே இது ஒன்றுதான்.

SWASTIK OIL MILLS LTD
BOMBAY

விற்பனை டெப்போக்கள்:

பெங்களூர் ஸிடி ஆர்காடு ஸ்ரீநிவாஸாசார் ரோடு கொச்சி கல்வத்தி ரோடு	மதராஸ் 14, லிங்கி தெரு, பிராட்வே விசாகப்பட்டணம் 20-125, தாம்ஸன் தெரு	தலைமைச்: மந்திப்பேட்டை ஹைதராபாத் (Dn.) B-2, பிளாக் 4, ஷா ரோடு உஸ்மானி, கந்தான் பஜார்

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"நான் எப்பொழுதும் மக்ளீன்ஸ் உபயோகிக்கிறேன். ஏனெனில் அது என் பற்களை வெண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது என்று என் தாய் சொல்கிறாள்."

அவள் செய்து நாளிருக்கிறாள். அவளது பிரகாசமான புன்னகையைப்பாருங்கள்! பளபளப்பும், ஆரோக்கியமும் மிளிரும் பற்களை பாருங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையால் தினமும் இரண்டுதரம் அவள் சுத்தம் செய்து கொள்ளுகிறாள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும், பற்களை வெண்மையாகவும், ஒரே சமயத்தில் விளங்கும்படி செய்கிறது. அதனால்தான் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான புத்திசாலித்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தடவை மக்ளீன் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யும்படி கூறுகின்றனர்.

இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!



MTY-I TAM

வியாபார விபரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன்,ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

அநுபவத்தால் வந்த ஞானம்

நூற்றாண்டுக் கணக்கின் அநுபவத்தின் பிறகு கூட சந்தன மரம் பயிரிடும் சரியான முறை மைசூர் சமஸ்தானத்தாரால் மட்டும் மிக ரகசியமாகக் கையாளப்பட்டு வருகிறது. பயிராகும் இடத்திலேயே துண்டிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்ற மரங்களிலிருந்து மைசூர் அரசாங்கத் தொழிலாளர்களால் இறக்கப்படுகின்ற நறுமணம் வாய்ந்த சந்தனத் தைலம்தான் உலகத்திலேயே தூய்மையானது. அதுவே இயற்கையான மணமுடையது — அந்த மணம் உலகம் எங்கும் உண்டாக்கப்படுகின்ற உயர்ந்த சோப்புகளுக்கும் வாசனைத் திரவியங்களுக்கும் பயன்படுகின்றது.

மைசூர் சந்தனத் தைலம்

அரசாங்கச் சந்தனத் தைலத் தொழிற்சாலை - மைசூர்



ஜாம் - பக் சருமத்தை சுத்தப்படுத்தி ஆரோக்கியம் அடையச் செய்கிறது.

சருமத்திலும் மண்டையிலும் தோன்றும் நோய்களை எவ்வளவு விரைவில்

Zam-Buk

சுத்தப்படுத்தி குணமாக்கிறது

பாருங்கள்!

ஜாம்-பக் மூலிகை ஆயின்ட்மென்ட் சிறந்த ஔஷதங்களும், பிணியைத் தடுக்கும் தைலங்களும் கொண்டது. நோயுற்ற பாகத்தில் மயிர்க்கால்களுக்குள் இறங்கி வேலை செய்கிறது. புண்ணையும் எரிச்சலையும் போக்கி ஜாம்-பக் ஹிதம் தருகிறது. பிணியை உண்டாக்கும் தொத்து நோய்க் கிருமிகளை ஜாம்-பக் நாசம் செய்கிறது. ஜாம்-பக் எரிச்சலை அகற்றுகிறது. பிணியைப் பரவச் செய்யும் அழுக்குக் கழிவுகளைத் தடுக்கிறது. ஜாம்-பக் சருமத்தைச் சுத்தப்படுத்தி குணப்படுத்துகிறது. பார்வைக்கு மழமழப்பாகவும் வனப்பாகவும் தோன்றச்செய்து மீண்டும் ஆரோக்கியத்தை அளிக்கிறது. சரும நோய்கள், காயங்கள், வெட்டுக் காயங்கள், புண்கள், ரணங்கள், நெருப்புக் காயங்கள், மண்டைச் சொறி, பூச்சிக் கடி, நமைச்சல், மூலம், சேற்றுப் புண் முதலிய சரும வியாதிகளுக்கு உலகம் முழுவதும் ஜாம்-பக் உபயோகிக்கப்படுகிறது.



ஜாம் - பக் உலகத்தின் சிறந்த சரும ஆயின்ட்மென்ட்


மிருக கொழுப்பு கலப்பற்றது என்ற உத்தரவாதம்.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். நாதா & கோ., பி. டி. மதராஸ்

FZY: 1

மழை காலம்

மோட்டார்
ஓட்டுவதின்
அபாயங்களை
அதிகரிக்கின்றது



அதிகமான பந்தோபஸ்திற்கு

Firestone

பயர்ஸ்டோன்

சூபர் பலூன்களை

உபயோகியுங்கள்



ரோடின்மீது பாவும் டயரின் விஸ்திரணம் அதிகமாக உள்ளதாலும், வழுக்குதல், சறுக்குதல் போன்ற தடைகளுக்கு நவீன சாஸ்திரீய முறையில் மாற்றுகள் அமைக்கப்பட்டுள்ளதாலும் பயர்ஸ்டோன் சூபர் பலூன்கள் மேற்கண்ட அபாயங்களினின்றும் பரிபூரணமான பந்தோபஸ்தை உங்களுக்கு அளிக்கின்றன.

கம்-புப்பிடு டயர் இது ஒன்றே

LAS (BT)

ஆடவரும் பெண்டிரும்
ஆவலுடன் விரும்புவது

ஸ்டேப்ளைட்

பாத்திரங்களே !

உங்கள் வீடுகளை அலங்கரிக்கச் செய்வதும் நீடித்த உழைப்பை அளிக்கக் கூடியதும் ஸாம்ஸன் 'ஸ்டேப்ளைட்' பாத்திரங்களே !!

●

மனதைக் கவரும் அழகிய வடிவங்களில் பல பல ரகங்களில் ஏராளமாய் வந்துள்ளன !!!

●

ஸாம்ஸன் & கம்பெனி லிட்.
151, பிராட்வே, த. பெ. 1219, மதராஸ் 1
போன்: 4421 தந்தி: BARAPASH

இராசிபுரம்

பாரதி நாடக சபா

சாகாது - S. G. ஜீவன் எழுதும் கதைகள்

●

(பாடல்கள் வெந்த உள்ளத்திலிருந்து வந்தவை)

மறுக்க முடியாத கருத்துக்களும், மறுக்க முடியாத நிகழ்ச்சிகளும் நிறைந்தவை

1. இன்பவாழ்வு
2. அரசாங்க வேலைக்காரி
3. பசி
4. காம கண்கள்
5. மதிகெட்ட மகள்
6. நிராசை

உங்கள் ஆதரவையும் அன்பையும் பெறும். இது எங்கள் நம்பிக்கை.

●

காண்டிராக்டுகளுக்கும், மற்ற விபரங்களுக்கும்:
A. K லோகநாதன், ஜீவன் நியூஸ் சர்வீஸ்
இராசிபுரம் P. O. :: சேலம் ஜில்லா.

சேலத்தில்

எங்களிடம் கீழ்க்கண்ட சாமான்கள் மிகவும் உயர்ந்த ரகத்திலும் நியாயமான விலையிலும் கிடைக்கும்.

எலக்ட்ரிக் வொயரிங் செய்வதற்கான

★ ஸ்விட்ச், ஹோல்டர் ★
★ வொயர், பல்பு, ஷேடு ★
★ டியூப்லைட்டு, கேஸிங் ★
★ முதலியன ★

○●○

கட்டிடங்களுக்குத் தேவையான

★ கீல், ஸ்குரு, ஏர்தாழ்ப்பாள் ★
★ போல்ட், டைமன்வலை ★
★ டிஸ்டம்பர், பெயிண்டு ★
★ வார்னிஷ், பாலிஷ் ★
★ முதலியன ★

○●○

★ சானிட்டரி பிட்டிங்ஸ் ★
★ வாஷ் பேஸின், கிளாஸெட் ★
★ சிமெண்டு பைப்பு ★
★ வெல்டுமெஷ் ★
★ முதலியன ★

○●○

S. கருப்பசாமி செட்டி
ஹார்டுவேர் மர்ச்சண்ட்ஸ்
செவ்வாய்ப்பேட்டை :: சேலம்

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10 | இதழ் 49 — 1951 ஜூலை 8 — கர ௵ ஆனி 24௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

அட்டைப்பட விளக்கம்

'இவர்கள் என்ன தோழிப் பெண்களா? ராக்ஷசிகள் போல் அல்லவா தோன்றுகிறது? அர்த்த ராத்திரி ஆகிவிட்டது; இன்னும் இவர்கள் தத்தம் வீட்டுக்குப் போய்த் தூங்காமல் இங்கே ஊர் வம்பு பேசிக்கொண்டு கூத்தடிக்கிறார்களே!' என்று நினைத்தாள். அது மட்டுமா?

"நேரம் மிகுந்த தின்னும் நித்திரை யின்றி
நினைப்புத் தெரியவில்லை கூத்தடிக்கிறீர்!"

என்று ஆரம்பித்துப் பலபல சொல்லி அவர்களைக் கடிந்து கொண்டாள்.

இவை யெல்லாம் கேட்ட அந்தத் தோழிகளும் 'சரிதான், நம் தலைவிக்கு உண்மையிலேயே தூக்கம் வந்துவிட்டது போலிருக்கிறது!' என்று நினைத்து அவளைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் போய் விட்டார்கள்.


இப்பொழுது அந்தத் தலைவி என்ன சொல்கிறாள் தெரியுமா?

"கண்கள் உறங்கவொரு காரணம் உண்டோ?
கண்ணனை இன்றிரவு காண்பதன் முன்னே?
பெண்கள் எல்லோருமவர் வீடு சென்றிட்டார்
பிரியம் மிகுந்த கண்ணன் காத்திருக் கின்றான்."


* * * *

இந்த அற்புதமான பாரதியாரின் பாடலைத் தமிழர்கள் பலமுறை படித்திருப்பார்கள். பலர் பாடக் கேட்டிருப்பார்கள். எனினும் இந்த இதழ் அட்டைச் சித்திரத்தைப் பார்த்துவிட்டு இந்தப் பாடலைப் படிக்கும்போது ஒரு புதுச் சுவை தோன்றும்; புது நயம் புலப்படும்; புத்தம் புதிய இன்பம் பயக்கும். 'நவில் தொறும் நூல் நயம்!' என்று குறளாசிரியர் கூறியதன் பொருளும் நன்கு விளங்கும்.

இரண்டு மந்திரவாதிகள்!



இது என்ன மழை?



நில உரிமைச் சீர்திருத்தம் சம்பந்தமாகச் சென்னை சர்க்கார் நியமித்த கமிட்டி ஒரு நீண்ட அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது.

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 49

வேகம் குறைந்தது! விவேகம் பிறந்தது!

‘கேட்பார் யாரும் இல்லையா? எங்களை இப்படிக் கைவிடலாமா!’ என்று அணுகுண்டும் ஹைட்ரஜன் குண்டும் பூவுலகம் அதிரக் கதறலாம்.

‘கடவுளே! எங்கள் பூண்டே அற்றுப் போய் விடாமல் இந்த மட்டிலாவது எங்களைக் காப்பாற்றினாயே!’ என்று கொரியா மக்கள் மனம் உருகிப் பிரார்த்தனை செய்யலாம்.

கொரியா யுத்தம் உலக யுத்தமாக உருவடையாமல் தவிர்க்கப்பட்டதே என்று உலக ஜனங்கள் குதூகலம் அடையலாம்.

தன்னை நெருங்கிக் கொண்டிருக்கும் ஆபத்து ஒருபுறத்திலாவது தவிர்க்கப் பட்டதே என்று உலக சமாதான தேவதை தற்காலிகமாகத் திருப்தி அடையலாம்.

சரியாக ஒரு வருஷத்துக்கு முன் கொரியாவில் மூண்ட குட்டி மகா யுத்தத்தை நிறுத்துவதற்கான தீவிர முயற்சி நடைபெறுவதைக் குறித்து இவ்விதமெல்லாம் நிகழலாம் அல்லவா?

இரண்டாவது மகாயுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள்தான் ஆகின்றன. இதற்குள் சீனா, கிரீஸ், பாலஸ்தீனம், இந்தோனேஷியா, இந்தோசீனா முதலிய பல நாடுகளிலும் பெரிய யுத்தங்களும் சில்லறைப் போர்களும் ஏற்படத்தான் செய்தன. எனினும் கொரியாவில் நடந்ததைப் போல் உலக மக்களை வேதனைக்கு உள்ளாக்கிய யுத்தம் வேறு எங்கும் நடைபெறவில்லை. ஒருவகையில் கொரியா யுத்தத்தைச் சென்ற மகா யுத்தத்தைக் காட்டிலும் கூட கோரமானது என்று சொல்ல வேண்டும்.

சென்ற மகா யுத்தத்தில் மூன்று நாலு தடவை போர்க்களமாகும் துரதிர்ஷ்டம் எந்தத் தேசத்துக்கும் எந்த நகருக்கும் ஏற்படவில்லை.

ஜெர்மன் விமானங்கள் பிரிட்டிஷ் நகரங்களையும், பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் ஜெர்மன் நகரங்களையும் அழித்து நாசமாக்கின அல்லவா? அப்போது கூடக் கொரியா நகரங்களைப் போல் எந்த நகரமும் முற்றிலும் எரிந்து நிர்மூலம் ஆகவில்லை.

தென் கொரியாவின் தலைநகரான ஸியோல் உள்படப் பல நகரங்களும் மனித சஞ்சாரமற்ற பைசாச நகரங்களாகக் காட்சியளிக்கின்றன என்பதைப் பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகைச் செய்திகளே குறிப்பிடுகின்றன.

கொரியாவைக் காப்பாற்றச் சென்ற வீரர்களால் அந்நாட்டில் இழைக்கப் பட்ட கொடுமைகளைப் பற்றிய உண்மைச் செய்திகளை வெளியிட்டதற்காகச் சில பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகாசிரியர்கள் அந்த நாடுகளில் கண்டனத்துக்கும் துன்பத்துக்கும் இலக்காக நேர்ந்தது என்றும் செய்திகள் கூறுகின்றன.

கொரியா யுத்தத்தில் ருஷ்ய-அமெரிக்க வல்லரசுகளுக்குள் பலப் பரீட்சையும் நடந்தது. அமெரிக்கர்கள் சில புதிய வெடிகுண்டுகளையும் ஆயுத வகைகளையும் கொரியர்களின் தலையில் பரிசோதித்துப் பார்த்தனர்.

சீனாவரையில் சென்று போர் புரிந்து சீனாவைப் படுதோல்வியுறும்படி செய்தாலன்றிக் கொரியா யுத்தத்தில் முடிவு காண முடியாது என்று ஜெனரல் மெக் ஆர்தர் உறுமினார். அமெரிக்கத் துருப்புகளை விரட்டிச் சென்று பஸிபிக் மகா சமுத்திரத்தில் மூழ்கடித்தாலன்றிக் கொரியா கரைசேர முடியாது என்று சீன சர்க்கார் ஆத்திரப்பட்டனர்.

எனினும் இறுதியில் எல்லாருடைய வேகமும் ஆத்திரமும் தணிந்து, சமாதானமாகப் போவதே சிறந்த வழி என்ற விவேகம் இரு சாராருக்கும் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லவா?

வேடிக்கை! ஆனால் வெட்கக்கேடு!

ஏழு வருஷங்களுக்கு முன்பு அமெரிக்கர் வெண்டல் வில்க்கி என்பவரின் பெயர் பிரபலமாயிருந்தது. 1942-ல் மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த போது அவர் ஆகாச விமானத்தில் உலகத்தைச் சுற்றி வந்தார்! ஊர் திரும்பியதும் "ஒரு உலகம்" என்னும் புத்தகத்தை எழுதினார். 1943-ம் ஆண்டில் பிரசுரமான அப்புத்தகம் அந்த ஒரு ஆண்டிற்குள் 26 பதிப்புகள் வெளியாகிப் பல லட்சம் பிரதிகள் விற்பனை ஆயின.

வெண்டல் வில்க்கி அவரது யாத்திரையின் போது ஸோவியத் ருஷியாவில் பிரயாணம் செய்தார். ஸோவியத் ருஷியாவுக்கு உட்பட்ட ஸைபீரியாவுக்கும் போயிருந்தார். ஸைபீரியாவில், உலகத்தின் வட கோடி கோடி கோடி என்று சொல்லக் கூடிய யாகுட்ஸ்க் நாட்டுக்குச் சென்றிருந்தார். வருஷத்தில் பெரும்பகுதி நாட்கள் பனிக்கட்டி மூடிக் கடுங்குளிராயிருக்கும் நாடு அது. ருஷிய ஜார் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் புரட்சிக்காரர்களை அந்த நாட்டுக்கு அனுப்புவது வழக்கம். அத்தகைய நாட்டின் தலைநகரான யாகுட்ஸ்க் பட்டணத்தில் போய் வெண்டல் வில்க்கி இறங்கினார். உடனே, அவருக்கு அந்நகரைச் சுற்றிக் காட்ட நியமிக்கப்பட்ட தோழர் முரடாவ் வந்தார்.

"மிஸ்டர் வில்க்கி! இந்தப் பட்டணத்தில் உமக்கு என்ன பார்க்க வேண்டும்!" என்று முரடாவ் கேட்டார்.

அங்கே அப்படிப் பார்க்க வேண்டிய இடம் எதுவும் இருப்பதாக வில்க்கிக்குத் தோன்றவில்லை. மரக் கட்டைகளால் கட்டப்பட்ட சாதாரண வீடுகளே அப்பட்டணத்தில் இருந்தன. மொத்தம் ஜனத்தொகை ஐம்பதினாயிரம்தான்! பட்டணத்தில் இருந்த ஹோட்டல் ஒன்றே ஒன்றுதான்! அங்கே பார்ப்பதற்கு என்ன இருக்க முடியும்!

"இந்த நகரில் லைப்ரரி ஏதாவது இருக்கிறதா!" என்று வில்க்கி கேட்டார்.

"ஓ! பேஷாக இருக்கிறது!" என்றார் தோழர் முரடாவ்.

"அப்படியானால் அங்கே போகலாம்!" என்று சொன்னார் வெண்டல் வில்க்கி.

போனார்கள். அந்த யாகுட்ஸ்க் பட்டணத்திலேயே புத்தகசாலைக் கட்டிடந்தான் பெரிதாயும் வெளிச்சமாயும் சுத்தமாயும் இருந்தது. ஐம்பதினாயிரம் மக்களே உள்ள அந்தப் பட்டணத்துப் புத்தகசாலையில் எத்தனை புத்தகங்கள் இருந்தன, தெரியுமா! மொத்தம் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் புத்தகங்கள்! (இது கட்டுக் கதையன்று; கற்பனையன்று. "ஒரு உலகம்" என்னும் புத்தகத்தில் 77-ம் பக்கத்தைப் பார்க்கவும்.) முந்தைய ஒன்பது மாதத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் அந்தப் புத்தகசாலையிலிருந்து புத்தகம் எடுத்துப் படித்திருப்பதாக ரிஜிஸ்டர்களிலிருந்து தெரிந்தது! இவர்களில் பலர் பக்கத்துக் கிராமப் புறங்களிலிருந்து வந்தவர்கள்.

"1917-ம் வருஷத்துக்கு முன்னால் இங்கே படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 2 பேர்; இப்போது படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 98 பேர். பாக்கியுள்ள இருவரையும் இவ்வருஷத்திற்குள் படிப்பித்தாக வேண்டும் என்று மாஸ்கோவிலிருந்து கட்டளை வந்திருக்கிறது!" என்றார் தோழர் முரடாவ்.

இதை யெல்லாம் பார்த்தும் கேட்டும் வியந்த வெண்டல் வில்க்கி தமது புத்தகத்தில் "ருஷியா இவ்வளவு மகத்தான வலிமை பெற்றிருப்பதின் இரகசியம் இதோ இருக்கிறது!" என்று முடிவு கட்டிக் கூறுகிறார்.

* * *

மற்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் புத்தக சாலைகளின் பெருக்கத்தைக் கேட்டால் நமக்குப் பிரமிப்புத்தான் உண்டாகும்.

1950-ம் ஆண்டில் இங்கிலாந்தில் புத்தகசாலை இயக்கத்தின் நூறு ஆண்டு விழாக் கொண்டாடினார்கள். அப்போது சில புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டன. ஆங்கில நாட்டு லைப்ரரிகளில் பதிவு செய்து கொண்டு ஒழுங்காகப் புத்தகம் வாங்கிப் படித்தவர்கள் 1949-ல் ஒரு கோடி இருபது லட்சம் பேர். மொத்தம் 31 கோடி 12 லட்சம் புத்தகங்களை அவர்கள் அந்த ஆண்டில் வாங்கிப் படித்திருக்கிறார்கள். அந்த ஒரு வருஷத்தில் மட்டும் பதினெட்டு லட்சம் பவுன் புதிய புத்தகங்கள் வாங்குவதில் புத்தகசாலைகள் செலவு செய்தன.

மக்கள் சொந்தத்திலேயே கணக்கற்ற புத்தகங்கள் வாங்கிப் படிக்கும் வழக்கமுள்ள ஆங்கில நாட்டில் புத்தகசாலைகள் இவ்வளவு அபிவிருத்தி யடைந்திருக்கின்றன.

* * *

ருஷியாவையும் இங்கிலாந்தையும் ஒருவாறு பார்த்த பிறகு இப்போது நம் அருமைச் செந்தமிழ் நாட்டுக்கு வருவோம்.



வெண்டல் வில்க்கி

இங்கேயும் சென்ற இருபது வருஷத்துக்கு மேலாகப் புத்தகசாலை இயக்கம் நடந்து வருகிறது. புதிய சுதந்திர சர்க்கார் வந்த பிறகு மக்களிடையே கல்வியைப் பரப்புவதில் முனைந்து முனைந்து வேலை செய்கிறார்கள். இவற்றின் பலனாக இன்று சென்னை மாகாணத்தில் மொத்தம் 2202 புத்தகசாலைகள் இருக்கின்றன. சென்னை நகரைச் சேர்த்துத் தமிழ் நாட்டுப் பன்னிரண்டு ஜில்லாக்களிலும் 925 புத்தகசாலைகள் நடைபெறுகின்றன. இவற்றின் நிர்வாகம் பற்றிய விவரம் வருமாறு:—யூனியன்

ஸிடி 1, சர்க்கார் 5, ஜில்லா போர்டுகள் 15, நகர சபைகள் 54, பஞ்சாயத்துக்கள் 614, தனிப்பட்ட சங்கங்கள் 73, கூட்டுறவு—கிராம சங்கங்கள் 163.

மேற்படி புத்தகசாலைகளில் உள்ள புத்தகங்களைப் பற்றியும், படிப்பவர்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டாமா! சில உதாரணங்களைப் பார்க்கலாம் :

1. வலசையூர் (சேலம் ஜில்லா) கிராம சங்க புத்தகசாலை. புத்தகங்கள் 74. (வெறும் எழு பத்துநாலுதான்.) படிப்பவர்கள் மாதம் சராசரி 24 பேர். சர்க்கார் மானியம் வருஷம் ரூ. 40.

2. அம்பா சமுத்திரம் பஞ்சாயத்து போர்டு வாசகசாலை. புத்தகம் 1153. (தமிழ் 842.)
படிப்பவர்கள் மாதம் சராசரி 2000.
சர்க்கார் மானியம் வருஷத்திற்கு ரூ. 65.

3. கேஜூர் பஞ்சாயத்து போர்டு புத்தகசாலை புத்தகங்களின் தொகை 110.
சராசரி படிப்பவர்கள் 30.
சர்க்கார் மானியம் ரூ. 50.

4. நடராஜா கல்விக் கழகம் நூல் நிலையம் (சென்னை.) புத்தகங்கள் 1739. (தமிழ் 1619.)
சராசரி படிப்பவர்கள் 350.
சர்க்கார் மானியம் ரூ. 98—4—0.

5. கோயமுத்தூர் முனிசிபல் இலவச வாசகசாலை. புத்தகம் 3187. (தமிழ் 1620.)
சராசரி படிப்பவர்கள் மாதம் 2374 பேர்.
சர்க்கார் மானியம் ரூ. 150.

6. முருகூர் (திருச்சி) ராஜாஜி வாசகசாலை.
புத்தகங்கள் 300. (தமிழ் 290.)
மாதம் சராசரி படிப்பவர்கள் 290 பேர்.
சர்க்கார் மானியம் கிட்டவில்லை.

மேலே சில உதாரணங்கள் மட்டும் கொடுத்திருக்கிறோம். அநேக வாசகசாலைகளின் நிர்வாகிகள் "சர்க்கார் மானியம் முயன்றும் கிட்டவில்லை!" என்ற பல்லவியைப் படித்திருக்கிறார்கள்.

ஐம்பதினாயிரம் ஜனத் தொகையுள்ள யாருட்ஸ்க் பட்டணத்துப் புத்தகசாலையையும் இரண்டு லட்சம் ஜனத் தொகையுள்ள கோயமுத்தூர் நகரத்தின் புத்தக சாலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வேடிக்கையாயிருக்கும்.

யாருட்ஸ்க் புத்தகசாலையில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 5 லட்சத்து 50 ஆயிரம். கோவைப் புத்தகசாலையில் புத்தகங்களின் தொகை 3187.

எப்படியிருக்கிறது வேடிக்கை! ஆம்; ஒரு பக்கம் வேடிக்கைதான். இன்னொரு பக்கம் வெட்கக்கேடு! கோயமுத்தூர் நகரத்துக்கு ரோஷம் இருந்தால் அது நீலகிரி மலைக்குப் பின்னால் போய் ஒளிந்து கொண்டு விடும்.

கோயமுத்தூர் மட்டும் என்ன! தமிழ்நாடு முழுதும் இதே கதைதான்.

இந்த வெட்கக் கேடான நிலைமை மாற வேண்டும். தமிழ் நாட்டில் பதினாயிரம் புத்தக சாலைகளாவது கூடிய விரைவில் ஏற்பட வேண்டும். ஒவ்வொன்றிலும் பதினாயிரம் தமிழ்ப் புத்தகங்களாவது இருக்க வேண்டும்.

இதற்கு வேண்டிய முயற்சிகளைப் பொது மக்களும் ஸ்தல ஸ்தாபனங்களும் மாகாண சர்க்காரும் கைக் கொள்ள வேண்டும்.

எத்தனை நிலம் வேண்டும்?

மேற்படி தலைப்பின் கீழ்ப் பல அன்பர்கள் எழுதிய கடிதங்களை வெளியிட்டு வந்தோம். இந்த இதழில் வெளியிட்டிருக்கும் கடிதங்களோடு நிறுத்தி விடுகிறோம்.

ஏனெனில், நில உரிமைச் சீர்திருத்தம் சம்பந்தமான சர்க்கார் விசாரணைக் கமிட்டியின் அறிக்கை சென்ற வாரத்தில் வெளியாகியிருக்கிறது.

நில உரிமைப் பிரச்னையை எவ்வளவு தூரம் குட்டையாகக் குழப்பிக் குட்டிச் சுவராக அடிக்கலாமோ, அவ்வளவு கைங்கரியத்தையும் அந்த அறிக்கையே செய்து விட்டது.

எனவே, அந்தப் பிரச்னை சம்பந்தமாக நாம் மேலும் பல்வேறு கருத்துக்களைப் பிரசுரித்துக் 'குழப்பும் கைங்கரியம்' செய்ய வேண்டியதில்லை யல்லவா!

• • •

நமக்கு எழுதியுள்ள அன்பர்களில் மிகப் பெரும்பாலோர் ஒரு தனி மனிதனுக்கு நன்செய் பத்து ஏக்கரா, புன் செய் இருபது ஏக்கராவுக்கு மேல் கொடுக்கத் தயாரா யில்லை. அதற்குரிய காரணங்களைத் தெளிவாகச் சொல்லா விட்டாலும், பொதுவாக ஒரு தனி மனிதர் அதிக நிலம் வைத்துக் கொள்வது மிகப் பெரும்பாலோருக்குச் சம்மதம் இல்லை என்று திட்டமாக ஏற்படுகிறது. ஒரு சிலர் மட்டும் ஐம்பது ஏக்கரா, நூறு ஏக்கரா வரையில் தனி மனிதர் உடைமையா யிருப்பதற்குச் சம்மதம் கொடுக்கிறார்கள்.

நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர்தான் நில உடைமையைப் பற்றிய கட்டுப்பாடே கூடாது என்று கருதுகிறார்கள்.

மேற்கூறிய பொது ஜனக் கருத்தைச் சர்க்கார் நியமித்த கமிட்டியின் அறிக்கை ஒருவாறு ஒப்புக் கொள்கிறது.

நில உடைமையின் அளவைக் கட்டுப்படுத்தும் அவசியத்தை ஏற்றுக் கொள்கிறது.

ரூ. 250 நிலவரி கொடுக்கும் அளவு நிலத்தை அதிகபட்ச வரம்பாகக் குறிப்பிடுகிறது. இதன்படி நன் செய் நிலம் 20 ஏக்கரா முதல் 50 ஏக்கரா வரையிலும் புன் செய் நிலமானால் நூறு ஏக்கரா வரையிலும் ஒரு தனி மனிதர் வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் கமிட்டி சிபாரிசு செய்திருக்கும் அதிக பட்ச வரம்பு ஏற்கெனவே நிலம் வைத்திருப்பவரைப் பாதியாது. இனிமேல் அதற்கு அதிகமாக நிலம் வாங்க அனுமதிக்கக் கூடாது என்று மட்டுமே சொல்கிறது.

"இது வரையில் திருடியவர்கள் இனிமேலும் திருடலாம்; புதிதாக யாரும் திருடக்கூடாது."

"இது வரையில் ஜமீன்தாராயுள்ளவர்கள் இனிமேலும் ஜமீன்தாரர்களா யிருக்கலாம்; புதிதாக ஜமீன்தார்கள் ஆகக் கூடாது."

"இதுவரை கருப்பு மார்க்கெட் செய்தவர்கள் இனிமேலும் செய்யலாம்; புதிய கருப்பு மார்க்கெட்காரர்கள் வரக்கூடாது" என்றெல்லாம் சட்டம் ஏற்படுத்துவது எவ்வளவு இலட்சணமாயிருக்குமோ, அப்படித்தான் மேற்படி கமிட்டியின் சிபார்சும் இருக்கிறது.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் நில உடைமை வைத்துக் கொள்வது கூடாது என்றால், அதை நாடெங்கும் பொதுவாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

அதிகப்படி நிலங்களை நியாயமான விலை கொடுத்துச் சர்க்கார் வாங்க வேண்டும். அவற்றைச் சின்னப் பகுதிகளாக விற்கவோ அல்லது கூட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தவோ வேண்டும்.

ஏற்கெனவே அதிக நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இனியும் வைத்துக் கொண்டிருக்கலாம் என்றால், புதிய ஏற்பாட்டில் அர்த்தம் இல்லை; அதனால் காரியாம்சத்தில் அதிகமான பலனும் ஏற்படாது.

* * *

கமிட்டியின் மற்றச் சிபார்சுகளில் சில அவசியமானவைதான். ஆனால் நில உரிமை, குடிவார உரிமை, விவசாயத் தொழில் உரிமை ஆகியவற்றை எவ்வளவு சிக்கலாகச் செய்ய முடியுமோ அப்படி அவை செய்கின்றன.

விவசாயிகள் ஏற்கெனவேயே 'உள்ளங் காலில் வெள்ளெலும்பு ஓடச்' சர்க்கார் அதிகாரிகளைத் தேடி அலைந்து, கைகட்டி நின்று, காலட்சேபம் செய்ய வேண்டியிருக்கிறது.

புதிய சிபார்சுகள் அமுலுக்கு வந்து விட்டால், பிறகு விவசாயிக்கு விவசாயம் செய்ய நேரமே இராது! விதிகளைப் புரிந்து கொள்ளுவதற்கு வக்கீல்களைத் தேடிப் போவதிலும், சிக்கல்களை எடுப்பதற்கு அதிகாரிகளைத் தேடிப் போவதிலும் அவர்களுடைய பாதி நேரம் போய் விடும்; பாக்கிப் பாதி நேரம் நீதி மன்றங்களின் தாழ்வாரங்களில் நெடுந் தூண்களாக நிற்க வேண்டி வரும்.

பொதுவாக, மக்களின் வாழ்க்கையைத் தொல்லைகள் நிறைந்த தாக்குவதற்கும், அதிகார வர்க்கத்தின் பிடிப்பை வலுவுள்ளதாக்குவதற்கும் அச் சிபார்சுகள் ஏற்றவை. அவற்றை அமுல் நடத்துவதற்குப் புதிய அரசாங்க அதிகாரிகள் ஆயிரக் கணக்கில் தேவையா யிருக்கும். புதிய வரிகள் போட்டுத்தான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

சிபார்சுகள் அமுலுக்கு வருவதற்கு முன்பு சட்ட சபையில் விரிவான விவாதம் நடக்கும் என்று நம்புகிறோம். அதற்குள் விவசாயிகளும் கமிட்டியின் சிபார்சுகளில் உள்ள அநுகூலப் பிரதிகூலங்களைப் பற்றிக் கவனம் செலுத்தித் தங்கள் கருத்தைச் சட்டசபைப் பிரதிநிதிகளுக்குத் தெரியப் படுத்துவார்களாக.★

அதிசயம்! ஆனால் உண்மை!

இந்த மாதத்தில் எங்கே பார்த்தாலும் "ஸீட் இல்லை!" என்ற கூக்குரலைக் கேட்கிறோம். லயோலா காலேஜில் ஸீட் இல்லை; விவேகானந்தா காலேஜில் ஸீட் இல்லை; ஆர்ட்ஸ் காலேஜில் இடம் இல்லை; விவசாய காலேஜில் இடம் இல்லை; ஆயுர்வேத காலேஜில் இடம் இல்லை; சித்த காலேஜில் இடமில்லை; உயிர்க் காலேஜில் இடமில்லை; என்ஜினியரிங் காலேஜிலும் கால்நடைக் காலேஜிலும் ஸீட் இல்லவே இல்லை; இப்படியெல்லாம் 'ஸீட்'டுக்குக் கஷ்டமா யிருக்கிறதே, மழுங்கத் தலையை மொட்டை அடித்துக் கொண்டு எல்லாக் காலேஜுகளுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விட்டு வரலாம் என்று புறப்பட்டால், மோட்டாரில் இடம் இல்லை; டிராமில் இடம் இல்லை;—இவ்வளவு நெருக்கடியையும் தாண்டி க்ஷவர ஸலூனுக்குள் புகுந்து பார்த்தால், அங்கேயும் 'ஸீட்' காலி இல்லை!!!

இவ்வளவு நெருக்கடியான 'ஸீட் இல்லை' பிரச்னைகள் எல்லாவற்றையும் ஒரே அடியாகத் தீர்த்து வைக்கக்கூடியவர் ஒருவர் இருக்கிறார்! அவர்தான் கோயமுத்தூரைச் சேர்ந்த அற்புத மாயாஜால மனிதர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள்.

"காலேஜில் ஸீட் இல்லை" என்று கஷ்டப்படுகிற வாலிபர்கள் எல்லாரும் தயவுசெய்து கோயமுத்தூருக்கு யாத்திரை சென்று ஸ்ரீ ஜி. டி. நாயுடுவைப் பார்த்துவிட்டு வரும்படி சிபார்சு செய்கிறோம். அப்படிப் பிரயாணச் செலவு செய்துகொண்டு போய்ப் பார்க்க முடியாத வாலிபர்கள் அவர் எழுதியுள்ள "நான் கண்ட உலகம்" என்ற நூலையாவது வாங்கிப் பார்க்கும்படி யோசனை சொல்கிறோம்.

ஸ்ரீ ஜி. டி. நாயுடுகாருவிடம் ஒரு வாலிபன் சென்று "காலேஜில் எனக்கு இடம் கிடைக்கவில்லை" என்று சொன்னால், நாயுடுகாரு சிரிப்பார்; அல்லது கண்ணீர் விடுவார்; அல்லது திட்டவும் செய்வார். "அப்பனே! என்னைப் பார்! நான் எந்தக் காலேஜில் படித்தேன்!" என்று கேட்பார்.

திருவாளர் ஜி. டி. நாயுடு என்ஜினியரிங் காலேஜுக்கு மனுப் போட்டதில்லை; காலேஜ் நிழலில் ஒதுங்கியதில்லை; உயர்தரப் பள்ளியில்கூட அவர் படித்ததில்லை.

ஆனால் நாலு தடவை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார்; அமெரிக்காவில் அமெரிக்கர்கள் அடங்கிய சபைகளில் ஆங்கிலத்தில்

★ "எத்தனை நிலம் வேண்டும்?" என்னும் தலைப்பில் வெளியாகி யிருக்கும் கடிதங்களில் 17—6—51 இதழில் பிரசுரமான "தேவகி"யின் கவிதைக் கடிதத்துக்கும், இந்த இதழில் வேறு பக்கத்தில் வெளியாகி யிருக்கும் ஸ்ரீ கே. வி. முருகன் கடிதத்துக்கும் ரூ. 15 பரிசு பிரித்து வழங்கப்பட்டது.
—ஆசிரியர்.

பிரசங்கமாரி பொழிந்திருக்கிறார்; பெரிய பெரிய வாழ்க்கைத் தத்துவங்களைப் பற்றியும் ஆத்மீக விஷயங்களைப் பற்றியும் பேசியிருக்கிறார்; ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசித்த விஞ்ஞானிகள்—தொழில் நிபுணர்களுடன் சம்பாஷித்திருக்கிறார்.



ஸ்ரீ ஜி. டி. நாயுடு

ஐரோப்பாவில் மின்சார மோட்டார் என்ஜின்கள் பெருவாரியாக உற்பத்தியாகும் ஆல்பர்ட் ஹர்த் பாக்டரி தொழிற்சாலை ஒன்றுக்குத் திரு ஜி. டி. நாயுடு போயிருந்தார். அந்த இயந்திரங்களில் தாமே வேலை செய்து பார்த்தார். புதுவிதமான 'லேத்' இயந்திரம் ஒன்று அங்கே தயாரிக்கப்பட்டு வந்தது. அதை ஸ்ரீ நாயுடு ஓட்டிப் பார்த்தபோது, அதில் ஒரு குறை தெரிந்தது. குறையை அத் தொழிற்சாலை என்ஜினியர்களுக்கு எடுத்துக் காட்டினார். அத் தொழிற்சாலையின் டைரக்டர்கள் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்து உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி கூறினார்கள். நாயுடுகாரு அத் தொழிற்சாலையிலிருந்து புறப்படும் முன்பே குறையை நிவர்த்தி செய்தும் காட்டினார்கள்!

ஆம்; நாயுடுகாரு இளமையில் என்ஜினியரிங் கலாசாலையில் படித்ததில்லைதான். ஆனால் அவருடைய நாற்பத்தேழாம் வயதில் (1940-ம் ஆண்டில்) அமெரிக்காவிலுள்ள செயிண்ட் லூயி நகரத்தில் ஒரு தொழிற் பயிற்சிப் பாடசாலையில் சில மாத காலம் படித்தார். வாரம் ஒன்றுக்கு 16 டாலர் உதவிச் சம்பளம் பெற்றுக் கொண்டு படித்தார்!

நாயுடுவின் வாழ்க்கையில் அவர் பள்ளிக்கூடத்தில் படித்ததெல்லாம் இவ்வளவுதான். ஆனாலும் இன்றைக்கு உலகத்தில் தலைசிறந்த இயந்திர நிபுணர்களுக்கு அவர் யோசனை சொல்லக்கூடியவரா யிருக்கிறார்!

என்ஜினியரிங் கலாசாலைகளில் ஐந்து வருஷம் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை "அநுபவ பூர்வமாக ஆறு மாதத்தில் சொல்லிக் கொடுக்கிறேன்!" என்கிறார்.

விவசாயக் கலாசாலை எதிலும் ஸ்ரீ ஜி. டி. நாயுடு படித்ததில்லை. ஆனால் விவசாயத் துறையில் அவர் சில அற்புத மாயா ஜால வித்தைகள் புரிந்திருக்கிறார்.

அவருடைய தோட்டத்தில் வளரும் ஆரஞ்சுச் செடியிலிருந்து ஒரு ஆரஞ்சுப் பழத்தைப் பறித்து அப்படியே சாறு பிழிந்து சாப்பிட்டால் கசக்கும்; அந்தச் சாற்றில் இருபது பங்கு தண்ணீர் கலந்து அருந்தினால் அது இனிக்கும்! அதாவது ஒரு பழத்தில் இருபது பழங்களின் சத்து உண்டாகும்படியான அற்புதத்தை அவர் செய்திருக்கிறார்.

அவருடைய தோட்டத்தில் ஒரு பருத்தி விதையிலிருந்து உண்டாகும் பருத்திச் செடி 10 அடி உயரம் வளருகிறது; அதில் இருபத்தி நாலு ராத்தல் பருத்தி விளைகிறது!

அவர் பயிரிடும் சோளச் செடி 18½ அடி உயரம் வளர்ந்து 35 கதிர்கள் ஈனுகிறது.

அவர் பயிராக்கும் பப்பாளி மரத்தில் பழுக்கும் ராட்சதப் பழங்கள் "உணவு மந்திரி கனம் முன்ஷியையும் விவசாய மந்திரி கனம் ஷெட்டியையும் இங்கே வரச் சொல்லுங்கள்! அவர்களை ஒரே விழுங்காய் விழுங்கி ஏப்பம் விடுகிறேன்!" என்று அறை கூவுகின்றன!

• • •

சவர ஸலூன்களில் இடமில்லை என்று புகார் செய்கிறவர்களுக்கு, ஸ்ரீ ஜி. டி. நாயுடு மின் சக்தியினால் இயங்கும் இயந்திர க்ஷவரக் கத்தி ஒன்று தயாரித்து வைத்திருக்கிறார். மேனாட்டுத் தொழில் நிபுணர்கள் அதைப் பார்த்து அதிசயித்தார்கள். "எங்களுக்கு இதைச் செய்யும் உரிமை கொடுங்கள்; நீங்களே மேற்பார்வை செய்யுங்கள்; வேண்டுமென்கிற பணம் தருகிறோம்!" என்றார்கள்.

ஸ்ரீ ஜி. டி. நாயுடு மறுத்து விட்டார். இந்தியாவிலேயே அதை உற்பத்தி செய்து அயல் நாடுகளுக்கும் அனுப்ப ஆசைப்பட்டார்.

அந்த ஆசை இன்னும் நிறைவேறவில்லை. அது போல் இன்னும் பல துறைகளில் திரு நாயுடுவின் தீக்ஷண்யமான அறிவில் தோன்றிய புதுமைகள் செயலில் வரவில்லை.

தேசத்தில் போதிய வசதிகள் இல்லை; சர்க்கார் ஆதரவும் இல்லை; எல்லாவற்றுக்கும் மேலாக, நாயுடுகாருவுக்கும் வருமான வரி இலாகாவுக்கும் 'லடாய்' ஏற்பட்டு, நாயுடு மனங்கசந்து போகும்படி செய்து விட்டது!

ஒரு நாள் அவருடைய மனக்கசப்பு நீங்குமென்று எதிர் பார்ப்போமாக. காலமாகிய தண்ணீர் அந்தக் கசப்புடன் கலந்து அதுவே இனிப்பாகுமென்று நம்புவோமாக.

ஸ்ரீ நாயுடுவின் பலவிதத் தொழில் திட்டங்களும், தொழிற்கல்வித் திட்டங்களும் காரியத்தில் நிறைவேறும் காலம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதற்கிடையில் "நான் கண்ட உலகம்" என்ற நூலைத் தமிழாக்கி வெளியிட்ட ஸ்ரீ திரிலோக சீதாராம் தமிழ்நாட்டு வாலிபர்களுக்கு ஒப்பற்ற சேவையைப் புரிந்திருக்கிறார். ஸ்ரீ ஜி. டி. நாயுடு என்னும் விந்தை மனிதரைப் பற்றி நாம் பரம்பரையாகக் கேள்விப்பட்டிருந்தவையெல்லாம் இந்நூலின் மூலம் உறுதிப்படுகின்றன. நூற்றிருபத்தெட்டு பக்கமுள்ள இந்த நூலுக்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்து வாங்கலாம். தங்கத்தைவிட விலை உயர்ந்த பிளாடினம், யுரேனியம், தோரியம் முதலிய உலோகங்களை எடைக்கு எடை கொடுத்தும் வாங்கலாம். அல்லது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் ரூ 1—10—0 கொடுத்தும் வாங்கிப் படிக்கலாம்.

நமது வாலிபர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட நம் சென்னை மாகாண சர்க்கார் இந்தப் புத்தகத்தில் பதினாயிரம் பிரதிகள் வாங்கி, பதினாயிரம் புத்தகசாலைகளைத் தமிழ் நாடெங்கும் ஏற்படுத்தி, புத்தகசாலைக்கு ஒரு புத்தகம் வீதம் விநியோகித்தால் அளவற்ற பயனை அடையலாம்.

கிராமத்துக்கு ஒரு நூல் நிலயம்.

சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவழிப்பது பயனடையும் வகையில் பதினாயிரம் நூலகங்கள் நிறுவி அவைகளுக்குப் புத்தக தானம் செய்ய வேண்டியதின் அவசியத்தைப் பற்றிச் சென்னை எழுத்தாளர் சங்கத்தின் தீர்மானத்தை வரவேற்கிறேன்.

காலஞ் சென்ற அன்னதான சிவன் பெயரால் எங்கள் சங்கத்தினரால் சென்ற வருஷம் ஒரு வாசகசாலை அன்னார் பிறந்த ஊராகிய தேப்பெருமாள் நல்லூர் கிராமத்தில் நிறுவப்பட்டு அக்கிராம வாசிகளுக்குத் தொண்டாற்றி வருகிறது. இந்நூலகத்தில் சுமார் 500 புத்தகங்கள் இருக்கின்றன. இவையனைத்தும் அன்பளிப்பாகவே கிடைத்தன. இந் நூலகம் மேலும் திறம்படச் சேவை செய்யும் வகையில் பல அரிய நூல்களைச் சேர்க்க விரும்பி சர்க்காரின் ஒரு அறிக்கையைப் பார்த்து ரூ. 150 வருஷ மான்யத்திற்குச் சென்ற 29-6-50ல் ஒரு விண்ணப்பம் அனுப்பினோம். அதிலிருந்து இன்று வரை நான்கு தடவைகள் பலவித ரகத் தகவல்கள் அடங்கிய கேள்வித் தாள்களும், வாசகசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புத்தகங்கள், பத்திரிகைகளின் லிஸ்டுகளும் வந்தனவே தவிர, மான்யம் வரும் குறியையே காணோம்.

நிற்க, சர்க்கார் ரொக்க மான்யங்கள் அளிப்பதினால் நூலக முன்னேற்றம் ஒரு சரியான முறையில் செல்லுமென்று நிச்சயம் கூற முடியாது. நூலக நிர்வாகிகளிடம் ஒரு பெரிய ஜாப்தாவைக் கொடுத்துப் புத்தகம் வாங்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதால் நிர்வாகிகளுக்குப் பிடித்த புத்தகங்களையே வாங்க நேரிடும். எனவே ஒவ்வொரு நூலகத்திலிருக்கும் புத்தகங்களும், அந்தந்த நிர்வாகிகளின் வெறுப்பு, விருப்பைப் பிரதிபலிப்பதாகயிருக்கும். இத்துறையில் அநுபவம் கொண்ட ஒரு சிலரை ஒரு கமிட்டியாக நியமித்து ஒவ்வொரு புத்தகத்தையும் அச்சிடு முன்பு பரிசீலனை செய்து பொது மக்களுக்கு உபயோகமானதைப் பொறுக்கிச் சர்க்காருக்காக பிரத்தியேக வாசகசாலை வெளியீடாக அதில் 10,000 பிரதிகளுக்கு ஒப்பந்தம் செய்து விடவேண்டும். இப்படி ஒரே விதமான புத்தகங்களாக எல்லா நூலகங்களுக்கும் கொடுப்பதால் நாடெங்கும் சாதாரணப் படிப்புள்ள ஜனங்கள் முன்னேறுவதற்குப் பயனளிப்பதுடன், தனி விற்பனைப் பிரதிகளின் விலையையும் குறைத்து யாவரும் வாங்கும்படி செய்ய முடியும்.

சர்க்காரின் இந்த உதவி ஏற்படாவிடின் புத்தகங்களின் விலை குறையாது. விலை குறையாவிட்டால் ஜனங்களும், வாசகசாலைகளும் அப்புத்தகங்களை வாங்க இயலாது. வெளியிடுவோரும் நஷ்டமடைவார்கள். எழுத்தாளர்களைப்பற்றிக் கூற வேண்டியதில்லை. ஒன்று புத்தகம் எழுதுவதை நிறுத்தி வேறு ஏதாவது தொழிலுக்குப் போக வேண்டும். இல்லாவிடில் தங்களை நிராதரவாக்கிய சமூகத்தினரை வஞ்சம் தீர்க்கும் வகையில் ஆபாசக் கதைகளை மலிவுப் பிரசுரங்களாகத் தீட்டிப் பணம் திரட்ட முயற்சிக்க வேண்டும்.

''வாளை விடப் பலம் கொண்டது பேனா,'' என்பது யாவரு மறிந்ததே. அந்தப் பேனாவின் பலத்தை நல்ல முறையில் அறிவைப் பெருக்கவும், நாடு முன்னேறவும் உபயோகமாக்க வேண்டுமென்று சர்க்கார் நினைத்தால் உடனே எழுத்தாளர் சங்கத்தின் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஜனத்தொகைக்கு மேலுள்ள கிராமங்களில் ஏற்கெனவே பொது வாசகசாலையில்லாவிட்டாலும், உடனடியாக ஏற்பாடு செய்ய அந்தந்த ஊர் பஞ்சாயத்து போர்டுகளுக்கு உத்தரவு பிறப்பித்து, புத்தகங்களை அனுப்பத் திட்டமொன்றும் வகுக்க வேண்டும். வயது வந்தோருக்கு ஓட்டுரிமை அளிப்பதுடன் மாத்திரம் திருப்தி அடைந்து விட முடியாது. வயது வந்தோர் அனைவரும் தங்கள் ஓட்டைத் தாங்களாகவே நிர்ணயித்து வாக்களிக்கும் ஆற்றல் கொண்டவர்களாகச் செய்வதும் நம் சர்க்காரின் பொறுப்பாகும்.

ஏற்கெனவே வாசகசாலைகள் நடத்தி வரும் நிர்வாகிகள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவளித்துச் சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். வாசகசாலை இல்லாத ஊரிலுள்ள ஜனங்கள் உடனடியாக தங்கள் ஊர்களில் வாசகசாலை திறப்பதற்கும், சர்க்காரிடமிருந்து புத்தக மான்யங்கள் கிடைப்பதற்கும், தங்கள் ஊர் பஞ்சாயத்து போர்டுகள் மூலமாக முயற்சிக்க வேண்டும். முக்கியமாக சட்ட சபை மெம்பர்கள் இவ்விஷயத்தில் சற்று கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் முயன்றால் நம் ராஜதானி எங்கும் மூன்றே மாதங்களில் ஆயிரக் கணக்கான வாசகசாலைகள் திறப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து அடுத்த கூட்டத்திலேயே அங்குரார்ப்பணம் செய்து விடலாமே!

30. வாலஜாரோடு,
சென்னை.

டி. எஸ். இராமநாதன்
(காரியதரிசி, சிவன் ஞாபகார்த்த சங்கம்)

கல்கி
(வாரப் பதிப்பு)
சந்தா விவரம்

	ஒரு வருஷம்	ஆறு மாதம்
இந்தியா சிலோன்	ரூ. 13-0-0	6-8-0
பர்மா மலேயா வெளிநாடு	ரூ. 14-10-0	7-5-0

குறிப்பு:—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவுசெய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையை செலுத்தலாம்.

சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை



2

வீட்டு முன் கூடத்தில் ஒரு தகர விளக்கு அவ்விடத்தைக் கோவிலின் கர்ப்பக் கிருகமாக்கியது. அதற்கு அந்தப் புறத்தில் நீண்டு இருண்டு கிடக்கும் பட்டகசாலை. அதற்கப்புறம் என்னவோ! ஒரு குழந்தை, அதற்கு நாலு வயசு இருக்கும். மனசிலே இன்பம் பாய்ச்சும் அழகு. கண்ணிலே எப்பொழுது பார்த்தாலும் காரணமற்ற சந்தோஷம். பழைய காலத்து ஆசாரப்படி உச்சியில் குறுக்காக வகிடு எடுத்து முன்னும் பின்னுமாகப் பின்னிய எலி வால் சடை வாலை வளைத்துக் கொண்டு நின்றது. முன்புறம் சடையைக் கட்டிய வாழைநார், கடமையில் வழுவித் தொங்கி, குழந்தை குனியும்போதெல்லாம் அதன் கண்ணில் விழுந்து தொந்தரவு கொடுத்தது. குழந்தையின் கையில் ஒரு கரித் துண்டும், ஓர் ஓட்டுத் துண்டும் இருந்தன. இடையில் முழங்காலைக் காட்டிக் கொண்டிருக்கும் சிற்றாடை. குனிந்து தரையில் கோடு போட முயன்று, வாழைநார் கண்ணில் விழுந்ததனால் நிமிர்ந்து நின்றுகொண்டு, இரண்டு கைகளாலும் வாழை நாரைப் பிடித்துப் பலம் கொண்ட மட்டும் இழுத்தது. அதன் முயற்சி பலிக்கவில்லை. வலித்தது. அழுவோமா, அல்லது இன்னும் ஒரு தடவை இழுத்துப் பார்ப்போமா என்று அது தர்க்கித்துக் கொண்டிருக்கும் போது அப்பா உள்ளே நுழைந்தார்.

"அப்பா!" என்ற கூச்சலுடன் கந்தசாமிப் பிள்ளையின் காலைக் கட்டிக் கொண்டது. அண்ணாந்து பார்த்து, "எனக்கு என்ன கொண்டாந்தே!" என்று கேட்டது.

"என்னைத்தான் கொண்டாந்தேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னப்பா, தினம் தினம் உன்னியேத் தானே கொண்டாரே; பொரி கடலையாவது கொண்டாரப் படாது!" என்று சிணுங்கியது குழந்தை.

"பொரி கடலை உடம்புக்காகாது; இதோ பார், உனக்கு ஒரு தாத்தாவைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இதுதான் உம்முடைய குழந்தையோ!" என்று கேட்டார் கடவுள். குழந்தையின் பேரில் விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு.

கந்தசாமிப்பிள்ளை சற்றுத் தயங்கினார்.

"சும்மா சொல்லும்; இப்பொழுதெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல் தான் பிடிக்கும். பால், தயிர்கூடச் சேர்த்துக் கொள்ளுவதில்லை" என்று சிரித்தார் கடவுள்.

"ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இப்படி உட்காருங்கள்; இப்போ குழாயிலே தண்ணீர் வராது; குடத்திலே எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று உள்ளே இருட்டில் மறைந்தார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் துண்டை உதறிப் போட்டுவிட்டுக் கூடத்தில் உட்கார்ந்தார்.

மனசிலே ஒரு துறுதுறுப்பும் எல்லையற்ற நிம்மதியும் இருந்தன.

"வாடியம்மா கருவேப்பிலைக் கொழுந்தே!" என்று கைகளை நீட்டினார் கடவுள்.

ஒரே குதியில் அவருடைய மடியில் வந்து ஏறிக் கொண்டது குழந்தை.

"எம்பேரு கருவப்பிலைக் கொளுந்தில்லெ; வள்ளி. அப்பா மாத்திரம் என்னெக் கறுப்பி கறுப்பின்னு கூப்பிடுதா; நான் என்ன அப்பிடியா!" என்று கேட்டது.

அது பதிலை எதிர்பார்க்கவில்லை. அதன் கண்களுக்குத் தாத்தாவின் கண்டத்தில் இருந்த கறுப்பு மறுத் தென்பட்டது.

"அதென்ன தாத்தா, கன்னங் கரேலுன்னு நவ்வாப் பழம் மாதிரி கழுத்திலே இருக்கு! அதைக் கடிச்சுத் திங்கணும் போலே இருக்கு" என்று கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசிக் கொண்டு மடியில் எழுந்து நின்று, கழுத்தில் பூப்போன்ற உதடுகளை வைத்து அழுத்தியது. இளம்பல் கழுத்தில் ஈறுஈறுத்தது. கடவுள் உடலை குறுகுறுத்தது.

"கூச்சமா இருக்கு" என்று உடம்பை நெளித்தார் கடவுள்.

"என் தாத்தா, கழுத்திலே நெருப்பு இருப்புப் பட்டுப் பொத்துப் போச்சா! எனக்கும் இந்தா பாரு" என்று தன் விரல் நுனியில் கன்றிக் கறுத்துப்போன கொப்புளத்தைக் காட்டியது.

"பாப்பா, அது நாகப்பழந்தாண்டி யம்மா; மூந்தி ஒரு தரம் எல்லாரும் கொடுத்தாளேன்னு வாங்கி வாயிலே போட்டுக் கொண்டேன். எனக்குப் பங்கில்லியான்னு கழுத்தைப் புடிச்சுப் புட்டாங்க. அதிலே இருந்து அது அங்கியே சிக்கிக்கிச்சு; அது கெடக்கட்டும். உனக்கு விளையாடத் தோழிப் பிள்ளைகள் இல்லியா!" என்று கேட்டார் கடவுள்.

"வட்டும் கரித்துண்டும் இருக்கே; நீ வட்டாட வருறியா!" என்று கூப்பிட்டது.

குழந்தையும் கடவுளும் வட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஒற்றைக் காலை மடக்கிக் கொண்டே கொண்டியடித்து ஒரு தாவுத்தாவினார் கடவுள்.

"தாத்தா! தோத்துப் போனியே" என்று கை கொட்டிச் சிரித்தது குழந்தை.

"ஏன்!" என்று கேட்டார் கடவுள்.

கால் கரிக்கோட்டில் பட்டு விட்டதாம்.

"மூந்தியே சொல்லப்படாதா!" என்றார் கடவுள்.

"ஆட்டம் தெரியாமே ஆட வரலாமா!" என்று கையை மடக்கிக் கொண்டு கேட்டது குழந்தை.

அந்தச் சமயத்தில் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை முன்னே வர, ஸ்ரீமதி, பின்னே குடமும் இடுப்புமாக இருட்டிலிருந்து வெளிப்பட்டார்கள்.

"இவுங்கதான் கைலாசவரத்துப் பெரியப்பா; கரிசங்கொளத்துப் பொண்ணை இவுங்களுக்கு ஒண்ணுவிட்ட அண்ணாச்சி மகனுக்குத்தான் கொடுத்திருக்கு. தெரியாதா!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னமோ தேசாந்திரியாகப் போயிட்டதாகச் சொல்லுவாங்களே, அந்த மாமாவா! வாருங்க மாமா, சேவிக்கிறேன்" என்று குடத்தை இறக்கி வைத்துவிட்டு விழுந்து நமஸ்கரித்தாள். காது நிறைந்த பழங்காலப் பாம்படம் கன்னத்தில் இடிபட்டது.

"பத்தும் பெருக்கமுமாகச் சுகமாக வாழ வேணும்" என்று ஆசிர்வதித்தார் கடவுள்.

காந்திமதி அம்மையாருக்கு (அதுதான் கந்தசாமிப் பிள்ளை மனைவியின் பெயர்) என்றும் அநுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டது. மனமும் குளிர்ந்தது. கண்ணும் நனைந்தது.

"வாசலில் இருக்கற அரிசி மூட்டையை அப்படியே போட்டு வச்சிருந்தா!" என்று ஞாபக மூட்டினார் கடவுள்.

"இவுகளுக்கு மறதிதான் சொல்லி முடியாது. அரிசி வாங்கியாச்சான்னு இப்பந்தான் கேட்டேன். இல்லேன்னு சொன்னாக; வைத்தியரைக் கேட்டா மருந்து கொடுக்காக; இவுக மறதிக்குத் தான் மருந்தைக் காங்கலெ. படெச்ச கடவுள் தான் பக்கத்திலே நின்னுதான் பார்க்கணும்" என்றாள் காந்திமதி அம்மாள்.

"பாத்துக் கிட்டுத்தான் நிக்காறே" என்றார் கடவுள் இரகசியமாக.

"பாத்துச் சிரிக்கணும்; அப்பந்தான் புத்தி வரும்" என்றாள் அம்மையார்.

கடவுள் சிரித்தார்.

கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் வாசலுக்குப் போனார்கள்.

"இந்தச் செப்பிடுவித்தை எல்லாம் கூடாது என்று சொன்னேனே!" என்றார் பிள்ளை காதோடு காதாக.

"இனிமேல் இல்லே" என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை மூக்கி முனகிப் பார்த்தார்; மூட்டை அசையவே இல்லே.

"நல்ல இளவட்டம்!" என்று சிரித்துக் கொண்டே மூட்டையை இடுப்பில் இடுக்கிக் கொண்டார் கடவுள்.

"நீங்க எடுக்கதாவது; உங்களைத்தானே. ஒரு பக்கமாகத் தாங்கிப் பிடியுங்க; சும்மா பாத்துக்கிட்டே நிக்கியளே!" என்று பதைத்தாள் காந்திமதியம்மாள்.

"சீ சும்மா இரம்மா; எங்கே போடணும்னு சொல்லுதே!" என்றார் கடவுள்.

"இந்தக் கூடத்திலேயே கெடக்கட்டும்; நீங்க இங்கே சும்மா வச்சிருங்க" என்று வழி மறித்தாள் காந்திமதியம்மாள்.

கந்தசாமிப் பிள்ளையும் கடவுளும் சாப்பிட்டுவிட்டு வாசல் திண்ணைக்கு வரும் பொழுது இரவு மணி பதினொன்று.

"இனி மேல் என்ன யோசனை!" என்றார் கடவுள்.

"தூங்கத்தான்" என்றார் பிள்ளை, கொட்டாவி விட்டுக் கொண்டே.

"தாத்தா, நானும் ஒங் கூடத்தான் படுத்துக்குவேன்" என்று ஓடி வந்தது குழந்தை.

"நீ அம்மையெக் கூப்பிட்டுப் பாயும் தலையணையும் எடுத்துப் போடச் சொல்லு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னேயுமா தூங்கச் சொல்லுகிறீர்!" என்று கேட்டார் கடவுள்.



"மனுஷாள் கூடப் பழகினால் அவர்களைப் போலத்தான் நடக்கணும்; தூங்க இஷ்டமில்லை என்றால், பேசாமல் படுத்துக் கொண்டிருங்கள். ராத்திரியில் நடமாடினால் அபவாதத்துக்கு இடமாகும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.



3

கந்தசாமிப்பிள்ளை பவழக்காரத் தெரு சித்தாந்த தீபிகை ஆபீஸில் தரையில் உட்கார்ந்து கொண்டு பதவுரை எழுதிக் கொண்டிருக்கிறார். போகர் நூலுக்கு விளக்கவுரை பிள்ளையவர்கள் பத்திரிகையில் மாதா மாதம் தொடர்ச்சியாகப் பிரசுரமாகி வருகிறது.

"ஆச்சப்பா இன்னமொன்று சொல்லக் கேளு, அப்பனே வயமான செங்கரும்பு, காசிய வெள்ளீருடனே கருடப் பிச்சு, கல்லுருவி, புல்லுருவி, நல்லூமத்தை (கருடப் பச்சை என்றும் பாடம்)......" என்று எழுதி விட்டு, வாசல் வழியாகப் போகும் தபால்காரன் உள்ளே நுழையாமல் நேராகப் போவதைப் பார்த்து விட்டு, "இன்றைக்கும் பத்திரிகை போகாது" என்று முனகியபடி, எழுதியதைச் சுருட்டி மூலையில் வைத்து விட்டு விரல்களைச் சொடுக்கு முறித்துக் கொண்டார்.

வாசலில் ரிக்ஷா வந்து நின்றது. கடவுளும் குழந்தையும் வந்து இறங்கினார்கள். வள்ளியின் இடுப்பில் பட்டுச் சிற்றாடை; கை நிறைய மிட்டாய்ப் பொட்டலம்.

"தாத்தாவும் நானும் செத்த காலேஜ் உசிர் காலேஜெல்லாம் பார்த்தோம்" என்று துள்ளியது குழந்தை.

"எதற்காக ஓய், ஒரு கட்டடத்தைக் கட்டி எலும்பையும் தோலையும் பொதிந்து பொதிந்து வைத்திருக்கிறது! என்னைக் கேலி செய்ய வேண்டும் என்ற நினைப்போ!" என்று கேட்டார் கடவுள். குரலில் கடுகடுப்புத் தொனித்தது.

"அவ்வளவு ஞானத்தோடே இங்கே யாரும் செய்து விடுவார்களா! சிருஷ்டியின் அபூர்வத்தைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டுதான் அதை எல்லாம் அப்படி வைத்திருக்கிறார்கள். அது கிடக்கட்டும்; நீங்க இப்படி ஓர் இருபத்தைந்து ரூபாய் கொடுங்கள்; உங்களை ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்து விடுகிறேன்; இன்று பத்திரிகை போய் ஆகவேணும்" என்று கையை நீட்டினார் பிள்ளை.

"இது யாரை ஏமாற்ற! யார் நன்மைக்கு!" என்று சிரித்தார் கடவுள்.

"தானம் வாங்கவும் பிரியமில்லை; கடன் வாங்கும் யோசனையும் இல்லை; அதனால்தான் வியாபாரார்த்தமாக இருக்கட்டும் என்கிறேன். நன்மையைப் பற்றிப் பிரமாதமாகப் பேசி விட்டீர்களே! இந்தப் பூலோகத்திலே நெய் முதல் நல்லெண்ணெய் வரையில் எல்லாம் கலப்படந்தான். இது உங்களுக்குத் தெரியாதா!" என்று ஒரு போடு போட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் யோசனையில் ஆழ்ந்தார்.

"அதிருக்கட்டும், போகரிலே சொல்லியிருக்கிறதே, கருடப் பச்சை; அப்படி ஒரு மூலிகை உண்டா! அல்லது கருடப்பிச்சுதானா!" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

"பிறப்பித்த பொறுப்புதான் எனக்கு: பெயரிட்ட பழியையும் என் மேலே போடுகிறீரே, இது நியாயமா! நான் என்னத்தைக் கண்டேன்! உம்மை உண்டாக்கினேன்; உமக்குக் கந்தசாமிப் பிள்ளை யென்று உங்க அப்பா பெயர் இட்டார்; அதற்கும் நான்தான் பழியா!" என்று வாயை மடக்கினார் கடவுள்.

"நீங்கள் இரண்டு பேரும் வெயிலில் அலைந்து விட்டு வந்தது கோபத்தை எழுப்புகிறது போலிருக்கிறது. அதற்காக என்னை மிரட்டி மடக்கி விட்டதாக நினைத்துக் கொள்ள வேண்டாம்; அவசரத்தில் திடுதிப்பென்று சாபம் கொடுத்தீரானால், இருபத்தைந்து ரூபாய் வீணாக நஷ்டமாய்ப் போகுமே என்பதுதான் என் கவலை" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

பொட்டலத்தை அவிழ்த்துத் தின்று கொண்டிருந்த குழந்தை, "என் தாத்தா அப்பா கிட்டப் பேசாதே! அவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது; இதைத் தின்னு பாரு, இனிச்சுக் கெடக்கு" என்று கடவுளை அழைத்தது.

குழந்தை கொடுக்கும் லட்டுத் துண்டுகளைச் சாப்பிட்டுக் கொண்டே, "பாப்பா, உதிர்ந்தது எனக்கு, முழுசு உனக்கு!" என்றார் கடவுள்.

குழந்தை ஒரு லட்டை எடுத்துச் சற்று நேரம் கையில் வைத்துக் கொண்டே யோசித்தது.

"தாத்தா, முழுசை வாய்க்குள்ளே கொள்ளாதே. உதுந்தா உனக்குன்னு சொல்லுறியே.

அப்போ எனக்கு இல்லையா!'' என்று கேட்டது குழந்தை.

கடவுள் விழுந்து விழுந்து சிரித்தார். ''அவ்வளவும் உனக்கே உனக்குத்தான்'' என்றார்.

''அவ்வளவுமா! எனக்கா!'' என்று கேட்டது குழந்தை.

''ஆமாம். உனக்கே உனக்கு'' என்றார் கடவுள்.

''அப்புறம் பசிக்காதே! சாப்பிடாட்டா அம்மா அடிப்பாங்களே! அப்பா வேலியும் குடுப்பாங்களே!'' என்று கவலைப்பட்டது குழந்தை.

''பசிக்கும். பயப்படாதே!'' என்றார் கடவுள்.

''தாங்கள் வாங்கிக் கொடுத்திருந்தாலும், அது ஹோட்டல் பட்சணம். ஞாபகம் இருக்கட்டும்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''நான்தான் இருக்கிறேனே!'' என்றார் கடவுள்.

''நீங்கள் இல்லையென்று நான் எப்பொழுது சொன்னேன்!'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

சில விநாடிகள் பொறுத்து, ''இன்றைச் செலவு போக, அந்த நூறு ரூபாயில் எவ்வளவு மீச்சம்!'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''உமக்கு ரூபாய் இருபத்தைந்து போகக் கையில் ஐம்பது இருக்கிறது'' என்று சிரித்தார் கடவுள்.

''அதற்குப் பிறகு என்ன யோசனை!''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

''என்னைப்போல வைத்தியம் செய்யலாமே!''

''உம்முடன் போட்டி போட நமக்கு இஷ்டம் இல்லை.''

''அப்படி நினைத்துக் கொள்ள வேண்டாம். என்னோடே போட்டி போடலலே; லோகத்து மூட்டாள் தனத்தோடே போட்டி போடுகிறீர்கள்; பிரியமில்லை என்றால், சித்தாந்த உபந்நியாசங்கள் செய்யலாமே!''

''நீர் எனக்குப் பிழைக்கிறதற்கா வழி சொல்லுகிறீர்;—அதில் துட்டு வருமா!'' என்று சிரித்தார் கடவுள்.

''அப்போ!''

''எனக்குத்தான் கூத்து ஆட நன்றாக வருமே: என்ன சொல்லுகிறீர்! தேவியை வேண்டுமானாலும் தருவிக்கிறேன்.''

கந்தசாமிப் பிள்ளை சிறிது யோசித்தார். ''எனக்கு என்னவோ பிரியமில்லை!'' என்றார்.

''பிறகு பிழைக்கிற வழி! என்னங்காணும், பிரபஞ்சமே எங்கள் ஆட்டத்தை வைத்துத் தானே பிழைக்கிறது!''

''உங்கள் இஷ்டம்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கந்தசாமிப் பிள்ளை மறுபடியும் சிறிது நேரம் சிரித்தார். ''வாருங்கள், போவோம்'' என்று ஆணியில் கிடந்த மேல் வேட்டியை எடுத்து உதறிப் போட்டுக் கொண்டார்.

''குழந்தை!'' என்றார் கடவுள்.

''அதுதான் உறங்குகிறதே; வருகிற வரை விழும் உறங்கட்டும்'' என்றார் பிள்ளை.

கால்மணிப் போது கழித்து மூன்று பேர் திவான்பகதூர் பிருகதீசுவர சாஸ்திரிகள் பங்களாவுக்குள் நுழைந்தனர். ஒருவர் கந்தசாமிப் பிள்ளை; மற்றொருவர் கடவுள்; மூன்றாவது பெண்;—தேவி.

''நான் இவருக்குத் தங்கபஸ்பம் செய்து கொடுத்து வருகிறேன். நான் சொன்னால் கேட்பார்'' என்று விளக்கிக்கொண்டே முன் வராந்தாப் படிக்கட்டுகளில் ஏறினார் பிள்ளை; இருவரும் பின்தொடர்ந்தனர். தேவியின் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது.

''சாமி இருக்காங்களா; நான் வந்திருக்கேன் என்று சொல்லு'' என்று அதிகாரத்தோடு வேலைக்காரனிடம் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை.

''பிள்ளையவர்களா! வரவேணும், வரவேணும்; பஸ்பம் நேத்தோடே தீர்ந்து போச்சே; உங்களைக் காணவில்லையே என்று கவலைப்பட்டேன்'' என்ற கலகலத்த பேச்சுடன் வெம்பிய சரீரமும், மல் வேஷ்டியும், தங்க விளிம்புக் கண்ணாடியுமாக ஒரு திவான்பகதூர் ஓடி வந்தது. எல்லோரையும் கும்பிட்டுக் கொண்டே அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது.

''உட்காருங்கள், உட்காருங்கள்'' என்றார் திவான்பகதூர்.

கந்தசாமிப் பிள்ளை அவரது நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டே, ''பரவாயில்லை; சாயங்காலம் பஸ்பத்தை அனுப்பி வைக்கிறேன்; நான் இவாளை உங்களுக்குப் பரிசயம் பண்ணி வைக்க. இவாள் இரண்டு பேரும் நாட்டிய சாஸ்திர சாகரம்; உங்கள் சிருத்திய கலா மண்டலியில், வசதி பண்ணினா சௌகரியமாக இருக்கும்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

திவான் பகதூரின் உற்சாகம் எல்லாம் ஆமையின் காலும் தலையும்போல் உள் வாங்கின. கைகளை குவித்து, ஆள்காட்டி விரல்களையும் கட்டை விரல்களையும் முறையே மூக்கிலும் மோவாய்க் கட்டையிலுமாக வைத்துக்கொண்டு ''உம்'', ''உம்'' என்று தலையை அசைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''இவர் பெயர் கூத்தனார்; இந்த அம்மாளின் பெயர் பார்வதி. இருவரும் தம்பதிகள்'' என்று உறவைச் சற்று விளக்கி வைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

''நான் கேள்விப்பட்டதே இல்லை; இதற்கு முன் நீங்கள் எங்கேயாவது ஆடியிருக்கிறீர்களா!'' என்று தேவியைப் பார்த்துக் கூத்தனாரிடம் திவான் பகதூர் கேட்டார்.

கடவுளுக்கு வாய் திறக்கச் சந்தர்ப்பம் கொடுக்காமல், ''நாங்கள் ஆடாத இடம் இல்லை'' என்றாள் தேவி.

''என்னவோ என் கண்ணில் படவில்லை. இருக்கட்டும்; அம்மா ரொம்பக் கறுப்பா இருக்காங்களே, சபையிலே சோபிக்காதே என்று தான் யோசிக்கிறேன்'' என்றார் வர்ண பேத திவான் பகதூர்.

''பெண் பார்க்க வந்தீரா, அல்லது நாட்டியம் பார்க்கிறதாக யோசனையோ!'' என்று கேட்டாள் தேவி.

''அம்மா, கோபிக்கக் கூடாது. ஒன்று சொல்லுகிறேன் கேளுங்க: கலைக்கும் கறுப்புக்கும் காணுயுக்கு மேலே சம்பந்தமே கிடையாது. நானும் முப்பது வருஷமா இந்தக் கலா மண்டலியிலே பிரெஸிடெண்டாக இருந்து வருகிறேன். சபைக்கு வந்தவர்கள் எல்லாருக்கும் கண்கள்தான் கறுத்திருக்கும்.''

"உம்ம மண்டையுமாச்சு, கண்டெலியுமாச்சு!" என்று தேவி எழுந்திருந்தாள்.

"இப்படிக் கோவிக்கக்கப்படாது" என்று ஏக காலத்தில் இவான் பகதூரும் கந்தசாமிப் பிள்ளையும் எழுந்திருந்தார்கள்.

"இவர்கள் புதுப் புதுப் பாணியிலே காட்டிய மாடுவார்கள். அந்தமாதிரி இந்தப் பக்கத்திலேயே பார்த்திருக்க முடியாது. சாஸ்திரம் இவர்களிடம் பிச்சை வாங்க வேணும். ஒரு முறைதான் சற்றுப் பாருங்களேன்" என்று மீண்டும் சிபார்சு செய்தார் கந்தசாமிப் பிள்ளை.

"சரி, பார்க்கிறது; பார்க்கிறதுக்கு என்ன ஆட்சேபம்!" என்று சொல்லிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். "சரி, நடக்கட்டும்!" என்று சொல்லி இமைகளை மூடினார்.

"எங்கே இடம் விசாலமாக இருக்கும்!" என்று தேவி எழுந்து நின்று பார்த்தாள்.

"அந்த நடு ஹாலுக்குள்ளேயே போவோமே" என்றார் கடவுள்.

"சரி" என்று உள்ளே போய்க் கதவைச் சார்த்திக் கொண்டார்கள்.

சில விநாடிகளுக்கெல்லாம் உள்ளிருந்து கணீரென்று கம்பீரமான குரலில் இசை எழுந்தது.

"மயான ருத்திரனும்—இவன்
மயான ருத்திரனும்!........."

கதவுகள் திறந்தன.

கடவுள் புலித்தோலுடையும், திரிசூலமும், பாம்பும், கங்கையும், சடையும், பின்னிப் புரள கண் மூடிச் சிலையாக நின்றிருந்தார்.

மறுபடியும் இசை. மின்னலைச் சிக்கலெடுத்து உதறியது போல, ஒரு வெட்டு வெட்டித் திரும்புகையில், கடவுள் கையில் சூலம் மின்னிக் குதித்தது; கண்களில் வெறியும், உதட்டில் சிரிப்பும் புரண்டோட, காலைத் தூக்கினார்.

கந்தசாமிப் பிள்ளைக்கு நெஞ்சில் உதைப்பு எடுத்துக் கொண்டது. கடவுள் கொடுத்த வாக்கை மறந்து விட்டார் என்று பதறினார்.

"ஓய் கூத்தனாரே, உம் கூத்தைக் கொஞ்சம் நிறுத்தும்."

"சட்! வெறும் தெருக் கூத்தாக இருக்கு; என்னாங்காணும், போர்னியோ காட்டு பிராண்டி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு" என்று அதட்டினார் இவான் பகதூர்.

ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்தி, சூலத்தில் சாய்ந்தபடி நின்றார் கடவுள்.

"ஓய்! கலைன்னா என்னன்னு தெரியுமாங்காணும்! புலித் தோலைத்தான் கட்டிக் கொண்டீரே. பாம்புன்னா பாம்பையா புடிச்சுக் கொண்டு வருவா! பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக் கொள்ள வேணும்; புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக் கொள்ள வேணும். கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங் காணும்! வாஸ்தவமாகப் பார்வதி பரமேசுவராளே இப்படி ஆடினாலும் இது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதிலே இப்படிச் சொல்லலே. முதல்லே அந்த பாம்புகளை யெல்லாம் பத்திரமாகப் புடிச்சுக் கூடையிலே வச்சுப்புட்டு வேஷத்தைக் கலையும். இது சிறுசுகள் நடமாடற இடம், ஜாக்கிரதை!" என்றார் இவான்பகதூர்.

ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளையையும் அவர் லேசில் விட்டு விடவில்லை. "கந்தசாமிப் பிள்ளைவாள்,



ஒருவர்:—ஒரு கோட்டு தைத்துத் தருவதற்கு இருபது நாள் ஆகும் என்கிறீர்களே! கடவுள் இந்த உலகத்தையே ஆறு நாளில் சிருஷ்டித்து விட்டாராம்!

தையற்காரர்:—ஆமாம். அந்த உலகம் இப்பொழுது எவ்வளவு மோசமாக ஆகிவிட்டது, பார்த்தீர்களா? அவசரப்பட்டால் பின்னாலே அப்படித்தான் போய்விடும்!

நீர் ஏதோ மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறீர் என்பதற்காக இந்தக் கூத்துப் பார்க்க முடியாது; கச்சேரியும் வைக்க முடியாது; அப்புறம் நாலு பேரோடே தெருவிலே நான் நடமாட வாண்டாம்!"

கால்மணி நேரங் கழித்துச் சித்த வைத்திய தீபிகை ஆபீசில் இரண்டுபேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், தேவியைத் தவிர. குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு பேரும் மௌனமாக இருந்தார்கள்.

"தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாதுபோல இருக்கே!" என்றார் கடவுள்.

"நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை; உங்களுக்குப் பிடித்தது லோகத்துக்குப் பிடிக்கவில்லை;—வேணும் என்றால் தேவாரப் பாடசாலை நடத்துவதுதானே!"

கடவுள், "ச்சு" என்று நாக்கைச் சூள் கொட்டினார்.

"அதுக்குள்ளேயே பூலோகம் புளிச்சுப் போச்சோ!"

"உம்மைப் பார்த்தால் உலகத்தைப் பார்த்தது போல்" என்றார் கடவுள்.

"உங்களைப் பார்த்தாலோ!" என்று சிரித்தார் கந்தசாமிப் பிள்ளை.

"உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது" என்றார் கடவுள்.

"உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாயக்கு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

அவருக்குப் பதில் சொல்ல யாரும் இல்லை.

மேஜையின் மேல் ஜீவிய சந்தா ரூபாய் இருபத்தைந்து நோட்டாகக் கிடந்தது.

"கைலாசபுரம் பழைய பரமசிவம் பிள்ளை, ஜீவிய சந்தா வரவு ரூபாய் இருபத்தைந்து" என்று கணக்கில் பதிந்தார் கந்தசாமிப் பிள்ளை.

"தாத்தா ஊருக்குப் போயாச்சா, அப்பா!" என்று கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தது குழந்தை.

(கலைமகள் காரியாலய பிரசுரமான "காஞ்சனை" என்னும் புத்தகத்திலிருந்து எடுத்துப் பிரசுரித்தது.)



பூர்வ கதை

இராஜராஜ சோழன் என்று சரித்திரத்தில் பிரசித்திபெற்ற அருள்மொழி வர்மனின் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை அரண்மனையில் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அருள்மொழி வர்மன் ஈழநாட்டில் சோழப் படைகளுக்குத் தலைமை வகித்துப் போர் நடத்தி வந்தான். சுந்தர சோழரின் மூத்த புதல்வனை ஆதித்த கரிகாலன் காஞ்சியில் இருந்தான். அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று அவனுக்கு முன்னமே இளவரசுப் பட்டம் கட்டியிருந்தது.

சுந்தர சோழரின் பெரிய தந்தை சிவஞான கண்டராதித்தருக்கு மதுராந்தகன் என்று ஒரு குமாரன் இருந்தான். சுந்தர சோழருக்குப் பிறகு மதுராந்தகனே பட்டத்துக்கு வரவேண்டுமென்று சோழ சாம்ராஜ்யத்தில் செல்வாக்குள்ள பிரமுகர்கள் சிலர் கருதி அதற்கான பிரயத்தனமும் தொடங்கியிருந்தார்கள்.

தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர், தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர், கடம்பூர் செங்கண்ணன் சம்புவரையர், மழபாடி மழவரையர் முதலிய சிற்றரசர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் மேற்கூறிய பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழ சக்கரவர்த்தி காஞ்சிக்கு வந்து அப்பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று தந்தைக்கு ஓலை அனுப்பினான். இளவரசனின் ஓலையை எடுத்துக் கொண்டு வல்லவரையன் வந்தியத் தேவன் என்னும் இளம் வீரன் தஞ்சைக்குப் புறப்பட்டான். வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஓரிரவு தங்கியபோது ஆதித்த கரிகாலனுக்கு எதிரான சதியைப் பற்றித் தெரிந்து கொண்டான். சதியில் ஈடுபட்டிருந்த சம்புவரையரின் குமாரன் கந்தமாறன், வந்தியத் தேவனுடைய பழைய நண்பன்.

கடம்பூருக்கு அருகில் வீரநாராயண புரத்தில் ஆழ்வார்க்கடியான் நம்பி என்ற வீர வைஷ்ணவனை வல்லவரையன் சந்தித்தான். சம்புவரையர் மாளிகையில் நடந்த சதியாலோசனைக் கூட்டத்தை அந்த வீர வைஷ்ணவன் மதிள் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததை வந்தியத் தேவன் பார்த்தான்.

பெரிய பழுவேட்டரையர் முதிய வயதில் நந்தினி என்னும் இளம் பெண்ணை மணம் புரிந்து கொண்டிருந்தார். அவளைப் பற்றி முதலில் ஆழ்வார்க்கடியான் மூலமாக வல்லவரையன் தெரிந்து கொண்டான். தஞ்சைக் கோட்டைக் கருகில் அவளைப் பார்த்தான். அவள் கொடுத்த பழுவூர் முத்திரை மோதிரத்தின் உதவியால் கோட்டைக்குள் புகுந்தான். சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சந்தித்து ஆதித்த கரிகாலரின்



ஓலையைக் கொடுத்தான். சதியாலோசனையைப் பற்றி அரசரிடம் தெரிவிக்க முயன்றும் முடியவில்லை. சின்னப் பழுவேட்டரையர் அவன் மீது சந்தேகங்கொண்டு காவலில் வைத்தார். தஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பித்துச் செல்ல வந்தியத்தேவன் முயன்ற போது பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் புகுந்தான். அதே சமயத்தில் அந்த நிலவறை வழியாகக் கந்தமாறன் மதுராந்தகனைப் பழுவூர் அரண்மனையில் சேர்த்துவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தான். சுரங்க வழியின் காவலன் கந்தமாறனுடைய முதுகில் குத்தியதைக் கண்டு வந்தியத்தேவன் அவனைக் காப்பாற்றிக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்தான். ஆனால் கந்தமாறனோ தன்னை முதுகில் குத்தியவன் தன் நண்பனாகிய வந்தியத் தேவனே என்ற எண்ணத்தில் இருந்தான்.

தஞ்சைக் கோட்டையிலிருந்து வந்தியத் தேவன் குடந்தைக் கருகிலிருந்த பழையாறை நகருக்குச் சென்றான். சோழர்களின் இந்தப் பழைய தலைநகரில் சுந்தர சோழரின் அருமைப் புதல்வியாகிய குந்தவைப் பிராட்டியும், சிவஞான கண்டராதித்தரின் மனைவியாகிய செம்பியன்மாதேவியும், மற்றும் பல அரண்மனைப் பெண்டிரும் இருந்தனர். ஆதித்த கரிகாலன் குந்தவை தேவிக்கும் ஓர் ஓலை கொடுத்து அனுப்பி அவள் ஏவிய பணியைச் செய்யுமாறு வந்தியத் தேவனுக்குக் கட்டளையிட்டிருந்தான். வழியில் குடந்தை சோதிடர் வீட்டிலும் அரசிலாற்றங் கரையிலும் குந்தவையை வந்தியத் தேவன் சந்தித்து அவளுக்குத் தன் இளம் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்தான். சோழ குலத்து இளவரசி அவள் தான் என்று அறிந்து அடங்கா வியப்பு அடைந்தான். அவள் பணித்தால் ஏழு கடலையும் கடந்து சென்று எந்தக் காரியத்தையும் முடித்து வர வந்தியத் தேவன் ஆயத்தமாயிருந்தான். குந்தவை தேவி ஒரே ஒரு கடலைத் தாண்டும்படியே அவனுக்குப் பணித்தாள்! இலங்கையில் இருந்த தன் இளைய சகோதரனாகிய அருள்மொழிவர்மனுக்கு ஓர் ஓலை கொடுத்து அனுப்பினாள். "பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்" என்று அந்த ஓலையில் எழுதியிருந்தது.

ஓலையை எடுத்துக் கொண்டு வந்தியத் தேவன் கோடிக் கரையை அடைந்தான். அங்கிருந்து இலங்கைக்குப் படகு செலுத்திக் கொண்டு போக ஆள் யாரும் கிடைக்கவில்லை. கலங்கரை விளக்கின் காவலர் தமது குமாரி பூங்குழலியை அனுப்பி வைத்தார். வந்தியத் தேவனைக் கைப்பற்றுவதற்கென்று வந்த பழுவூர் வீரர்களிடமிருந்து பூங்குழலி அவனைத் தப்புவித்தாள். இரவில் அவனைப் படகில் ஏற்றிக் கொண்டு தானே படகு வலித்துக் கொண்டு சென்றாள். வந்தியத் தேவன் கடலில் விழுந்துவிட்ட போதும் அவளே அவன் தப்புவித்தாள். இதற்கெல்லாம் பிரதியாக ஒன்று அவனிடம் கேட்டாள். இளவரசர் அருள்மொழி வர்மருக்குச் 'சமுத்திர குமாரி'யை நினைவூட்ட வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. பூங்குழலியின் இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி.'

ஆதித்த கரிகாலன் பிள்ளைப் பிராயத்தில் நந்தினிக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்தான். அவனுடைய பெரிய பாட்டியான செம்பியன்மாதேவியின் கட்டளைக்கு இணங்கி நந்தினியை மறக்க முயன்றான். பாண்டியர்களோடு நடந்த இறுதிப் போரில் ஆதித்த கரிகாலன் வீர பாண்டியனைக் கொல்லப் போன சமயத்தில், நந்தினி குறுக்கிட்டு வீர பாண்டியனுடைய உயிருக்காக மன்றாடினாள். கரிகாலன் அதைப் பொருட்படுத்தாமல் வீர பாண்டியனைக் கொன்றுவிட்டான். நந்தினியின் இச்

செய்கையினால் கலக்கமுற்ற கரிகாலன் உள்ளம் பின்னால் அவன் பெரிய பழுவேட்டரையரை மணந்த செய்தி அறிந்து அதிக குழப்பத்தை அடைந்தது. நந்தினியை மறக்க முயன்றும் அவனால் மறக்க முடியவில்லை. ஆதலின் அருள்மொழி வர்மனைத் தருவித்து அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி விட்டுத் தான் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க எண்ணினான். எனவே, தம்பியை அழைத்து வரும் பொருட்டு, பல்லவ குலத்தில் வந்தவனும் தன் இன்னொரு அந்தரங்கத் தோழனுமான பார்த்திபேந்திரனை ஈழத்துக்கு அனுப்பினான்.

பழையாறையில் குந்தவைக்கும் வந்தியத்தேவனுக்கும் நடந்த சம்பாஷணையை ஆழ்வார்க்கடியான் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவன் இராமேசுவரம் சென்றான். இராமேசுவரத்தில் சுந்தரசோழரின் மான்ய மந்திரியான அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் அச்சமயம் இருந்தார். ஆழ்வார்க்கடியான் அவரைச் சந்தித்துத் தான் கண்டு கேட்டு தெரிந்துகொண்ட விவரங்களை எல்லாம் கூறினான்.

வந்தியத் தேவன் ஓலையுடன் ஈழநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதிலிருந்து குந்தவைப் பிராட்டிக்குப் பழையாறையில் இருப்புக் கொள்ளவில்லை. தஞ்சையில் தந்தை சுந்தர சோழருக்கு அருகில் தான் இருப்பது அவசியம் என்று கருதிக் கொடும்பாளூர் இளவரசி வானதியுடன் தஞ்சைக்குச் சென்றாள். தஞ்சையில் நவராத்திரிக் கொண்டாட்டம் நடந்தது. ஒரு நாள் இரவு குந்தவையும் மற்ற ராணிகளும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்த போது வானதி தனியாக அரண்மனையைச் சுற்றி வந்தாள். சுந்தர சோழரின் பரிதாபக் குரல் அந்த நள்ளிரவில் "ஐயோ! உன்னை நான் கொன்றது உண்மைதான்! அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கதறியதைக் கேட்டாள். அவருக்கெதிரே நந்தினியைப் போன்ற ஒரு பெண் உருவம் நிற்பதையும் கண்டாள். அங்கிருந்து திரும்பிச் செல்லுகையில் நடைபாதையில் மூர்ச்சையுற்று விழுந்தாள்.

அத்தியாயம் 16

சுந்தர சோழரின் பிரமை

மறு நாள் காலையில் சுந்தர சோழ சக்கரவர்த்தி தம் அருமைக் குமாரியை அழைத்து வரச் செய்தார். ஏவலாளர், தாதிமார், வைத்தியர் அனைவரையும் தூரமாகப் போயிருக்கும்படி கட்டளையிட்டார். குந்தவையைத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டு அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவர் சொல்ல விரும்பியதைச் சொல்ல முடியாமல் தத்தளிக்கிறார் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

"அப்பா! என் பேரில் கோபமா?" என்று கேட்டாள்.

சுந்தர சோழரின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"உன்பேரில் எதற்கு, அம்மா, கோபம்?" என்றார்.

"தங்கள் கட்டளையை மீறித் தஞ்சாவூருக்கு வந்ததற்காகத்தான்!"

"ஆமாம்; என் கட்டளையை மீறி நீ வந்திருக்கக் கூடாது. இந்தத் தஞ்சாவூர் அரண்மனை இளம் பெண்கள் வசிப்பதற்கு ஏற்றதல்ல. இது நேற்று இராத்திரி நடந்த சம்பவத்திலிருந்து உனக்கே தெரிந்திருக்கும்."

"எந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள், அப்பா?"

"அந்தக் கொடும்பாளூர்ப் பெண் மூர்ச்சை யடைந்ததைப் பற்றித்தான் சொல்லுகிறேன். அந்தப் பெண்ணுக்கு இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?"

"அவளுக்கு இன்றைக்கு ஒன்றுமேயில்லை, அப்பா! பழையாறையிலும் அடிக்கடி இவள் இப்படிப் பிரக்ஞை இழப்பது உண்டு. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சரியாகப் போய்விடும்."

"அவளை நீ கேட்டாயா, அம்மா? இராத்திரி இந்த அரண்மனையில் அவள் ஏதேனும் கண்டதாகவோ, கேட்டதாகவோ சொல்லவில்லையா?"

குந்தவை சற்று யோசித்து விட்டு, "ஆம், அப்பா! நாங்கள் எல்லோரும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்த போது அவள் தனியாக மேல்மாடத்துக்குப் போகப் பார்த்தாளாம். அப்

போது யாரோ பரிதாபமாகப் புலம்புவது போலக் கேட்டதாம். அது அவனுக்குப் பயத்தை உண்டாக்கியதாகச் சொன்னான்" என்றாள்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன். இப்போதேனும் அறிந்தாயா, குழந்தாய்? இந்த அரண்மனையில் பேய் உலாவுகிறது. நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். போய்விடுங்கள்!" என்று சுந்தர சோழர் கூறியபோது அவர் உடல் நடுங்குவதையும் அவருடைய கண்கள் வெறித்தபடி எங்கேயோ பார்ப்பதையும் குந்தவை கவனித்தாள்.

"அப்பா! அப்படியானால் தாங்கள் மட்டும் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? அம்மா இங்கே எதற்காக இருக்க வேண்டும்? எல்லாரும் பழையாறைக்கே போய்விடலாமே? இங்கு வந்ததினால் உங்கள் உடம்பு குணமாகியிருப்பதாகவும் தெரியவில்லையே?" என்றாள்.

சக்கரவர்த்தி துயரம் தோய்ந்த புன்னகை புரிந்து, "என் உடம்பு இனிமேல் குணமாவது ஏது? அந்த ஆசை எனக்குக் கொஞ்சமும் கிடையாது!" என்றார்.

"அப்படி ஏன் நிராசை அடைய வேண்டும், அப்பா! பழையாறை வைத்தியர் தங்கள் உடம்பைக் குணப்படுத்த முடியும் என்று சொல்கிறார்."

"அவர் சொல்வதை நம்பி நீயும் இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர ஆள் அனுப்பியிருக்கிறாயாம்! நான் கேள்விப்பட்டேன். மகளே! என்பேரில் உனக்குள்ள பாசத்தை அது காட்டுகிறது"

"தந்தையிடம் மகள் பாசம் கொண்டிருப்பது தவறா, அப்பா?"

"அதில் தவறு இல்லை. இப்படிப்பட்ட வாஞ்சையுள்ள புதல்வியைப் பெற்றேனே, அது என் பாக்கியம். இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர நீ ஆள் அனுப்பியதிலும் தவறில்லை. ஆனால் இலங்கையிலிருந்து மூலிகை வந்தாலும் சரி, சாவகத் தீவிலிருந்து வந்தாலும் சரி, தேவலோகத்திலிருந்து அமுதமே வந்தாலும் சரி, எனக்கு உடம்பு இந்த ஜன்மத்தில் குணமாகப் போவதில்லை......"

"ஐயையோ! அப்படிச் சொல்லாதீர்கள்!" என்றாள் இளவரசி.

"என் கட்டளையையும் மீறி நீ இங்கு வந்தாயே, அம்மா! அதற்காக உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு நாள் என் மனதைத் திறந்து உன்னிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. சொல்கிறேன், கேள்! உடம்பைப் பற்றிய வியாதியாயிருந்தால் மூலிகை மருந்துகளினால் தீரும். என்னுடைய நோய் உடம்பைப் பற்றியதல்ல; மனக் கவலைக்கு மருந்து ஏது?"

"தந்தையே! மூன்றுலகம் ஆளும் சக்கரவர்த்தியாகிய தங்களுக்கு அப்படி என்ன தீராத மனக் கவலை இருக்க முடியும்?"

"கவிகளுடைய அதிசயோக்தியான கற்பனையை நீயும் சொல்கிறாய், குழந்தாய்! நான் மூன்று உலகம் ஆளும் சக்கரவர்த்தி யல்ல; ஒரு உலகம் முழுவதையும் ஆளுகிறவனும் அல்ல. உலகத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு பகுதி என் இராஜ்யம். இதன் பாரத்தையே என்னால் சுமக்க முடியவில்லை......"

"தாங்கள் ஏன் சுமக்க வேண்டும், அப்பா? இராஜ்ய பாரத்தைச் சுமப்பதற்குத் தகுந்தவர்கள் இல்லையா? மணி மணியாக இரண்டு புதல்வர்கள் தங்களுக்கு இருக்கிறார்கள். இருவரும் இரண்டு சிங்கக் குட்டிகள்; வீராதி வீரர்கள். எப்படிப்பட்ட பாரத்தையும் தாங்கக் கூடியவர்கள்......"

"மகளே! அதை நினைத்தால்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்கிறது. உன் சகோதரர்கள் இருவரும் இணையில்லா வீரர்கள் தான். உன்னைப் போலவே அவர்களையும் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். அவர்களுக்கு இந்த இராஜ்யத்தைக் கொடுத்தால் நன்மை செய்கிறவனாவேனா என்று சந்தேகப்படுகிறேன். இராஜ்யத்துடன் பெரியதொரு சாபக்கேட்டையும் அவர்களிடம் ஒப்புவித்து விட்டுப் போவது நல்லதென்று சொல்வாயா?"

"அப்படி என்ன சாபக்கேடு இருக்க முடியும் இந்த ராஜ்யத்திற்கு? புறாவுக்காகச் சதையை அளித்த சிபியும் கன்றுக் குட்டிக்காக மகனை அளித்த மனுநீதிச் சோழரும் நம் குலத்து முன்னோர்கள். கரிகால் வளவரும் பெருநற்கிள்ளியும் இந்த ராஜ்யத்தை ஆண்டவர்கள். திருமேனியில் தோன்றா

றும் ஆறும் புண் சுமந்த வீர விஜயாலய சோழர் இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். காவேரி நதி தீரத்தில் நூற்றெட்டு ஆலயங்கள் எடுப்பித்த ஆதித்த சோழரும், சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து பொன்னம்பலமாக்கிய பராந்தகரும் இந்த ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள். அன்பே சிவம் எனக் கண்டு அன்பும் சிவமும் தாமேயாக வீற்றிருந்த கண்டராதித்தர் அரசு புரிந்த தர்ம மகா ராஜ்யம் இது. இப்படிப்பட்ட ராஜ்யத்திற்குச் சாபக்கேடு என்ன இருக்க முடியும்? அப்பா! தாங்கள் ஏதோ மனப் பிரமையில் இருக்கிறீர்கள்! இந்தத் தஞ்சாவூர் கோட்டையை விட்டுத் தாங்கள் புறப்பட்டு வந்தால்......"

"நான் இவ்விடம் விட்டுப் புறப்பட்டால் அடுத்த கணம் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியாது! அழகிய பழையாறையை விட்டு இந்தத் தஞ்சைக் கோட்டையாகிய சிறையில் நான் சந்தோஷத்துக்காக இருக்கிறேன் என்று கருதுகிறாயா? குந்தவை! நான் இங்கே இருப்பதனால் இந்தப் பழம் பெரும் சோழ ராஜ்யம் சின்னாபின்னமாகாமல் காப்பாற்றி வருகிறேன். நேற்றிரவு நாடகம் ஆடிக் கொண்டிருந்தபோது என்ன நடந்தது என்பதை யோசித்துப் பார்! நிலா மாடத்தின் முகப்பிலிருந்து நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். நாடகத்தை நடுவில் நிறுத்தி விடலாமா என்று கூடத் தோன்றியது......"

"தந்தையே! இது என்ன? நாடகம் மிக நன்றாக இருந்ததே! சோழ குலப் பெருமையை எண்ணி என் உள்ளம் பூரித்ததே? எதற்காக நிறுத்த விரும்பினீர்கள்? நாடகத்தில் எந்தப் பகுதி தங்களுக்குப் பிடிக்காமலிருந்தது?"

"நாடகம் நன்றாகத்தானிருந்தது, மகளே! அதில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. நாடகம் பார்த்தவர்களின் நடத்தையைப் பற்றியே சொல்கிறேன். கொடும்பாளூர்க் கட்சியும் பழுவேட்டரையர் கட்சியும் எழுப்பிய போட்டி கோஷங்களை நீ கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன், அப்பா!"

"நான் ஒருவன் இங்கு இருக்கும் போதே இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்களே! நான் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்! நான் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய தட்சணமே இரு கட்சியாருக்குள்ளும் சண்டை மூளும். கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள் ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டு அழிந்தது போல் இவர்களும் அழிவார்கள். இவர்கள் அழியும்போது இந்த மகா சாம்ராஜ்யமும் அழிந்து விடும்......"

"அப்பா! தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரச் சக்கரவர்த்தி பழுவேட்டரையர்களும் சரி, கொடும்பாளூர் வேளிரும் சரி, தங்கள் காலால் இட்டதைத் தலையால் செய்யக் கடமைப் பட்டவர்கள். அவர்கள் அத்துமீறி நடந்தால் அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக் கொள்ளுகிறார்கள். தாங்கள் ஏன் கவலைப் படவேண்டும்?"

"மகளே! சென்ற நூறு வருஷமாக இந்த இரு குலத்தோரும் சோழ சாம்ராஜ்யத்துக்கு இணையில்லா ஊழியம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியின்றிச் சோழ ராஜ்யம் இப்படிப் பல்கிப் பெருகியிருக்க முடியுமா? அவர்கள் அழிந்தால் இராஜ்யத்துக்கும் அது பலவீனந்தானே?"

"அப்பா! அந்த இரு கட்சியில் ஒரு கட்சிக்காரர்கள் தங்களுக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் என்று தெரிந்தால்......?"

சுந்தரசோழர் குந்தவையை வியப்போடு உற்றுப் பார்த்து, "என்ன மகளே, சொல்கிறாய்? எனக்கு விரோதமான சதியா? யார் செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

"அப்பா! தங்களுடைய உண்மையான ஊழியர்களாக நடித்து வருகிறவர்கள் சிலர் தங்களுக்கு எதிராக இரகசியச் சதி செய்கிறார்கள். தங்களுடைய புதல்வர்களுக்குப் பட்டமில்லாமல் செய்து விட்டு வேறொருவருக்குப் பட்டம் கட்டச் சதி செய்து வருகிறார்கள்......"

"யாருக்கு? யாருக்கு? மகளே! உன் சகோதரர்களுக்குப் பட்டம் இல்லையென்று செய்து விட்டு வேறு யாருக்குப் பட்டம் கட்டப் பார்க்கிறார்கள்?" என்று சுந்தர சோழ சக்கரவர்த்தி பரபரப்புடன் கேட்டார்.

குந்தவை மெல்லிய குரலில், "சித்தப்பா மதுராந்தகனுக்கு, அப்பா! நீங்கள் நோய்ப் படுக்கையில் படுத்திருக்கையில் இவர்கள் இப்படிப் பயங்கரமான துரோகத்தைச் செய்கிறார்கள்..." என்றாள்.

உடனே சுந்தர சோழர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து, "ஆகா! அவர்களுடைய முயற்சிமட்டும் பலித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றார்.

குந்தவைக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"தந்தையே! இது என்ன, தாங்கள் பெற்ற புதல்வர்களுக்குத் தாங்களே சத்துரு ஆவீர்களா?" என்றாள்.

"இல்லை; என் புதல்வர்களுக்கு நான் சத்துரு இல்லை. அவர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். இந்தச் சாபக்கேடு உள்ள ராஜ்யம் அவர்களுக்கு வேண்டியதில்லை. மதுராந்தகன் மட்டும் சம்மதித்தால்......"

"சித்தப்பா சம்மதிப்பதற்கு என்ன? திவ்யமாகச் சம்மதிக்கிறார். நாளைக்கே பட்டங் கட்டிக் கொள்ளச் சித்தமாயிருக்கிறார். அம்மாதிரி தாங்கள் செய்யப் போகிறீர்களா? என் தமையனின் சம்மதம் கேட்க வேண்டாமா?......"

"ஆம்; ஆதித்த கரிகாலனைக் கேட்க வேண்டியதுதான். அவனைக் கேட்டால் மட்டும் போதாது. உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும்......"

"பிள்ளைக்குப் பட்டம் கட்டினால் தாயார் வேண்டாம் என்று சொல்வாளா?"

"ஏன் சொல்ல மாட்டாள்? உன் பெரிய பாட்டியுடன் இத்தனை நாள் பழகியும் அவரை நீ அறிந்து கொள்ளவில்லையா? செம்பியன் மாதேவியின் வற்புறுத்தலினாலேயே நான் அன்று சிம்மாசனம் ஏறினேன். ஆதித்தனுக்கும் இளவரசுப் பட்டம் கட்டினேன். குந்தவை! உன் பெரிய பாட்டிக்கு உன் பேரில் மிக்க அன்பு உண்டு. நீ அவரிடம் நயமாகச் சொல்லி மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்குச் சம்மதம் வாங்கி விடு!......"

குந்தவை திகைத்துப் போய்ப் பேசாமலிருந்தாள்.

"பிறகு காஞ்சிக்குப் போ! அங்கே உன் அண்ணன் ஆதித்த கரிகாலனோடு சொல்லி 'இந்தச் சாபக்கேடு வாய்ந்த இராஜ்யம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லும்படி செய்து விடு. மதுராந்தகனுக்கே பட்டம் கட்டி விடுவோம். பிறகு நாம் எல்லாரும் சாபம் நீங்கி நிம்மதியாக இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா! அடிக்கடி சாபம் என்கிறீர்களே? எந்தச் சாபத்தைச் சொல்கிறீர்கள்?" என்று குந்தவை கேட்டாள்.

"மகளே! பூர்வ ஜன்மம் என்று சொல்கிறார்களே அதை நீ நம்புகிறாயா? பூர்வ ஜன்மத்தின் நினைவுகள் இந்த ஜன்மத்தில் சில சமயம் வரும் என்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

"தந்தையே! அவையெல்லாம் பெரிய விஷயங்கள். எனக்கென்ன தெரியும், அந்த விஷயங்களைப் பற்றி?"

"மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிச் சொல்கிறார்களே? புத்த பகவான் கடைசி அவதாரத்துக்கு முன்னால் பல அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்கிறார்களே? அந்த அவதாரங்களைப் பற்றிய பல அழகான கதைகள் சொல்கிறார்களே?"

"கேட்டிருக்கிறேன், அப்பா!"

"கடவுளுக்கும் அவதார புருஷர்களுக்கும் அப்படியென்றால் சாதாரண மனிதர்களுக்கு மட்டும் முற்பிறவிகள் இல்லாமலிருக்குமா?"

"இருக்கலாம், அப்பா!"

"சில சமயம் எனக்கும் பூர்வ ஜன்ம நினைவுகள் வருகின்றன, மகளே! அவற்றைக் குறித்து இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள்; புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். எனக்கு உடல் நோயுடன் சித்தப் பிரமையும் பிடித்திருப்பதாகச் சொல்வார்கள். வைத்தியர்களை அழைத்து வந்து தொந்தரவு கொடுப்பது போதாது என்று மாந்திரீகர்களையும் அழைத்து வரத் தொடங்குவார்கள் ......"


"ஆம், தந்தையே! இப்போதே சிலர் அப்படிச் சொல்கிறார்கள். தங்கள் நோய் மருத்துவத்தினால் தீராது; மாந்திரீகர்களை அழைக்க வேண்டும் என்கிறார்கள் ......"

"பார்த்தாயா? நீ அப்படியெல்லாம் நினைக்க மாட்டாயே? நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சிரிக்க மாட்டாயே?" என்றார் சக்கரவர்த்தி.



"கேட்க வேண்டுமா, அப்பா! உங்களுடைய மனம் எவ்வளவு நொந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாதா? தங்களைப் பார்த்து நான் சிரிப்பேனா?" என்று குந்தவை கூறினாள். அவளுடைய கண்ணில் நீர் மல்கிற்று.

"எனக்குத் தெரியும், மகளே! அதனாலேதான் மற்ற யாரிடமும் சொல்லாததை உன்னிடம் சொல்கிறேன். என்னுடைய பூர்வ ஜன்ம நினைவுகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன், கேள்!" என்றார் சுந்தர சோழர்.



நாலுபுறமும் கடல் சூழ்ந்த ஓர் அழகிய தீவு. அத்தீவில் எங்கெங்கும் பச்சை மரங்கள் மண்டி வளர்ந்திருந்தன. மரங்கள் இல்லாத இடங்களில் நெருங்கிய புதர்களாயிருந்தன. கடற்கரையோரத்தில் ஒரு புதரில் வாலிபன் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தில் கடலில் பாய்மரம் விரித்துச் சென்ற கப்பல் ஒன்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அது மறையும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, "அப்பா! பிழைத்தோம்!" என்று பெருமூச்சு விட்டான்.

அந்த வாலிபன் இராஜ குலத்தில் பிறந்தவன். ஆனால் இராஜ்யத்துக்கு உரிமையுள்ளவன் அல்ல; இராஜ்யம் ஆளும் ஆசையும் அவனுக்குக் கிடையாது. அவனுடைய தகப்பனாருக்கு முன்னால் பிறந்த மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஆகையால் இராஜ்யம் ஆளுவதைப் பற்றி அவன் கனவிலும் நினைக்கவில்லை; ஆசை கொள்ளவும் இல்லை. கடல் கடந்த நாட்டுக்குப் போருக்குச் சென்ற சைன்யத்தோடு அவனும் போனான். ஒரு சிறிய படையின் தலைமை அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. போரில் அவனுடைய சைன்யம் தோல்வியுற்றது. கணக்கற்றவர்கள்

மாண்டார்கள். வாலிபன் தலைமை வகித்த படையிலும் எல்லாரும் மாண்டார்கள். அந்த வாலிபனும் போரில் உயிரை விடத்துணிந்து எவ்வளவோ சாஹஸச் செயல்கள் புரிந்தான். ஆனாலும் அவனுக்குச் சாவு நேரவில்லை. தோற்று ஓடிய சைன்யத்தில் உயிரோடு தப்பிப் பிழைத்தவர்கள் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். திரும்பித் தாய்நாடு செல்லுவதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். திரும்பிப் போவதற்கு அந்த வாலிபன் மட்டும் விரும்பவில்லை. தன் கீழிருந்த படை வீரர்கள் அனைவரையும் பறிகொடுத்து விட்டு அவன் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்கள் மகா வீரர்கள் எனப் புகழ் பெற்றவர்கள். அந்தப் புகழுக்குத் தன்னால் அபகீர்த்தி நேருவதை அவன் விரும்பவில்லை. ஆகையால், கப்பல் போய்க் கொண்டிருந்தபோது, சற்றுத் தூரத்தில் அழகிய தீவு ஒன்று தெரிந்தபோது, வாலிபன் மற்ற யாரும் அறியாமல் கடலில் மெள்ளக் குதித்தான். நீந்திக்கொண்டே போய்த் தீவில் கரை ஏறினான். கப்பல் கண்ணுக்கு மறையும் வரையில் காத்திருந்தான். பிறகு ஒரு மரத்தின்மேல் ஏறி அதன் அடிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். அந்தத் தீவின் அழகு அவன் மனதைக் கவர்ந்தது. ஆனால் அத்தீவில் மனித சஞ்சாரமே இல்லை என்று தோன்றியது. அச்சமயம் அது ஒரு குறையென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுடைய உற்சாகம் மிகுந்தது. மரக்கிளையில் சாய்ந்து உட்கார்ந்தபடி வருங்காலத்தைப் பற்றிப் பகற் கனவுகள் கண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று மனிதக் குரலில், அதுவும் பெண் குரலில், ஒரு கூச்சல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். இளம் பெண் ஒருத்தி கூச்சலிட்டவண்ணம் ஓடிக் கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து பயங்கரமான கரடி ஒன்று ஓடியது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கரடி மேலும் மேலும் அந்தப் பெண்ணை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவருக்கும் இடையிலே யிருந்த தூரம் குறுகிக் கொண்டிருந்தது. வேறு யோசனை ஒன்றும் செய்வதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. வாலிபன் மரக் கிளையிலிருந்து பொத்தென்று கீழே குதித்தான். மரத்தில் தான் சாத்தியிருந்த வேலை எடுத்துக் கொண்டு ஓடினான். கரடி அந்தப் பெண்ணை நெருங்கி அதன் பயங்கரமான கால் நகங்களை அவள் கழுத்தில் வைப்பதற்கு இருந்தது. அச்சமயத்தில் குறி பார்த்து வேலை எறிந்தான். வேல் கரடியைத் தாக்கியது. கரடி வீல் என்று ஏழுலகமும் கேட்கும்படியான ஒரு சத்தம் போட்டு விட்டுத் திரும்பியது. பெண் பிழைத்தாள். ஆனால் வாலிபன் அபாயத்துக்குள்ளானான். காயம்பட்ட கரடி அவனை நோக்கிப் பாய்ந்தது. வாலிபனுக்கும் கரடிக்கும் துவந்த யுத்தம் நடந்தது. கடைசியில் அந்த வாலிபனே வெற்றி பெற்றான்.

வெற்றி யடைந்த வாலிபனுடைய கண்கள் உடனே நாலாபுறமும் தேடின. எதைத் தேடின என்பது அவனுக்கே முதலில் தெரியவில்லை. அப்புறம் சட்டென்று தெரிந்தது. அவன் கண்கள் தேடிய பெண், சாய்ந்து வளைந்து குறுக்கே வளர்ந்திருந்த ஒரு தென்னை மரத்தின் பின்னால், அதன்பேரில் சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் கண்களில் வியப்பும் முகத்தில் மகிழ்ச்சியும் குடி கொண்டிருந்தன. அவள் காட்டில் வாழும் பெண், உலகத்து நாகரிக வாழ்க்கையை அறியாதவள் என்று அவளுடைய தோற்றமும் உடையும் தெரிவித்தன. ஆனால் அவளுடைய அழகுக்கு உவமை சொல்ல இந்த உலகத்தில் யாரும் இல்லை யென்று சொல்லும்படி யிருந்தாள். அந்தப் பெண் அங்கு நின்றிருந்த காட்சி ஒப்பற்ற ஆற்றல் படைத்த ஓவியக் கலைஞன் ஒருவன் தீட்டிய சித்திரக் காட்சியாகத் தோன்றியது. அவள் உண்மையில் ஒரு பெண்ணாயிருந்தாலும் இந்த உலகத்துப் பெண்ணாயிருக்க முடியாது என்று அந்த வாலிபன் கருதினான். அருகில் நெருங்கினான். ஆனால் அவன் எதிர்பார்த்ததுபோல் அவள் மாயமாய் மறைந்து விடவில்லை. எதிர் பாராத விதமாக அவள் ஓட்டம் பிடித்து ஓடினாள். சற்று அவளைப் பின் தொடர்ந்து ஓடிப் பார்த்தான். பிறகு

நின்று விட்டான். அவன் மிகக் களைப்புற்றிருந்தபடியால் மானின் வேகத்துடன் ஓடிய அந்தப் பெண்ணைத் தொடர்ந்து அவனால் ஓடவும் முடியவில்லை. மேலும், ஒரு பெண்ணைத் தொடர்ந்து ஓடுவது அநாகரிகம் என்றும் அவன் எண்ணினான். "இந்தச் சிறிய தீவிலேதானே இவள் இருக்க வேண்டும்? மறுபடியும் பார்க்காமலா போகிறோம்!" என்று கருதி நின்று விட்டான். கடற்கரையோரமாகச் சென்று தெள்ளிய மணலில் படுத்துக் கொண்டு களைப்பாறினான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் திரும்பி வந்தாள். தன்னுடன் ஒரு வயோதிகனான மனிதனையும் அழைத்து வந்தாள். வந்தவன் இலங்கைத் தீவில் கடற்கரையோரத்தில் வாழ்ந்து மீன் பிடித்துப் பிழைக்கும் 'கரையர்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. அவன் மூலமாக அவ் வாலிபன் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொண்டான். அதாவது அந்தப் பெண் தக்க சமயத்தில் அவனுடைய உயிரைக் காப்பாற்றினாள் என்று அறிந்தான். அவன் மரக்கிளையின் மேல் உட்கார்ந்து கடலையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது கரடி ஒன்று அவன் பின்பக்கமாக வந்து அவனை உற்றுப் பார்த்தது. பிறகு மரத்தின்மேல் ஏறத் தொடங்கியது. இதையெல்லாம் அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். கரடியை வேறு திசையில் இழுப்பதற்கும் அந்த வாலிபனை எச்சரிக்கை செய்வதற்கும் அவள் அவ்விதம் கூச்சலிட்டாள். கரடி மரத்தின் மேல் ஏறுவதை விட்டு அவளைத் தொடர்ந்து ஓடத் தொடங்கியது.

இதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்கு எப்படியிருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமா? தன்னைக் காப்பாற்றிய பெண்ணுக்கு அவன் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். ஆனால் அவளோ ஒரு வார்த்தையும் மறுமொழியாகச் சொல்லவில்லை. அவளிடம் வாலிபன் கூறியதற்கெல்லாம் அவளுடன் வந்த மனிதனே மறுமொழி கூறினான். இது வாலிபனுக்கு முதலில் வியப்பாயிருந்தது. உண்மை இன்னதென்று அறிந்ததும், வியப்பு மறைந்தது. அந்தப் பெண் பேசத் தெரியாத ஊமை, அவளுக்குக் காதும் கேளாது என்று அறிந்து கொண்டதும், அவ்வாலிபனுடைய உள்ளம் கனிந்து உருகியது. அதனால் அந்தப் பெண்ணிடம் அவனுடைய பாசம் பன்மடங்காகியது. பாசம் வளர்ந்து தழைப்பதற்குச் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் துணை செய்தன. காது கேளாததும் பேசத் தெரியாததும் ஒரு குறைவாகவே அவ்வாலிபனுக்குத் தோன்றவில்லை. வாயினால் சொல்ல முடியாத அற்புதமான உண்மைகளையும் அந்தரங்க இரகசியங்களையும் அவளுடைய கண்களே தெரியப்படுத்தின. அந்த நயன பாஷைக்கு ஈடான பாஷை இந்த உலகத்தில் வேறு என்ன உண்டு? அது போலவே காது கேளாததற்கு ஈடாக அவளுடைய நாசியின் உணர்ச்சி அதிசயமான சக்தி வாய்ந்ததாயிருந்தது. அடர்ந்த காட்டின் மத்தியில் வெகு தூரத்தில் மறைந்திருக்கும் காட்டு மிருகம் இன்னதென்பதை அவளுடைய முகர்தல் சக்தியைக் கொண்டே கண்டு பிடிக்க அவளால் முடிந்தது. ஆனால் இதெல்லாம் என்னத்திற்கு? இருதயங்கள் இரண்டு ஒன்று சேர்ந்து விட்டால், மற்றப் புலன்களைப் பற்றி என்ன கவலை? அந்த வாலிபனுக்கு அத்தீவு சொர்க்க பூமியாகவே தோன்றியது. நாட்கள், மாதங்கள், வருஷங்கள்,—இவ்விதம் சென்றன. எத்தனை நாள் அல்லது வருஷம் ஆயிற்று என்பதைக் கணக்குப் பார்க்கவே அவன் மறந்து விட்டான்.

வாலிபனுடைய இந்தச் சொர்க்க வாழ்வுக்குத் திடீரென்று ஒரு நாள் முடிவு நேர்ந்தது. கப்பல் ஒன்று அந்தத் தீவின் அருகில் வந்து நின்றது. அதிலிருந்து படகிலும் கட்டு மரங்களிலும் பலர் இறங்கி வந்தார்கள். அவர்கள் யார் என்று பார்க்க வாலிபன் அருகில் சென்றான். தன்னைத் தேடிக் கொண்டுதான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்தான். அவனுடைய நாட்டில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நடந்து விட்டன. அவனுடைய தந்தைக்கு மூத்த சகோதரர்கள் இருவர் இறந்து போய் விட்டார்கள். இன்னொருவருக்குப் புத்திர


சந்தானம் இல்லை. ஆகையால், ஒரு பெரிய சாம்ராஜ்யம் அவனுக்காகக் காத்திருக்கிறது என்று தெரிந்து கொண்டான். அவனுடைய உள்ளத்தில் ஒரு பெரிய பூசல் ஏற்பட்டது. அந்த அழகிய தீவையும் அதைச் சொர்க்க பூமியாக்கிய ஊமைப் பெண்ணையும் விட்டுப்போக அவனுக்கு மனமில்லை. அதே சமயத்தில் ஊரையும் உற்றார் உறவினரையும் பார்க்கும் ஆசை ஒரு பக்கத்தில் அவனைக் கவர்ந்து இழுத்தது. அவன் பிறந்த நாட்டை நாலாபுறமும் அபாயம் சூழ்ந்திருக்கிறதென்றும் அறிந்தான். யுத்த பேரிகையின் முழக்கம் மிக மிகத் தொலைவிலிருந்து அவன் காதில் வந்து கேட்டது. இது அவன் முடிவு செய்வதற்குத் துணை செய்தது. "திரும்பி வருகிறேன்; என் கடமையை நிறைவேற்றி விட்டு வருகிறேன்" என்று அப்பெண்ணிடம் ஆயிரம் முறை உறுதி மொழி கூறி விட்டுப் புறப்பட்டான். காட்டில் பிறந்து வளர்ந்த அந்த ஊமைப் பெண் நாட்டிலிருந்து வந்திருந்த மனிதர்களுக்கு மத்தியில் வருவதற்கே விரும்பவில்லை. வாலிபன் படகில் ஏறியபோது அவள் சற்றுத் தூரத்தில் அந்தப் பழைய வளைந்த தென்னை மரத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இரு கண்களும் அப்போது இரண்டு கண்ணீர்க் கடல்களாக வாலிபனுக்குத் தோன்றின. ஆயினும் அவன் தன் மனதைக் கல்லாகச்செய்து கொண்டு படகில் ஏறிச் சென்று கப்பலை அடைந்தான்....


* * *

"குந்தவை! அந்த வலைஞர் குலப் பெண் அப்படி நின்று பார்த்துக் கொண்டிருந்தாளே, அந்தக் காட்சியின் நினைவு அடிக்கடி என் மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு மறந்தாலும் மறக்க முடியவில்லை. அதைக் காட்டிலும் சோகமான இன்னும் ஒரு காட்சி, நினைத்தாலும் குலைநடுங்கும் காட்சி அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. இரவிலும் பகலிலும் உறங்கும் போதும் விழித்திருக்கையிலும் என்னை வருத்தி வேதனைப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதையும் சொல்லட்டுமா?" என்று சுந்தர சோழர் தம் அருமை மகளைப் பார்த்துக் கேட்டார்.

உருக்கத்தினால் தொண்டை அடைத்துத் தழதழத்த குரலில், சுந்தர சோழரின் அருமைக் குமாரி "சொல்லுங்கள், அப்பா!" என்றாள். (தொடரும்)

இதற்குத்தானா?





(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஊசியைக் காணவில்லை என்றவுடன், பரபரப்புடன் அவன் கண்கள் கீழே துழாவின. புற்றரையில் கைகள் தடுதடுக்கத் தடவிப் பார்த்தன. சிலியோ விஷயம் என்னவென்று அறியும் ஆவல் மூண்டதுபோல் அவன் கையை முகர்ந்தது. உடனே ஜோஸி, அதன் வாயைத் திறந்து அதற்குள் கையை விட்டுப் பார்த்தான். மறுபடி எழுந்து கீழே பார்த்துக் கொண்டே இங்கும் அங்கும் நடந்தான். அவன் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. தொண்டை உலர்ந்து கண்களில் நீர் முட்டியது. மறுபடியும் சிலியிடம் ஓடி வந்தான். அதன் கழுத்தைத் தடவினான்; வயிற்றைத் தடவினான். அவன் துடிப்பை இன்னதென்று புரிந்து கொள்ளாத மாடு சிறுவனை முகர்ந்து பார்த்து விழித்தது.

"ஐயோ! ஊசியை முழுங்கிப் போட்டியே? பாவி நான் என்னத்துக்கு இலை கொடுத்தேன்? கவனியாமல் கோணியை உதறினேனே?" என்று வாய் விட்டுக் கூறி ஜோஸி அழுதுவிட்டான். கைகள் கும்பிட, நீல வானை நோக்கி அவன், "சாமி! நீதான் காப்பாத்த வேணும்!" என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

சிலி அதையும் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றது. தூரத்தில் கொட்டிலிலிருந்து முதலாளி கத்தும் சத்தம் கேட்டது. "ஜோஸி! புல் அறுத்தாச்சா? தொட்டியில் தண்ணி இழுத்துக் கொட்ட வேண்டாம்?" என்று எஜமானர் கூவினார்.

ஜோஸி கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். அவன் கடமை நினைவுக்கு வந்தது. புல் கிடந்த இடத்தில் வந்து, கோணியின் நடுவே புல்லை வைத்து, மூட்டை போல் சுருட்டினான். அப்படியே தூக்கிக்கொண்டு மேடேறி அவன் கொட்டிலுக்கு வந்தான். அவன் நடையிலே முன்போல் துள்ளல் இல்லை; முகத்தில் மலர்ச்சி இல்லை; விழி இமைகள் கனத்து சோர்வுற்றிருந்தன.

"என்டா, கோணி கிழிஞ்சா போச்சு? தைச்சுக்கக் கூடாது?" என்று முதலாளி கேட்டார்.

பதிலே கூறாமல் அவன் கொட்டிலுக்குள் புல்லைப் போட்டான். "என்டா, பயலே! அழுதாயா? என்ன குறை உனக்கு?" என்று வேறு அவர் கேட்டார்.

"ஒண்ணுமில்லீங்க......" என்று கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு தொட்டியண்டை சென்றான் ஜோஸி.

"ஆயி அப்பன் இல்லாமல் வளருது. மாமன் ஏதானும் திட்டினானோ என்னவோ?" என்று எண்ணிய அப்பாஜி கௌடர் தம் மில் வேஷ்டி காற்றில் பறக்க, வீட்டை நோக்கி நடந்தார்.

4

இரவு ஜோஸிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அந்த ஊசி அவன் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருக்கையில், தூக்கம் எப்படி வரும்? அவன் சந்தேகம் ஊர்ஜிதம் ஆவது போல், இரவு பத்து மணி சுமாருக்கு சிலி "ம்... ம்..." என்று முனகியது.

கம்பளியை உதறிவிட்டு, ஜோஸி, விளக்கைத் தூண்டிப் பெரிது செய்துகொண்டு, சிலியிடம் ஓடி வந்தான். அது எழுந்து நின்று கொண்டு, வேதனையுடன் கூடிய தலையை இப்படியும் அப்படியும் அசைத்தது. ஒன்றும் புரியாத சிறுவன், சிறிது நேரம்

‘கோ’வெனக் கதறி விட்டான். பின்னர் மனத்தில் தெம்பு கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். அன்றிரவு தான் அந்த வருஷத்தின் முதற் பனி விழுந்து கொண்டிருந்தது. ஜோஸியின் முகத்தில் குளிர்ச்சி படவே, ஒரு யோசனை தோன்றியது. உடனே, தொட்டியிலிருந்து வாளியில் தண்ணீரை மொண்டு வந்து சிவியிடம் வைத்தான். தண்ணீர் குடித்தால், ஒரு வேளை, சிக்குண்டிருக்கும் ஊசி உள்ளே போய்விடலாம் அல்லவா?

ஆனால் சிவி தண்ணீரை முகரவே மறுத்தது. பலாத்காரமாக வாயைத் திறந்து கொண்டு, குவளையால், தண்ணீரை உள்ளே செலுத்த முயன்றான் ஜோஸி. அது விழுங்காமல் வழிய விட்டது.

நிராசையுடன் அவன் குவளையைக் கீழே போட்டான். அந்த இளம் உள்ளம் வேதனையால் புழுங்கித் தவித்தது.

“நெஞ்சில் இருக்கும் ஊசியால், சிவிக்கு இப்படியே பிராணன் போய்விடுமோ?...”

இதை அவனால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. சிவியைச் சுற்றிச் சுற்றி வந்து தடவிக் கொடுத்தான். அதுவோ, கண்களில் நீர் சோர, வேதனை தாங்காமல் முனகியது.

அந்த கன்னிரவின் நிசப்தத்தில், அதன் நெஞ்சில் சிக்குண்ட ஊசி, அவன் மனக் கண்முன் பயங்கரமாகக் காட்சி அளித்தது. எப்படியாவது அது வெளியே வந்து விடாதா என்று ஒவ்வொரு விநாடியும் அவன் இதயம் வேண்டிக் கொண்டது.

காரிருளில் ஒரு மின்னலைப் போல் ஜோஸியின் உள்ளத்தில் ‘பளி’சென ஒரு யோசனை உதயமாயிற்று.

முதலாளியிடம் போய் உண்மையைச் சொன்னால் ஏதாவது பரிகாரம் பண்ண மாட்டாரா? போன வருஷம் கறுப்பு மாட்டுக்குக் கால் நொடிந்த போனபோது, மாட்டாசுபத்திரியிலிருந்து, ஒரு டாக்டர் வந்தாரே, அதுபோல் இந்தத் தடவை சிவிக்கும் ஏதாவது பண்ண மாட்டாரா? ஆனால்......அவன் குற்றம் அப்பாஜி கௌடருக்குத் தெரியும்போது சும்மா விடுவாரா?

பயத்தால் அவன் உடல் நடுங்கியது.

‘மாமன் முதுகுத் தோலை உயிருடன் உரித்து விடுவாரே? நீ......அதற்காக...சிவி நெஞ்சில் ஊசியுடன் அவஸ்தைப் பட்டுச் சாவதைப்...பார்ப்பதா?...ஐயோ?...அம்மாடி...வேண்டாம்!’

சிறுவனின் நெஞ்சில் எங்கிருந்தோ துணிச்சலும் தைரியமும் வந்து புகுந்தன.

முதலாளியிடம் போய் அவன் விஷயத்தைச் சொல்லுவதும், உடனே அவர் சராயும், தொப்பியும் போட்ட அந்த மாட்டாசுபத்திரி மனிதரை அழைத்து வருவதும், அவர் சொடிப் பொழுதில் எப்படியோ இந்திரஜால வித்தையைப் போல, சிவியின் நெஞ்சில் மாட்டிக் கொண்டு, அதையும் அவனையும் தவிக்க வைத்த அந்தப் பாழாய்ப் போன ஊசியை எடுத்து வெளியே வீசி எறிவதும், அவன் மனக் கண்முன் திரைப்படக் காட்சிபோல் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன.

தாமதம் செய்யாமல், கம்பளியை எடுத்து மேலே போர்த்திக் கொண்டான்; விளக்கைக் கையில் பிடித்துக் கொண்டு கொட்டிலை விட்டு வெளியே வந்தான்.

அவன் செல்வதைப் பார்த்த சிவி...... “அம்...மோவ்” என்று கத்த முடியாமல் கத்தியது.

ஜோஸி திரும்பிப் பார்த்தான். கொட்டிலில் வெளிச்சம் இல்லாததால் ஒன்றுமே தெரியவில்லை.

‘சே...இருட்டா யிருக்குதே?’ என்று ஒரு கணம் நின்றான். “இருப்பதோ ஒரே விளக்கு. அவஸ்தைப்படும் அந்தப் பிரா



ணியை வெளிச் சழுமின்றியா வைப்பது? விளக்கை அதனிடம் வைத்துவிட்டால் என்ன?”

திரும்பிக் கொட்டிலுக்குள் நுழைந்த ஜோஸி, விளக்கை மாட்டினருகில் வைத்தான். தன்னந் தனியே கிளம்பினான். அப்


பாறு கௌடரின் வீடு ஒன்றும் அவ்வளவு தூரமில்லை; மூன்று பர்லாங்குதான் இருக்கும். ஆனால் அந்தக் கொட்டும் பனியிலும் இருளிலும், அதற்கேற்ற தற்காப்பு இன்றி ஜோகி புறப்பட்டு விட்டான். அதற்குக் காரணம் அவனுக்கு இயற்கையாக உள்ள தைரியம் மட்டுமல்ல, அவன் உள்ளத்துடன் உறைந்து போன சிலியின் துடிப்பும் அந்த வேதனைக்குக் காரணம் தான்தான் என்ற துன்பமும்தான். இவையே அவனுக்கு அந்த அசாதாரண சக்தியையும், துணிச்சலையும் கொடுத்தன.

கால் கீழே பாவ முடியாதபடி, 'சரீர், சரீர்' என்று குத்தியது. மேலே இருந்து விழுந்த பனி அவனுடைய பழைய கம்பளியையும், ஒரு கை போன அந்த மாறு கோட்டையும் துளைத்துக் கொண்டு, அவன் இதயத்தை வந்து கெட்டியாகப் பிடித்தது. ஆயினும், ஜோகி காலைக் கீழே நன்றாக ஊன்றாமலேயே, தைரியத்தையும், தன் குறியையும் நழுவ விடாமல், பாதையைக் கடந்து வந்தான்.

வழி போகப் போக, அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. காதுகளில் பனி குப்பென்று வந்து அடைத்தது.

வர வர ஜோகிக்கு மூச்சுத் தடுமாறியது.

காற்றுப்போல் இருக்கும் அவனுடைய உடம்பு கனமாய்க் கனத்தது.



கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் தாரை தாரையாக நீர் வடிந்தது; ஜோகி ஒன்றுமே புரியாமல் விழித்தான். தான் எங்கிருக்கிறோம்; எது வழி; எப்படிப் போக வேண்டும் என்பதுகூடத் தெரியவில்லை. அவன் தோளிலிருந்த கம்பளி அவனை அறியாமலே கீழே நழுவியது. ஏழாயிரம் அடிக்குமேல் கடல் மட்டத்திலிருந்து உயரமாயிருந்த அம்மலைமேல் அன்றுதான் ஆரம்பித்திருந்த கடும்பனிக்கு முன், சிறுவனுடைய மன உறுதி கிலைகுலைந்து போயிற்று. கம்பளிக்குமேல் கம்பளி அணிந்து, இயற்கையான உடலுக்கு மேல் இருமடங்கு, மும்மடங்கு கனமாகத் தற்காப்புச் செய்து கொள்ளும் கனதனவான்கள்கூட அந்த இருளிலும், குளிரிலும் தலை நீட்ட அஞ்சுவார்களே? அப்பனி ஜோகியை மேலே செல்லவிடாமல், கீழே தள்ளியது. அவன் அருமைச் சிலி, அதன் கழுத்தில் சிக்கிய பாசி, யாவும் அவன் மனத்தைவிட்டு மறைந்தன.

தன் செல்வப் புதல்வனுக்கு ஓய்வு கொடுக்க எண்ணிய இயற்கை யன்னை, அவனைத் தன் மடிமீது இருத்திக் கொண்டாள்.

5

பொழுது விடிந்தது. கீழ்த் திசையில் எழுந்த இளஞ் சோதியின் முன் பனித் தேவன் மறையத் தொடங்கினான். சிலி, இரவெல்லாம் விழிகள் சோர, முனகி, முனகி தண்ணீரும் தொடாமல், புல்லும் தொடாமல், நின்றும் உட்கார்ந்தும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்ததைக் கொட்டிலுக்கு வந்த பெட்டனும், முதலாளியும் கண்டனர். "அந்தப் பய எங்கே காணோம்? விளையாட்டுப் புத்தி. எங்கே 'டிமிக்கி' கொடுத்துட்டான்? இவனை வச்சுக்கிட்டே சமக்கும் மாரடிக்க வேண்டியிருக்கிறது. மாட்டுக்கு வேறு உடம்பு நல்லாயில்லே. ராவெல்லாம் அரற்றியிருக்கு. வெளக்கு வேற மந்தமா எரியுது. போடா ..போ...மரியன் வீட்டிலே போய் ஜோகி இருக்கானு பாரு? ராவுதான் என்ன பனி! ஒரு இடத்தில் பச்சை இல்லாம கரிஞ்சு கிடக்கு!" என்று கௌடர் பெட்டனை விரட்டினார். "இந்த மாடுகளாலேயே தொந்தரவுதான் எப்பவும். ஒரு நாள் கவனிக்காம போனா, எத்தினி துன்பம்? இதையும் ஆசுபத்திரிக்கு ஓட்டிப் போகணும்!" என்று அலுத்தவாறே அவர், மாடுகளைக் கறப்பதில் முனைந்தார்.

பேட்டன் இரைக்க இரைக்க ஓடிவந்தான்.

"எசமான்! எசமான்!!"

"என்னடா எசமானுக்கு? போனா போனா எத்தினி நேரம்? வாடிக்கை கொண்டுபோக நேரமாகலே?" என்று அப்பாஜி கௌடர் இரைந்தார்.

"இல்லீங்க எசமான்! அந்தப் பய...... ஜோகி, அதோ பள்ளத்துச் சோலையிலே, விழுந்து வெறச்சுக் கிடக்குறான். அங்கு எப்படிப் போயிருப்பான்? அவன் மாமன் கிட்டச் சொல்லிட்டுப்போட்டு, ஓடியாறேன்!" இதைக் கேட்டு கௌடரின் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது.

"என்னது? நம்ம வீட்டண்டைச் சோலையிலா? அட, நான்கூட வரும்போது பாக்கலியே? சாவுலே அங்கே எங்கே போனான்? வெடியறப்போ, சுள்ளி, கிள்ளி பொறுக்கப் போய், முனி அடிச்சுப் போட்டு விட்டதோ?" என்று சந்தேகப்பட்டார்.

"அதானுங்க; சந்தேகமா யிருக்குதுங்க" என்று அவனும் அதற்கு ஒத்துப் பாடினான்.

"சரி, நீ வாடிக்கைப் பாலை எடுத்துப் போ. நான் போய்ப் பார்க்கிறேன்" என்று கூறிய அவர் பள்ளத்தில் இறங்கி விடுவிடென்று நடந்தார்.

அந்தக் குன்றின்மேல் வாரி இறைத்தாற் போலிருந்த குடிசைகளுக்கு நடுவே, ஒரு சிறிய குடிசையில் மட்டும் எப்போதும் விளக்கு எரியும். அதன் வாயிலில் நட்டுள்ள சூலத்தைக் கண்ணுற்றால், அதுதான் அந்த மலைக் கூட்டத்தினரின் கோயில் என்பது யாருக்கும் வெகு நன்றாகத் தெரியும். அந்த முனீசுவரர்தான் தங்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காக்கிறார் என்பது அவர்களின் நம்பிக்கை. முனீசுவரரின் கோபத்திற்கு ஜோகி இலக்காகி விட்டான்; அதனால் தான் இத்தகைய ஆபத்து அவனுக்கு நேர்ந்திருக்கிறது என்று பூரணமாக நம்பிய மரியன், தன் கூட்டத்தாருடன் யோசித்து, கோயிலின் வாயிலில் ஜோகியைக் கொண்டு வந்து கிடத்தினான். கூட்டம் கூடியது.

பூசாரி முழுகி, உடுக்கும் கையுமாய், தெய்வத்தின் கோபத்தைத் தணித்துக் கொள்ளுமாறு வேண்டினான்.

உச்சி வேளை வந்தது; ஆனால் ஜோகியின் நிலையில் மாறுதல் காணவில்லை.

பூசை முடிந்தது; கூட்டமும் கலைந்தது.

மரியன் மட்டும் சிறுவனின் பக்கத்திலேயே கவலையுடன் உட்கார்ந்திருந்தான்.

லேசாக ஜோகியின் உடலில் அசைவு கண்டது. கவலையும் அன்பும் ததும்பும் குரலில் மரியன், "ஜோகி!" என்று மெதுவாக அழைத்தான்.

ஆம், அந்த அன்புக் குரலில் சிறுவனை அவன் அழைத்தது அதுதான் முதல் தடவையும், கடைசித் தடவையும்.

மாடு கறக்கும் பேட்டனின் மகன் அப்போது அங்கு ஓடோடியும் வந்தான்.

அவன் கையில் ஜோகி வெகு நாட்களாக விரும்பிக் கனவு கண்ட குழல் இருந்தது. அன்றுதான் பட்டணத்திலிருந்து அவன் அதை வாங்கி வந்திருந்தான்.

"ஜோகி! ஜோகி!!" என்று நண்பன் குழலும் கையுமாகக் கூப்பிட்டபோது, சிறுவனின் விழி இமைகள் லேசாகத் திறந்தன.

குழலும், நண்பனும், அவன் நினைவைச் சற்றுத் தெளிவாக்கி யிருக்க வேண்டும். அவன் முகம் மலர்ந்தது. ஆவலுடன் கையைத் தூக்கிப் பார்த்தான். ஆனால் வார்த்தை எழவில்லை.

குழலைச் சிறுவன் அருகில் வாங்கி வைத்தான் மரியன். கதிரவன் சாய்ந்தான்; மீண்டும் இருளும் குளிரும் வந்தன. அதே இடத்தில் இரவையும் கழித்தால், ஒருவேளை தெய்வத்தின் கண் திறக்கும் என்று மரியன் எண்ணினான். எனவே கிழிந்த கோணி, கம்பளி இவைகளைக் கொண்டு சிறியதொரு கூடாரம் அமைத்தான். சட்டியில் நெருப்பை வைத்துக் கொண்டு, ஜோகியின் அருகிலேயே படுத்தான்.

இரவு அசதியாலோ என்னவோ, மரியன் வெகு நேரம் தூங்கி விட்டான். அவன் விழிக்கும்போது, பொழுதுவிடியும் தருணமாயிருந்தது. இருள் பிரியவில்லை. கோயிலில் தொங்கிய அகல் விளக்குக்கூட அணைந்திருந்தது. நெருப்புக் குச்சி ஒன்றைக் கிழித்து அவன் விளக்கை ஏற்றினான். பிறகு ஜோகியின்மேல் கையைவைத்துப் பார்த்தான். சூடே இல்லாமல் 'சில்'லென்று இருந்தது அவன் தேகம். திடுக்கிட்ட மரியன், அகலைச் சிறுவனின் முகத்துக்கு நேரே பிடித்துப் பார்த்தான். ஆம், ஜோகியின் உடல் உயிரினின்றும் பிரிந்து நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அவன் நெஞ்சிலிருந்த ஊசி கடைசி வரையில் வெளிவரவே யில்லை. மரியனின் கையிலிருந்த தீபம் நழுவியது; கண்களில் நீர் துளித்தது.

6

காலைக் கதிரோனின் கிரணங்கள் புல் நுனியில் உள்ள பனித் துளிகளை, வைரச் சுடராகச் செய்து கொண்டிருந்தன. கோஸ் தோட்டத்துக் காவற்காரன் தோட்டத்து வேலிக் கதவை இழுத்துச் சாத்தி விட்டு வெளியே வந்தான். புல் நுனியிலுள்ள பனிநீர், அவன் முரட்டுச் செருப்பையும் தாண்டிக் காலின்மேல் சில்லென்று பட்டது. வரும்போது, சட்டென எதையோ பார்த்துக் கீழே குனிந்தான். பழுத்துக் காய்ந்து போன புற்களுக்கிடையே, துருவேறிப் போன அப்பழைய ஊசி, பனி முத்துக்களைக் கோத்துக்கொண்டு, அவன் கோத்த சணலுடன் கிடந்தது.

"அட! கீழே விழுந்திருக்குது. காணோம்னு சொல்லிப்பிட்டு அன்னிக்கு இரண்டணாக் காசைக் கொண்டுவந்து கொடுத்தானே, பய? பாவம். இத்தினி நேரம் உயிரு இருக்குதோ இல்லியோ? முனி அடிச்சப்புறம் பிழைக்கிறதேது?" என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் குனிந்து ஊசியை எடுத்தான்.

கொட்டில் மாடுகளை அவிழ்த்து வெளியே கட்டிக் கொண்டிருந்த அப்பாஜி கௌடர் காவற்காரனைக் கண்டதும், "பய போயிட்டான் பாவம். ராவு எப்போ போச்சோ? மரியன் தூக்கிட்டானும். வெடியப் பாத்தா, உசிரில்லே. நல்ல பய" என்று அனுதாபப் பட்டார்.

"அட! போயிட்டுதா? நெனச்சுக்கிட்டே தான் வந்தேன். த்ஸு...... த்ஸு...... முந்தாநாள் கூட பாருங்க, என்கிட்ட வந்து கோணி தைக்க ஊசி கேட்டான். நல்லா யிருந்தான். ராவிலே எங்கே போயிருப்பான்? முனீசுவரன் கோபம் வந்தாமட்டும் லேசிலே போவாது. நானும் எத்தினியோ பாத்தாச்சு. ஆமாம் செவப்பு மாட்டுக்கு என்னங்க? சேத்து பேட்டன் ஆசுபத்திரிக்கு ஓட்டிப் போனானே?" என்று அவன் கேட்டான்.

"அதையேன் கேக்குறே? இந்த மாடுகளால் நான் ரொம்பவும் கஷ்டப் படறேன். அதுக்குக் கோமாரி நோயாம். நேத்தெல்லாம் புல்லு தொடலே, தண்ணி தொடலே, நிமர்னு வந்துடுத்து? அப்புறம் ஆசுபத்திரிக்குக் கட்டிப்போய் ஒரு ஊசி போட்டப்புறம் கொஞ்சம் இன்னிக்கு ஒரு மாதிரியா இருக்கு. அந்தப் பய வேறே காலை வாரி விட்டுட்டான். இனிமே அது மாதிரி நான்



கணவன் :—இதென்ன காப்பியா? டீயா? வெந்நீரா?

மனைவி :—நீங்கள் என்ன கேட்டீர்களோ, அது!

எங்கேருந்து வேறு ஆள் பிடிக்கிறது? ஆயி, அப்பன் இல்லாத பய இவன். வசமா வேலை செஞ்சான்" என்று தன் குறையை வெளியிட்டார் கௌடர்.

"ஆமாமுங்க......அப்போ அங்கே போவணும். மரியன் ஒண்டி ஆள்......பேட்டன் எங்கே? அங்கே போய் விட்டாரோ? நீங்களும் வரவேணுமே?" என்று அவன் விசாரித்தான்.

"பேட்டன் அங்கே போய்விட்டான். நானும் கட்டாயம் போகணும். வேலையெல்லாம் வேறு முடிக்கணும். அதுக்குள்ளாற நீயும் போ...நான் வரேன்" என்று கூறிக் கொண்டு, அவசர அவசரமாகக் கறந்த பாலைப் புட்டிகளில் ஊற்றினர் அப்பாஜி கௌடர். அவர்கள் சம்பாஷணை மூலையில் கட்டியிருந்த லிலிக்குப் புரிந்ததோ என்னவோ?

வழக்கமாக ஜோகி படுத்து உறங்கும் அந்த இடத்தை முகர்ந்து பார்த்த போது, அதன் கண்களில் நீர் முட்டியது. கடந்த இரண்டு நாட்களாய்த் தன் ஆருயிர் நண்பனை எங்கே காணோம் என்ற நினைவில் பெருமூச்சுவிட்டது. தன் உள்ளத்தில் எழுந்த துயர உணர்ச்சிகளைச் சொல்லிச் சொல்லி அழ அதற்கு வாயிருக்கிறதா, என்ன?

மேடும் பள்ளமும்

கிண்கிணி

அபிராமிக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் மாமியார் இப்படி ஒரு முடிவு செய்திருப்பது உண்மைதானா என்று வியப்படைந்தாள்.

கணவனைத் தனியாக அழைத்து, "காசிக்கா போகப் போகிறார், அம்மா? என்ன இப்படித் திடீரென்று?" என்று கேட்கச் சந்தர்ப்பத்தைத் தேடித் துடித்தாள் அபிராமி.

"ஆமாம்! காலைக்கு ஒரு 'ஸ்பெஷல்' கிளம்புகிறதே, அதில் போகப் போகிறாள். இனிமேல் உன் ராஜ்யந்தான்......" என்று நடராஜன் நாஸூக்காகச் சொல்லிவிட்டு இலேசாகச் சிரித்தான். 'அந்த ராஜ்ய' நடவடிக்கைகள் எப்படி இருக்குமோ, அதில் எப்படி எப்படி எல்லாம் தான் கட்டுண்டு கிடக்க வேண்டுமோ என்ற சிந்தனையின் ஓட்டம் அந்தச் சிரிப்பிலே தெரிந்தது.

"உங்களை விட்டு விட்டு உங்கள் அம்மாவுக்குச் செல்ல எப்படித்தான் மனம் வந்ததோ?" என்று அபிராமி அர்த்தபுஷ்டியுடன் கேட்டாள். நடராஜன் அதற்குப் பதில் சொல்லுவதற்குள் அவன் தாயார்—காமாட்சி அம்மாள்—அந்தப் பக்கம் வரவே பேச்சு நின்றுவிட்டது.

காமாட்சி அம்மாள் அன்றெல்லாம் அபிராமிக்குச் சொன்ன புத்திமதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. "உனக்கு எல்லாம் தெரியும். ஆனால் சிறுசு!" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு காமாட்சி அம்மாள் நூறு ரூபாய் சம்பளத்தில் எப்படிக் குடித்தனம் பண்ண வேண்டும் என்று மூச்சு விடாமல் சொன்னாள். இத்தனை காலமாகத் தனக்கே ஏகபோகமாக இருந்த அந்த உரிமையை விட்டுக் கொடுக்கத் தனக்கு மனமில்லாததைக் காமாட்சி அம்மாள் சின்னக் குரலிலும் சன்னக் குரலிலுமாகச் சொன்னாள்.

நடராஜன், அடுத்த நாள் இரவு அம்மாவை ரயிலேற்றிவிட்டுத் தனியாகத் திரும்பி வரும் வரையில் அபிராமிக்கு நம்பிக்கை இல்லை. மாமியாருக்கு அப்படிப்பட்ட வலுவான பிடிப்பு இந்தக் குடும்பத்தில் இருந்ததும், தன் தாயார் பேச்சுக்கு மாறு சொல்லாமல் 'செல்லக் குழந்தையா'யாகத் தன் கணவன் நடந்து வருவதும் அபிராமிக்குத் தெரியாதா என்ன?

அபிராமி படித்த பெண்; தாயற்றவள். ஆனால் கர்வமோ, அன்னை இல்லாத குறையோ அவளுக்கு ஏற்படவில்லை. மாமியாரை அவளுக்குப் பெரும்பாலும் பிடித்துத்தானிருந்தது. பொதுவாக மாமியார்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். காமாட்சி அம்மாளின் கெடுபிடிகளைப் பார்த்து முறுமுறுக்கவில்லை.

ஆனால் விவரமறிந்த தன் கணவரை இன்னும் 'பச்சைக் குழந்தை'யாக நினைத்துக் கொண்டிருப்பதும், அவர் என்றாவது ஆபீஸிலிருந்து தப்பித் தவறி நேரம் கழித்து வந்தால் 'இன்னும் காணோமே?'



என்று பதறுவதும் அபிராமிக்கு அசட்டுத்தனமாகப் பட்டது.

"ஏண்டா, குழந்தை! நேற்றுத் தான் ஆபீசுக்குப் பெரிய துரை வந்தார், அதனால் நாழியாகிவிட்டது என்றாய்; இன்று கூட என்ன?" என்று தன் கணவர் வீட்டுக்குள் நுழையும் போதே நாலு குடித்தனக்காரர்களுக்கு நடுவே மாமியார்

கேட்பதும், அவர், மென்று விழுங்குவதும் அபிராமிக்கு அகௌரவமாகப் பட்டது. இதுபோன்ற சின்ன விஷயங்களில் கூட மாமியார் தலையிடுவது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. "இப்படிப்பட்ட பிள்ளைக்கு ஒரு கல்யாணத்தை நடத்த அம்மாளுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ? கண்டிப்புக்கும், கருக்கும் ஒரு எல்லையே கிடையாதோ?" என்று பொருமும் அளவுக்கு அது மிஞ்சிவிட்டது.

நடராஜனும் அதற்கு 'ஏற்றபடி 'அம்மாச் செல்லமாக' இருந்தான். தட தட வென்று சைக்கிளில் உருண்டு ஆபீஸில் இருந்து வீட்டுக்கு வந்தவுடன் சட்டையைக் கழற்றி விட்டு நேராக தாயார் இருக்கும் இரேழித் திண்ணைக்கு வந்து விடுவான். 'டிபன்' சாப்பிடக் கூடத் தன் மனைவி இருக்குமிடத்துக்குச் செல்லாமல், "இப்படிக் கொண்டா, டிபனை!" என்று கட்டளையிட்டு விடுவான். அம்மாவிடம் அந்த நாள் கதைகளைக் கிளறிக் கிளறிப் பேசினால்தான் டிபன் அவனுக்கு உள்ளே இறங்கும். அப்போதெல்லாம் அபிராமிக்குத்தான் இந்த வீட்டின் சமையலறையின் பிரதிநிதிதான் போலிருக்கிறது என்ற நினைவு வந்து விம்மலாக வெடிக்கும்.

அபிராமி நடராஜனுக்கு வாழ்க்கைப் பட்டு விளையாட்டுப் போல ஏழெட்டு வருஷங்கள் குதித்தோடி விட்டன. ஆனால் தன் கணவனுடன் குஷியாகச் சற்று சம்பாஷித்தது, சினிமா டிராமாவுக்குக் கிளம்பிப் போகிறது என்பதெல்லாம் ரொம்ப ரொம்பக் குறைச்சல்.

ஒரு நாள் பீச்சுக்குப் போகலாம் என்று அபிராமி சமய சந்தர்ப்பம் பார்த்துச் சொல்லிவிட நடராஜன் அம்மாளையும் கூட்டிக் கொண்டு கிளம்பியதை இன்று நினைத்தாலும் 'போதும் பீச்சு!' என்று அவளுக்குப் புளித்துவிட்டது.

ஆனால் அபிராமி கெட்டிக்காரி. தன் குறைகளை அவ்வளவாக வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாக இருந்து வந்தாள். அதற்காக அந்த வீட்டில் குட்டிக் குழப்பம், உரிமைப் போராட்டம் எதுவும் ஏற்பட்ட இல்லை. அதை எல்லாம் ஒரு காரணமாகச் சொல்லிக் கொண்டு விருட்டென்று தன் பிறந்தகத்திற்கு ஓடக் கூட அவள் இஷ்டப் படவில்லை. 'அம்மா' இல்லாத ஒரு பிறந்தகத்தை அவள் 'பிறந்தகம்' என்று பாத்தியம் கொண்டாட இஷ்டப்படவில்லை.



மற்றபடி நடராஜ் கண்ணாகத்தான் வைத்திருந்தான் அபிராமியை. நகை, நட்டுக்களுக்கோ, புடைவை ரவிக்கைகளுக்கோ குறை எதுவும் வைக்கவில்லை. எதுவும் தாயார் மேற்பார்வையுடன் நடந்து வந்தது. சம்பளத்தை வாங்கிக் கொண்டு விள்ளாமல் விரியாமல் காமாட்சி அம்மாளிடம் கொடுத்து விடுவான். சைக்கிளுக்குக் காற்று அடிக்க அரையணா

கொடுக்க வேண்டுமென்றாலும் காமாட்சியம்மாள் கொடுத்தால்தான் உண்டு.

இப்படி இருக்கும்போதுதான் திடீரென்று ஒருநாள் காமாட்சிக்குக் காசிக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதற்கு என்று தன் மஞ்சள் காணியில் ஐந்நூறு வரையில் பணமாக்கிக் கையில் வைத்திருந்தாள். நடராஜன் சம்பளத்தில் அதற்கு எல்லாம் மீத்துக் கொடுக்க முடியாது என்று அவள் அறிவாள். ஆனால் சிறுசுகளான பிள்ளையையும், நாட்டுப் பெண்ணையும் விட்டு விட்டு வடக்கே வெகு தூரம் செல்லச் சஞ்சலமாக இருந்தது.

ஆனால் அபிராமி, இரண்டாங் குரலுக்கு அவசியமில்லாமல் ஓடி ஓடி வீட்டுக் காரியங்கள் செய்யும் அழகையும், நடராஜனைப் படுத்தாமல் காலாகாலத்தில் ஆபீசுக்கு அனுப்பி வைக்கும் சுறுசுறுப்பையும் கண்ட காமாட்சி அவளுக்குக் குடித்தனப் பொறுப்பு வந்துவிட்டதாக நினைத்தாள். இரண்டு மாதங்களுக்கு விட்டுத்தான் பார்ப்போமே என்று எண்ணினாள். அதற்கு ஏற்பச் சென்னையிலிருந்து காசி வரையில் 'யாத்ரா ஸ்பெஷல்' ஒன்று கிளம்பப் போவதைக் கேள்விப் படவே காமாட்சி அம்மாள் கிளம்பி விட்டாள்.

நடராஜனும் அபிராமியும் தனிக் குடித்தனம் செய்தார்கள். இதில் அவர்கள் அதிக சுகம் காண முடியவில்லை. அபிராமி ஸ்னோவும் பவுடரும் ரிப்பனுமாக வாங்கினாள். நடராஜன் கடனாளியானான்.

ஒருநாள் தலைவலி யென்று சொல்லிக் கொண்டு நடராஜன் வீட்டுக்கு வந்தபோது அபிராமி கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டிருந்தாள். அவளுடைய பகட்டான உடைகளும், கையில் தொங்கிய ஜம்பப் பையும், காலில் கவ்விக் கொண்டிருந்த ஸ்லிப்பரும் அவனைக் கிறுகிறுக்க வைத்தன.

"எங்கே...இப்படி....?" என்று வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான் நடராஜன்.

"மாட்டினி சினிமாவுக்குப் போகிறேன்! இந்தாருங்கள் சாவி" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு ரிக்ஷாவில் ஏறினாள் அபிராமி.

நடராஜனுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்தது. "சினிமா பார்த்து விட்டு அப்படியே பிறந்தவீட்டுக்கு ரயில் ஏறலாம்! இனி இந்த வீட்டுப்படி ஏறக்கூடாது. அம்மா இல்லாதது துளிர்த்து விட்டது போலிருக்கிறது. இந்நூறு ரூபாய்வரை கடன் ஏறி விட்டது. நாளைக்கு ரேஷன் வாங்க என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். இதில் சினிமாவா! போ! போயே விடு!" என்று சீறிவிட்டு 'விர்' ரென்று வீட்டுக்குள் போனான். அது தெருவாக இல்லாவிடில் அவளுடைய கன்னத்தில் அறைகூட விழுந்திருக்கும்.

அபிராமி நிமிஷம் நிற்கவில்லை; எழும்பூருக்கே கிளம்பி விட்டாள்.

காமாட்சி அம்மாள் வெளியூரிலிருந்து திரும்பி விட்டாள். வீடு இருக்கும் இருப்பு வந்தவுடன் புரிந்து விட்டது; பதறிப் போனாள். "எங்கே, அபிராமி?" என்று தான் வந்தவுடன் கேட்டாள்.

நடராஜன் "அம்மா! அம்மா! என்னை விட்டு நீ போனது முதல் நிம்மதியே இல்லை" என்று சிறு குழந்தை போல விம்மி விட்டு, அபிராமி படுத்திய பாட்டை விவரித்து, அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பி விட்டதையும் கூறினான்.

காமாட்சி அம்மாள் கணம் தயங்கவில்லை. "நான் நினைத்தேன்! பரவாயில்லை, உடனே அவளை அழைத்து வா. பாவம், சிறிசு! அவள் என்னத்தைக் கண்டாள்? இந்தக் குடும்பத்திற்குள் அவள் நுழைந்தவுடனேயே, குடும்பப் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்து, 'இப்படித்தான் குடித்தனம் நடத்த வேண்டும்' என்று நான் சொல்லியிருந்தேனானால் இப்படி எல்லாம் நேர்ந்திருக்காது. பிசகு என் மேல்தான்! நடராஜா! போ! நிமிஷம் நிற்காதே. அவளை நான் அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லி அழைத்து வா!" என்று காமாட்சி அம்மாள் மூச்சு விடாமல் சொன்னபோது நடராஜன் திகைத்துப்போனான். காசிக்குக் கொண்டு போன பணத்தில் நூறு ரூபாயை மீத்து அவனிடம் கொடுத்து "உடனே கிளம்பு" என்று மீண்டும் சொன்னபோது தெய்வமாக அவனுக்குக் காட்சி தந்தாள், காமாட்சி.

அபிராமி ஆச்சரியம் தாங்க மாட்டாமல் புருஷன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். காமாட்சியம்மாளின் கட்டளை மீதுதான் தன் கணவன் கூப்பிட வந்தான் என்று கேள்விப் பட்டவுடன் "அம்மா! என்னை மன்னியுங்கள். மேட்டையும், பள்ளத்தையும் ஒன்றாக நினைத்த பேதை நான். மேடு, மேடுதான்! பள்ளம், பள்ளமே!" என்று தேம்பினாள்.

"உன்னைப் போல இருந்த போது நானும் அப்படித்தானிருந்தேன்; என் மாமியார் தான் வாழ வழி காட்டினாள். அபிராமி! அழாதே!"—என்று காமாட்சி அம்மாள் கூறினபோது, அந்தப் பெருந்தன்மையை எப்படிப் பாராட்டுவது என்று அபிராமிக்குப் புரியவில்லை.

கிணற்றுத் தேவதை

ரா.நா.



2. இளவரசனின் பைத்தியம்

தேவதை மாயமான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. இளவரசன் கமரல்ஸமான் விழித்துக்கொண்டதும் சுற்றுமுற்றும் பார்த்தானல்லவா? அவன் கண்களுக்கு அவன் அருகில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த அழகி பஹதூராதான் தென்பட்டாள். மாயமான் ஒரு தேவதையானதால் அவன் கண்களுக்கு அவள் புலனாகவில்லை. தௌஹாஷ் அரக்கனாதலால் அவன் உருவமும் இளவரசனுக்குத் தெரியவில்லை.

தேவதைகளும் அரக்கர்களும் மனித இனத்திலிருந்து வேறு பட்டவர்களாதலால் அவர்களை மனிதர்களால் பார்க்க முடியாது. அவர்களாக விரும்பித் தங்களை வெளிப்படுத்திக் கொண்டால்தான் சாதாரண மனிதர்களுடைய பார்வையில் தென்படுவார்கள்.

தன் அருகில் ஒரு மஞ்சத்தில் ஒரு அழகி தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கமரல்ஸமான் பிரமித்துப் போனான். சற்று நேரம் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் காண்பது கனவோ என்று அவனுக்குச் சந்தேகமாகப் போய்விட்டது. அவன் அவளையே கண் கொட்டாமல் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களை நன்றாகக் கசக்கிவிட்டுக் கொண்டு மீண்டும் அவளைப் பார்த்தான். அவள் மறைந்து போய் விடவில்லை. தான் காண்பது கனவல்ல என்பது இப்பொழுதுதான் அவனுக்கு நிச்சயமாயிற்று.

பஹதூராவின் அழகு ஜொலித்தது. நீண்டு தரையில் புரண்டு கொண்டிருக்கும் அவள் கேசமும், முல்லையோ இருவாட்சியோ என்று எண்ணக்கூடிய அவள் முகப் பளபளப்பும் இளவரசனைப் பெரிதும் பரவசப்படுத்தி விட்டன. அவள் மாயத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்ததால் இளவரசன் அவளை முத்தமிட்டும் அவள் விழித்துக் கொள்ளவில்லை. அவள் அழகைக் கண்டு பரவசமடைந்த இளவரசனுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று. கலியாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று தான் பிடிவாதம் பிடித்ததை மாற்றுவதற்காகத் தனது தந்தை இந்த மாயாவிப் பெண்ணை அனுப்பி யிருக்கிறாரோ என்று நினைத்தான். உடனே இளவரசி கையிலிருந்த மோதிரத்தை எடுத்துத் தான் அணிந்து கொண்டு தன் கையிலிருந்த மோதிரமொன்றை அவளுக்கு அணிந்து விட்டு மறுபடியும் படுத்துத் தூங்கிவிட்டான்.

ராக்ஷஸன் தௌஹாஷ் வெட்டுக்கிளியாக மாறி பஹதூராவை எழுப்பி விட்டுத் தன் சுய ரூபத்தை அடைந்தான். இளவரசி விழித்துக் கொண்டவுடன் தன் அருகில் ஒரு அழகிய இளைஞன் தூங்கிக் கொண்டிருப்பது கண்டு ஆச்சரிய மடைந்தாள். தன் தந்தை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்திய இளைஞன் இவன்தானோ எனச் சந்தேகித்தாள். அவனை எழுப்பி அவனிடம் தன் ஆசையைத் தெரிவித்துக் கொள்ள விரும்பினாள். ஆனால் கமரல்ஸமான் மாயத் தூக்கத்திலாழ்ந்திருந்ததால் இளவரசியின் முயற்சிக்கு இணங்கி எழுந்திருக்கவில்லை. தன் கையில் இளவரசனின் மோதிரம் இருக்கக் கண்டு, அவனும் தன் மீது ஆசை கொண்டிருப்பதாக எண்ணித்து அவளும் மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

இளவரசன் கமரல்ஸமானைவிட இளவரசி பஹதூராவே ஆசை வார்த்தைகள் அதிகம் பேசினதனால் அவ்விருவரிலும் கமரல்ஸமானே அதிக அழகன் என்று தேவதை மாயமான் முடிவு கூறினாள். சினந்து இளவரசியை அவள் நாட்டுக்குக் கொண்டு போய் விட்டு விடும்படி தௌஹாஷ், அறுகொம்பு அரக்கன் இருவருக்கும் கட்டளை யிட்டு விட்டு மாயமான் மறுபடியும் கிணற்றுக்குள் மறைந்து விட்டாள்.

அடுத்த நாள் காலை கமரல்ஸமான் விழித்துக் கொண்டான். முதல் நாள் இரவு தான் கண்ட பேரழகி தன் அருகில் இல்லாதது கண்டு ஆச்சரியமடைந்தான்.



அவன் எங்கே, எப்படி மறைந்தான் என்று தன் அடிமைப் பெண்ணை அழைத்துக் கேட்டான். தனக்குத் தெரிந்து அந்த இடத்திற்கு எந்தப் பெண்ணும் வரவில்லை என்று அடிமை கூறியதும், கமரல்ஸமானுக்கு ஆத்திரம் பொங்கிற்று. உடனே அந்த அடிமையைப் பிடித்துக் கிணற்றுக்குள் இறக்கித் தண்ணீரில் மூழ்கடிக்க முயன்றான். அந்த அடிமை தன் உயிருக்கஞ்சி அவ்வழகியைப் பற்றித் தனக்குத் தெரியும் என்பாசாங்கு செய்து, தன்னை வெளியே விட்டு ஈர உடையை மாற்றிக் கொள்ள அனுமதித்தால் தனக்குத் தெரிந்தவற்றைக் கூறுவதாக வாக்களித்தான்.

இளவரசனும் அடிமையை நம்பி அவனை விடுவித்து உடனே வந்து உண்மையைக் கூறும்படி கட்டளையிட்டான். அடிமை இளவரசனின் கையிலிருந்து விடுபட்டதும், வெளியே சென்று கதவைத் தாளிட்டுவிட்டு அரசனிடம் ஓடோடியும் சென்று இளவரசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகக் கூறினான்.

இதைக் கேட்டதும் அரசன் கவலை மேலிட்டவனாய்த் தனது பிரதம மந்திரியை அழைத்து இளவரசனைப் போய்ப் பார்த்து வரச் சொன்னான்.

பிரதம மந்திரி அரசனுடைய உத்தரவுப்படி இளவரசன் இருந்த சிறைச்சாலைக்குச் சென்று அவனை நடந்தது என்ன என்று விசாரித்தான். இளவரசன் முதல் நாள் இரவு நடந்ததைச் சொன்னான். பிரதம மந்திரி அதைச் சிறிதும் நம்பாமற் போகவே அவனையும் கமரல்ஸமான் அடித்து விரட்டினான். பிரதம மந்திரி தட்பினேன் பிழைத்தேன் என்று ஓடி மன்னனிடம் முறையிட்டான்.

கடைசியாக அரசனே தன் மகனின் நிலைமையை அறிந்து வரச் சிறைக்குச் சென்றான். அரசனைக் கண்டவுடன் இளவரசன் அவனை மிகவும் மரியாதையுடன் வரவேற்று "தந்தையே, தாங்கள் நேற்றிரவு அனுப்பி வைத்த பேரழகியை மணந்து கொள்ள நான் தயாராயிருக்கிறேன்" என்று மிகவும் பணிவாகக் கூறினான்.

தான் எந்தப் பெண்ணையும் அனுப்பி வைக்கவில்லை என்று அரசன் கூறவே இளவரசன் முதல் நாள் இரவு தான் கண்ட பேரழகியைப் பற்றி விரிவாகக் கூறிக் கடைசியாகத் தன் கையில் அந்த அழகியின் மோதிரம் இருப்பதைத் தந்தைக்குக் காட்டினான். அரசனுக்கு எல்லாம் ஒரே ஆச்சரியமாயிருந்தது. தன் மகன் பைத்தியமல்ல என்பதை அறிந்து கொண்டானானாலும், தன் மகன் கூறும் சம்பவங்கள் எப்படி நிகழ்ந்திருக்கக் கூடும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அரசன் தன் மகனை மறுபடியும் அரண்மனைக்கே அழைத்துச் சென்றான். தான் இரவில் கண்ட பேரழகியைக் காணாது உயிர் வாழ்வதில் பிரயோஜனமில்லை எனக் கருதி இளவரசன் வருந்தி வாடினான். நாளடைவில் அவன் நோய்வாய்ப் பட்டுப் படுக்கையோடு கிடந்தான்.

தனது மகன் இவ்வளவு பரிதாப நிலைக்கு வந்துவிட்டது கண்டு அரசன் மிகவும் வருந்தினான். அவனை எப்படி குணமாக்குவது என்பது பற்றி ரொம்பக் கவலையடைந்தான். அவனுடைய தீராத நோய்க்குத் தானே ஒரு காரணம் என்பதை நினைக்க நினைக்க அரசனுக்கு மேலும் மேலும் மன வருத்தம் அதிகமாயிற்று.

கடந்து போன காரியத்தைக் குறித்து எவ்வளவுதான் வருந்தி என்ன பயன்? வருந்தியதனால் காரியம் ஆகிவிடுமா? ஆகவே, அரசன் ஒருவாறு தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு யோசித்தான். அப்பொழுது அவனுக்குத் தான் கடற்கரையில் கட்டியிருக்கும் அழகிய அரண்மனையின் ஞாபகம் வந்-





மணி:—டேய் விச்சு, எங்கப்பா ஒரு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. சிமிண்டிக்குப் 'பர்மிட்' வாங்கவில்லை. இடத்திற்கு யாரிடமும் போய்க் கெஞ்சவில்லை. கார்ப்பொரேஷனில் கூடப் 'பிளான்' எதுவும் காட்டவில்லை.

விச்சு:—அடேயப்பா! உன் தகப்பனுக்கு என்ன தைரியமடா! வீடு ரொம்பப் பெரிசோ! கட்டி முடிந்து விட்டதா?

மணி:—பெரிய கோட்டை மாதிரி யாகிவிட்டதடா! இன்னும் முழுக்க முடியவில்லை.

விச்சு:—நான் பார்க்கலாமா?

மணி:—அவர் கட்டிக் கொண்டிருக்கும் மனக் கோட்டையைத் தான் சொன்னேன்.

தது. 'ஒருவேளை இளவரசனை அங்கே விட்டு வைத்தால் மனம் தெளிவடையலாம்' என்ற எண்ணம் உண்டாகவே, சந்தோஷத்துடன் அரசன் இளவரசனை அந்த அரண்மனைக்கு அழைத்துச் சென்று சகல சௌகரியங்களையும் ஏற்படுத்தி வைத்தான்.

பிறகு தன் மகனுக்குத் தானே பணிவிடை செய்து அவனைப் பலவிதமாக உற்சாகப் படுத்தினான்.

இங்கு இளவரசன் இவ்வாறு வருத்தத்தினால் வாடிக் கொண்டிருக்கையில் சீன தேசத்தில் அந்நாட்டு இளவரசி பதுஅராதான் இதே மனோ நிலையில் புழுங்கிக் கொண்டிருந்தாள்.

முதல் நாள் இரவு ஒரு அழகிய யுவனைப் பார்த்து மகிழ்ந்தது அவள் மனதை விட்டு அகலவில்லை. காலையில் விழித்தெழுந்ததும் இரவு தான் கண்டு மகிழ்ந்த பேரழகனைக் காணோமே என்று கவலையுற்றாள். தனக்குப் பணி புரியும் கிழவிகளை அழைத்து இளவரசன் எங்கே என்று கேட்டாள். அவர்கள் யாரும் இளவரசனைப் பார்க்கவில்லை யாகையால் இளவரசியின் கேள்வியைக் கேட்டு விழிவிழி என விழித்தார்கள். இளவரசி தூங்கிக் கொண்டிருக்கும் அறைக்கு எந்த இளைஞனும் வரவில்லையே என்று தனது தாதியும் கூறியவுடன் அவளுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. இந்தக் கோபாவேசத்தில் அருகிலிருந்த ஒரு கிழவியைத் தலைமயிரைப் பிடித்து இழுத்து, அவளை அடித்து, "கிழட்டு மாயக் கழுதையே! நான் கண்ட இளைஞன் எங்கே என்று சொல்லுகிறாயா, கொன்று விடட்டுமா?" என்று கேட்டாள்.

கிழவி உயிர் தப்பினால் போதுமென்று இளவரசியின் பிடியிலிருந்து நழுவி அரசனிடம் ஓடித் தான் கண்டதைக் கூறினாள். இளவரசிக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகவும் அறிவித்தாள். இதைக் கேட்டு அரசன் தன் மகள் இருப்பிடத்துக்கு ஓடோடியும் வந்தான். தன் தந்தையைக் கண்டதும் இளவரசி கெஞ்சும் குரலில் கூறினாள்:

"தந்தையே! நேற்றிரவு நான் பார்த்த அழகிய இளைஞனை மணந்து கொள்ளத் தாங்கள் அனுமதிக்க வேண்டும். அவனை ஒளித்து வைத்து என்னை வேதனைப்பட விடாதீர்கள். சீக்கிரமே விவாகம் செய்யுங்கள்!"

இந்த விசித்திரக் கதையை அரசன் நம்பவேயில்லை. தன் மகளுடைய பைத்தியம் முற்றிவிட்டது என்று கவலையடைந்தான். அரசன் தன் கதையை நம்பவில்லை என்பதை அறிந்த இளவரசி தன் கையில் அந்த இளைஞனின் மோதிரம் இருப்பதைக் காட்டினாள். இது அரசனின் வியப்பை அதிகரித்தாலும், அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்கிற முடிவை அரசன் மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. இளவரசியைத் தனி அறையில் தள்ளி அவளுடன் அவளுடைய தாதிகள் வேறு யாரும் இருக்கலாகாது என்று உத்தரவிட்டு விட்டு அரண்மனைக்குச் சென்றான். (தொடரும்)

ஓய்வு கிடைத்தது!

கு. ரா.

பிரபல பேச்சாளர் கனகசபையின் காதில் "எலுமிச்சம் பழம் நூறு மூணு ரூபாய்" என்று வாசலில் ஒருவன் விற்றுக் கொண்டு போன குரல் விழுந்ததும் எலுமிச்சம் பழக்காரனைக் கூப்பிட்டார். நிறைய ரஸமுள்ள பழங்களாக ஒரு டஜன் பொறுக்கினார். கடைக்காரன் கேட்ட விலையைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு, மனைவியைக் கூப்பிட்டு. "இன்று பகல் குடிப்பதற்குப் பேஷான ஷர்பத் தயார் செய்யவேண்டும். இந்த எலுமிச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு போ" என்றார்.

பகல் மணி சுமார் பன்னிரண்டு இருக்கும். தெருவில் 'பாதாம் ஐஸ்', என்று ஒரு பையன் விற்றுக்கொண்டு போனதைக் கேட்ட கனகசபை அவனைக் கூப்பிட்டு நான்கணாவுக்கு 'பாதாம் ஐஸ்' வாங்கினார். ஐஸ் பையன் ஆச்சரியத்தினால் உறைந்து போனவன்போல் ஒரு நிமிஷம் அசையாமல் நின்றுவிட்டுப் பிறகு போய் விட்டான்.

தன்னுடைய கணவன் ஐஸ்கிரீம் சாப்பிடும் அதிசயக் காட்சியைக் கண்ட ஸ்ரீமதி கனகசபை முகவாய்க் கட்டையில் வைத்த கையை எடுக்காமலேயே "இது என்ன? குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடின கதையைப்போல!" என்றாள்.

"நீ சும்மா இரு. உனக்கு விஷயம் ஒன்றும் தெரியாது" என்றார் கனகசபை வாயில் ஒரு கோடியில் ஐஸ்கிரீம் வழிவதைத் துடைத்துக் கொண்டே.

"அப்படியானால் ஷர்பத் வேண்டாம் அல்லவா? எலுமிச்சம் பழங்களை ஊறுகாய் போட்டு விடட்டுமா?" என்றாள் ஸ்ரீமதி கனகசபை.

"ஊறுகாய் போடுவதா? அந்தப் பேச்சே வேண்டாம். நான் முதலிலே சொன்னபடி ஷர்பத் செய்துதான் ஆக வேண்டும். மத்தியானம் காபிக்குப் பதில் இன்று ஷர்பத்துத்தான்" என்றார் கனகசபை தீர்மானமாக.

முகவாய்க் கட்டையைத் தோளிலோ அல்லது தோளில் முகவாய்க் கட்டையையோ இடித்துத் தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டு சமையலறையை நோக்கிச் சென்றாள் ஸ்ரீமதி கனகசபை.

அதன் பிறகு கனகசபை செய்த சில அபத்தியமான காரியங்கள் அவர் மனைவியை மட்டும் அல்ல; வேறு யாரையுமே திடுக்கிட வைப்பவை. தெருத்திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டு பனம் நுங்கு விற்றவனிடம் பத்து நுங்கு வாங்கித் தின்றார். பிறகு இரண்டு இளநீர்கள் வாங்கிக் குடித்தார்.

சரியாக இரண்டு மணிக்கு மூன்று டம்ளர்கள் எலுமிச்சம் பழ ஷர்பத் சாப்பிட்டார், நான்காவது டம்ளர் ஷர்பத்தைத் தர அவருடைய மனைவி மறுத்து விட்டாள். "இப்படிக் கண்டபடி ஐஸ்கிரீமும் ஷர்பத்தும் உள்ளே சென்றால் (அவர் நுங்கும் இளநீரும் சாப்பிட்ட விவரம் அம்மாளுக்குத் தெரியாது) உடம்புக்கு ஆகுமா? நாளைக்கே ஜலதோஷம் பிடித்துத் தொண்டை கட்டிக் கொண்டால் என்ன செய்வீர்கள்?" என்றாள் அம்மாள்.

"அதிகம் பேசாதே. உன்னுடைய தொண்டை கட்டிக்கொள்ளப் போகிறது" என்றார் கனகசபை.

மாலை ஐந்து மணிக்கு ஸ்ரீ கனகசபை அவர்கள் தலைக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டு, குழாயின் அடியில் உட்கார்ந்து பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்தார். வெந்நீர் அண்டாவை விட்டால் வேறு கதி இடையாது என்று அன்று வரை இருந்தவர், இன்று மாலை வேளையில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் பொழுது, எண்ணெய் தேய்த்து முழுகுவதைக் கண்ட ஸ்ரீமதி கனகசபைக்கு ஒன்றுமே புரியவில்லை. மிகுந்த எலுமிச்சம் பழங்களை அவருடைய தலையில் தேய்த்துப் பார்த்தால் என்ன என்று கூட நினைத்தாள்.

*

கோடை முகில்கள் வானவீதியில் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தன. படபட வென்றும் சடசட வென்றும் தூறிக் கொண்டிருந்தது. எண்ணெய் ஸ்நானம் முடிந்ததும் தலையைக் கூடத் துவட்டிக் கொள்ளாமல், கையில் குடையையும் எடுத்துக் கொள்ளாமல் ஸ்ரீ கனகசபை தெருக்கோடி வரை மழையில் நனைந்து கொண்டே போய்விட்டு வந்தார். மழையில் நனைய வேண்டும் என்பதுதான் அவர் வெளியே சென்றதின் காரணம் என்பது அவருடைய மனைவிக்குத் தெரியாமல் இல்லை.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு வீட்டு மாடி தளத்தில், வெட்ட வெளியில் படுக்கையை விரித்ததும் அவருடைய மனைவிக்கு அடக்க முடியாத கோபம் வந்து விட்டது. "காலையிலிருந்து அபத்தியமாகச் செய்து வருகிறீர்களே?

மழைபெய்த தரையில், சிலுசிலுவென்று அடிக்கும் காற்றில் படுத்துக் கொண்டால் ஈரம் அல்லவா காலைக்கு வந்து சேரும்!" என்றாள் ஸ்ரீமதி கனகசபை.

"இதெல்லாம் அபத்தியமேயானாலும் அபத்தம் அல்ல" என்று பதிலளித்து விட்டுத் தூங்கப் போனார் ஸ்ரீ கனகசபை.

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை காலை ஏழு மணிக்கு, ஸ்ரீ கனகசபை எழுந்திருப்பதற்கு முன்பே, அவரைப் பார்க்க நான்கைந்து பேர்கள் அவருடைய வீட்டுத் திண்ணையில் கூடி இருந்தார்கள். ஒரு சங்கத்தின் தலைவர், மற்றொரு சங்கத்தின் உபதலைவர், வேறு இரண்டு சங்கங்களின் காரியதரிசி, கூட்டுக் காரியதரிசி ஆகியவர்களே வந்திருந்தவர்கள்.

சுமார் ஏழேகால் மணிக்குக் கண் விழித்த கனகசபையின் கண்கள் கபகபவென்று எரிந்து கொண்டிருந்தன. படுக்கையைச் சுருட்டி விட்டு எழுந்த அவர் கண்களில் காலைச் சூரியனின் கிரணங்கள் தாக்கினதும் இன்று ஞாயிற்றுக் கிழமை என்ற எண்ணமும் அவர் மூளையைத் தாக்கியது. மாடிப் படிகளில் தடதடவென்று ஏறி இறங்கும் அவர் இன்று தட்டுத் தடுமாறி இறங்குவது அவருக்கே சந்தோஷமாக இருந்தது. உடம்பு முழுதும் கனத்தது. தலையில் ஏதோ ஒன்று புகுந்து கொண்டு குடைவது போன்ற ஒரு உணர்ச்சி அவருக்கு இருந்தது.

"நமஸ்காரம்!" "வணக்கம்" "குட் மார்னிங்" என்ற பல குரல்கள் அவரை (அவர் வீட்டிலேயே) வரவேற்றன. தன்னைப் பேட்டி காண வந்தவர்களுக்குப் பதில் வணக்கம் சொல்ல வாயெடுத்த ஸ்ரீ கனகசபையின் வாயிலிருந்து பேச்சே வரவில்லை. தொண்டை புரண்டு கொடுக்காமல் பாறையாய்க் கட்டியிருந்தது.

"உங்களுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறதே! தொண்டை இப்படிக் கட்டி இருக்கும்போது நீங்கள் எப்படிப் பிரசங்கம் செய்வீர்கள். நாங்கள் அடுத்த வாரம் வருகிறோம்" என்று விடை பெற்றார்கள் காரியதரிசிகளும் உபதலைவர்களும்.

ஒரு காகிதத்தில், "பார்த்தாயா, என் சாமர்த்தியத்தை! எனக்கு இந்தச் சங்கக்காரர்கள் ஒரு வாரம் லீவு கொடுத்திருக்கிறார்கள். உன் தங்கை பெண் கல்யாணத்துக்குப் போக வேண்டுமென்றாயே. நாளைக்கே புறப்படு!" என்று எழுதி மனைவிக்குக் காட்டினார் ஸ்ரீ கனகசபை. ஸ்ரீமதி கனகசபைக்கும் பேச முடியவில்லை!

பாம்பா? பழுதையா?



இந்திய அரசியல் சட்டத்தில் 19. ஏ. பிரிவுக்குச் செய்த திருத்தம் பத்திரிகைகளின் உரிமையைப் பாதிக்குமா பாதிக்காதா என்று பத்திராதிபர்களுக்குள் விவாதம் நடந்து வருகிறது.

அழகி நளினா

நிமலன்

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நளினாவின் கணவன் அன்று வருவதாகக் கடிதம் எழுதியிருந்தான். நளினா அடைந்த குதூகலம் கொஞ்ச நஞ்சமல்ல. தன் கணவனை வரவேற்கத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டாள்.

கண்ணாடி முன் நின்று தன் தலை பின்னிக் கொண்டே. 'நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன். என்னைப் பார்த்தால் அவர் எவ்வளவு சந்தோஷப் படுவார்...ஆனால் எனக்கு அழகில்லாத எதைக் கண்டாலும் பிடிப்பதில்லை. அவலட்சணம் பிடித்த பெண்கள், வஸ்துக்கள் இவையெல்லாம் உலகில் இல்லாமலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.....' இவ்வாறு எண்ணினாள்.

இந்தச் சமயத்தில் "அக்கா, எனக்கும் தலை பின்னேன்!" என்று கேட்டுக் கொண்டே ஓடிவந்தாள் தங்கை விஜயா.

"போடி, சனியனே! என்னைத் தொடாதே! கரும்பூதமே!" என்று திட்டி விரட்டிவிட்டாள்.

இதைக் கேட்ட நளினாவின் தாயார், "ஏன்டி நளினா! அவள் உன் தங்கை தானே? அவளிடம் உனக்கு எள்ளத்தனையும் பாசமில்லையே! பாவம், குழந்தை! அவளை அப்படி அடித்து விரட்டி விட்டாயே! உனக்கு என்றைக்குத் தான் புத்தி வருமோ!" என்று சொல்லி வருத்தப்பட்டாள்.

பகல் ஓட, மாலை உருவாயிற்று. மாப்பிள்ளை சுந்தரம்—நளினாவின் கணவன்—வந்து விட்டான்.

"வா, சுந்தரம்! வெகுநாளாகக் கடிதமே இல்லையே" என்று புன்னகையுடன் வரவேற்றார் அவன் மாமனார் கணேசய்யர்.

"வீடு கிடைத்த பிறகு தான், வருவதென்று சபதம் செய்திருந்தேன். இப்போதுதான் வீடு மாம்பலத்தில் கிடைத்திருக்கிறது. ஒண்டுக் குடித்தனம் தான்!" என்று கூறிய சுந்தரம் விஜயா இருந்த பக்கம் திரும்பி அன்புடன் "இந்தா விஜயா சாக்லேட்" என்று பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுத்தான்.

இச்சமயம், நளினா காப்பியைக் கொண்டு வந்தாள். அக்காவைக் கண்டதும் விஜயா சுந்தரத்தின் பின்னால் மறைந்து நின்றாள்.

"என்ன நளினா, உன்னைக் கண்டு விஜயா பயப்படுகிறாள்! இன்னமும் பழைய மாதிரியே இருக்கிறாயா?"

சுந்தரம் ஒரு வாரம் தங்கினான். கணவனுடன் ஊருக்குப் புறப்பட்ட நளினாவிற்குப் புதுமையாக இருந்தது வாழ்க்கையின் ஆரம்பம். தங்கையை விட்டுப் பிரிந்தது அவளுக்கு ஆறுதலை அளித்தது.

சென்னைக்கு வந்த தம்பதிகளை வீட்டுக்கார அம்மாள் வரவேற்றாள். நளினாவிற்கு அந்த அம்மாளைப் பிடித்து விட்டது. வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

மாலையில் வீட்டுக்காரருடைய பெண் கமலா, பள்ளிக் கூடத்திலிருந்து வந்தாள். அவளைக் கண்ட நளினாவின் முகத்தில் ஆயிரக் கணக்கான அருவருப்பு மடிப்புக்கள் விழுந்தன.

கமலாவுக்கு ஒரு கால் ஊனம். அம்மைத் தழும்பு முகத்துடன் பூ விழுந்த கண் வேறு. இதையெல்லாம் பார்த்துத் தான் அருவருப்புக் கொண்டாள் நளினா.

ஆகவே, எதிலும் பற்றில்லாமல் குடித்தனம் செய்தாள். கணவனிடம் வேறு வீடு பார்க்கச் சொன்னாள். அன்றொரு நாள் நளினா புதுச்சேலை அணிந்து கணவனிடம் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது "மாமி, புதுச் சேலை உங்களுக்குப் பொருத்தமா யிருக்கு" என்று கூறிக் கொண்டு வந்தாள் கமலா. அது மட்டுமல்ல; நளினாவின் புடவையைத் தொட்டும் பார்த்து விட்டாள்.

"சீ, தொடாதே! கழுதை!" என்று வெகுண்டு நளினா தன்னை மறந்து கமலாவை அறைந்து விட்டாள்.



"எனக்கும் தான் வயசு தொண்ணூறு ஆகிறது. ஒருத்தர் வேண்டாதவா என்று கிடையாது!"

"எல்லாரும் போய்ட்டாளாக்கும்!"

இந்த லாமாக்கள் யார்?

திபேத் நாட்டை ஆளும் குழந்தை மன்னர்களைத் தான் தலாய் லாமா என்றும் பஞ்சன் லாமா என்றும் சொல்லுகிறார்கள். இவ் விருவருக்கும் வேற்றுமை என்ன? தலாய் லாமா கொம்பு உள்ளவர் என்றும், பஞ்சன் லாமா கொம்பு இல்லாதவர் என்றும் பாமர ஜனங்கள் கூறுவார்கள்! ஆனால் இந்த இரண்டு லாமாக்களையும் திபேத் மக்கள் சற்றேறக்குறைய கடவுளாகவே கருதுகின்றனர். இந்த இருவரும் புத்த பகவானின் அவதாரங்கள் என்பது திபேத் ஜனங்களின் சித்தாந்தம்.



தலாய் லாமா

தலாய் லாமா திபேத்தின் அரசியல் அதிபராகத் திகழ்கிறார். தலாய் லாமாவுக்கு மரணம் இல்லை என்று திபேத் வாசிகள் கருதுகிறார்கள். ஒரு தலாய் லாமா மாண்ட அதே விநாடியில் அவர் குழந்தையாகப் பிறக்கிறார் என்பது அந்த நாட்டினரின் நம்பிக்கை. தலாய் லாமா இறந்ததும் திபேத் தலைவர்களும் மத குருக்களும் லாஸா நகரை அடுத்துள்ள தெய்வீக ஏரியில் சென்று பார்ப்பார்கள். அப்போது அவர்களுடைய கண்களுக்கு ஒரு முகம் தெரியுமாம். உடனே அத்தகைய முகத்துடன் அந்த நேரத்திலே திபேத்தைச் சேர்ந்த எந்த இடத்தில் குழந்தை பிறந்தது என்பதைத் தேடிப் பார்த்து மேற்படி குழந்தைக்கு உடனே அடுத்த தலாய் லாமாவாகப் பட்டம் சூட்டுகிறார்கள். இப்போது திபேத்தை ஆட்சி புரிபவர் பதினாலாவது தலாய் லாமா ஆவார். இவரிடம் திபேத் ஜனங்களுக்குள்ள பய பக்திக்கு எல்லையே இல்லை. தலாய் லாமாவைக் கடவுளின் அவதாரம் என்று அவர்கள் கருதுவதால், அவருக்காக அவர்கள் எத்தகையத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

★

அரசியல் விஷயங்களில் தலாய் லாமா திபேத்தின் அதிபராக இருப்பது போல், ஆத்மார்த்த விஷயங்களில் பஞ்சன் லாமா திபேத் மக்களின் அதிபராக விளங்குகிறார். இவ்விரு கட்சியினருக்குள் போட்டியும் உண்டு. பஞ்சன் லாமாவைத் தேசப் பிரஷ்டம் செய்து விட்டுத் தலாய் லாமா கட்சியினர் 1924-ம் வருஷத்திலிருந்து திபேத் நாட்டை ஆட்சி புரிந்து வருகிறார்கள். சில மாதங்களுக்கு முன் சீனு திபேத் மீது படையெடுத்த போது தலாய் லாமா தலைநகரான லாஸாவிலிருந்து வெளியேறி இந்திய எல்லைக்கு அருகில் வந்து வசிக்கலானார். பஞ்சன் லாமா பீகிங் சென்றார். திபேத் மக்களிடையே தலாய் லாமாவுக்குள்ள செல்வாக்கைக் குறைத்து, பஞ்சன் லாமாவைத் தங்களுடைய கருவியாக உபயோகிக்கச் சீன சர்க்கார் முயற்சி செய்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இந்த லாமாக்கள் யார் கையில் இருக்கிறார்களோ, அவர்கள்தான் திபேத் நாட்டின் உண்மையான மன்னர்கள் எனலாம்!



பஞ்சன் லாமா

கதிகலங்கிய கமலாவை வாரி அணைத்துச் சமாதானப் படுத்திய சுந்தரம் கனியை எரித்து விடுபவன் போல் பார்த்தான்.

அன்று அவன் மௌனமாக ஆபீஸுக்குச் சென்று விட்டான். கனிவுக்குத் தன் உள்ளம் உடைந்து விட்டது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது. அவள் வயிற்றைக் குமட்டியது. மனச் சாந்தியைத் தேடிய அவள் சிறிது நேரத்தில் கண் அயர்ந்தாள். அரைத் தூக்கத்தில் அவள் ஒரு கனவு கண்டதும், மிரண்டு கண் விழித்த அவள் முகம் வெளிறியது.

எதிரே வீட்டுக்கார அம்மாள் நின்றிருந்தாள் "வாங்கோ, மாமி" என்று கூறிக் கொண்டே பரபரப்புடன் எழுந்தாள் கனி.

"கனி, இன்றைக்கு நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும்......"

"மாமி, என்னை மன்னித்து விடுங்கள். என் மேலேதான் தப்பெல்லாம். எனக்குப் புத்தி வந்தது. குழந்தை கமலாவிடம் மிருகம் போல் நடந்து கொண்டு விட்டேன். அவளைப் போல எனக்கொரு குழந்தை பிறந்துவிட்டால்—"

"என்ன உளறுகிறாய்? கண்டபடி நினைக்காதே!" என்றாள் மாமி.

"மாமி, இப்போ ஒரு கனவு கண்டேன். கமலாவைப் போல எனக்கொரு குழந்தை பிறக்கப் போவதாக......வெறும் கனவுக்கே எவ்வளவு பதட்டமடைந்தேன். உங்கள் மனது தங்கம்தான்......"

"கனி, பயப்படாதே. என் பெண்போல நீ. உனக்கு நல்ல குழந்தைகள் பிறக்கட்டும். மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன்" என்றாள் மாமி அன்புடன்.

★

சாலங்கிய மனத்துடன் மாலை, சுந்தரம் வீட்டுக்கு வந்தான். அவன் எதிர்பாராதவிதமாக கனி கமலாவுக்குத் தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்த காட்சி அவனை எவ்வளவு பரவசத்தில் ஆழ்த்தியது!

தன் கணவனைக் கண்டதும் கனி கூறினாள்:

"இதோ, என் தங்கையின் ஜடை அலங்காரத்தைப் பாருங்கள்...எத்தனை வருஷங்கள் புத்தியில்லாமல் இருந்து விட்டேன். இனி என்னை மன்னிப்பீர்களா?"

எத்தனை நிலம் வேண்டும்?

ஒரு குழந்தையிடம், "நான் சென்னைக்குப் போகிறேன் பாப்பா, உனக்கு என்ன பொம்மை வேண்டும்!" என்று கேட்டால், அது சென்னையிலுள்ள அவ்வளவு பொம்மைகளையும் இன்னும் அங்கில்லாத சில பொம்மைகளும் தனக்கு வேண்டுமென்று கூறும். அந்தச் சிறு குழந்தையைப் போலவேதான் சாதாரண ஜனங்களைப் பார்த்து "உங்களுக்கு எத்தனை நிலம் வேண்டும்!" என்று கேட்டால் பதில் சொல்லுவார்கள். நிற்க.

ஐந்து ஏக்கர் நிலமுள்ளவன் 10 ஏக்கரிருந்தால் 'ஜமாய்த்து விடுவேன்' என்பான். 10 ஏக்கருள்ளவன் 20 ஏக்கர் இருந்தால் எதேஷ்டம் என்பான். 50 ஏக்கருள்ளவன் 100 ஏக்கர் இருந்தால் பரம திவ்ய மென்பான். இது உலக இயல்பு. சுருங்கச் சொன்னால் மனிதனின் நில ஆசைக்கு வரம்பில்லை.

மேல் நாடுகளில் விவசாயங்கள் நடத்துவதை எடுத்துக் கூறி நம் நாட்டிலும் அது போல் நடத்த வேண்டும் என்று கூறுபவர்களின் சாயம்தான் வெளுக்கிறது. ஏனென்றால் அவர்களெல்லாம் ஏட்டின் மூலம் விவசாயத்தின் நுணுக்கங்களை யறிந்து பிரசாரம் செய்பவர்களாய்த்தா னிருக்க வேண்டும்.

யந்திரக் கலப்பையைக் கொண்டு மேடு பள்ளங்கள், தரிசு நிலங்கள், காடுகள் முதலியவைகளை அழிக்கப் பயன்படுத்தலாம். ஆனால் இந்த 'டிராக்டர்'களைக் கொண்டு, நல்ல நிலங்களை எப்பொழுதும் உழுதால் வேலை செய்யும் பாட்டாளியின் வயிற்றில்தான் அடிக்கிறோம்.

நாமென்ன ஜனப் பெருக்கத்தில் குறைந்தவர்களா! அல்லது நம் நாட்டில் மாடுகளுக்குப் பஞ்சமா! அல்லது ஆளுக்கு 10 ஏக்கர் விகிதம் செய்துகொள்ளும் அளவுக்கு நிலங்கள்தான் குறைந்து விட்டதா! இல்லை. நமது சோம்பேறித்தனம்தான் நன்றா யிருக்கும் நிலங்களுக்கும் உலை வைக்கிறது.

ஒரு பிராசுதாரருக்கு 1000 ஏக்கர் நிலமிருந்தால் அவரைப் பணக்காரன் என்கிறார்கள். அதைப் பங்கு போடவும் கூசமாட்டேன் என்கிறார்கள். வருமானத்தில் பாதி லாபம் கேட்கவும் தயங்க மாட்டேன் என்கிறார்கள்.

நிலம் என்பது வர்த்தகமல்ல.

விவசாயத்துக்கு இயற்கையின் இரக்கம் வேண்டும்; (மழை பெய்ய வேண்டும்;) நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்க வேண்டும்; கடைசியாக நிலத்தின் பங்குக்கு, அது நன்றாக விளையவும் வேண்டும்.

வியாபாரத்தில் காதில் 'போனை' வைத்துக் கொண்டு, 'பங்கு மார்க்கெட்'டை நோட்டம் பார்த்துக் கொண்டே லக்ஷாதிபதியாகவும் கோடீசுவரனாகவும், ஆகலாம். ஆனால் விவசாயத்தில் அப்படியல்ல.

உழுது, பாடுபட்டு, நாற்று நட்டு, களையெடுத்து, அறுத்து, போரடித்து, நெல்லைச் சுத்தி செய்து, சாக்கில் போட்டுக் கட்டி, E பாரத்துக்கு 'க்யூ'வில் நின்று வாங்கி, பற்றாக்குறை மாவட்டங்களுக்கு வண்டியிலேற்றி அனுப்பினால், அதன் சுகம் அப்பொழுது தெரியும்!

பெரிய பண்ணைகளைப் பறிமுதல் செய்து அதைப் பங்கிட்டு 10 ஏக்கராகவோ அல்லது 20 ஏக்கராகவோ ஒவ்வொருவனுக்கும் கொடுத்தால், நாட்டில் பஞ்சம் நீங்கி விடுமென்று நினைப்பவர்கள் மேல் அனுதாபப் படுவதைத் தவிர வேறு வழியில்லை.

பண்ணைகளை யெடுத்து விட்டால், தனிப்பட்ட ஒரு மனிதனின் சுகம் குறைந்துவிட்டதாக மனப்பால் குடிக்கலாம். ஆனால் சிலர் கூறுவதுபோல், பலருக்குப் பங்கிட்டுக் கொடுத்தினால் அந்த நிலங்களை வருங்கால 10 ஏக்கர் பிராசுதாரர்கள் திறமையோடும் கண்ணியமாகவும் நடத்துவார்களென்பது என்ன நிச்சயம்!

பாடுபட்டு உழைப்பவன் மட்டும் உழைப்பாளி யல்ல. நிலத்தைச் சரிவர நிர்வாகம் செய்து மக்களிடம் நல்ல பெயர் தேடிக்கொள்பவனும் உழைப்பாளிதான்.

பெரிய பண்ணைகளின் மூலமாகவே உழைப்பாளியும் முதலாளியும் ஒற்றுமையாய் வேலை செய்தால், நகரங்களில் வசிப்பவர்களுக்கெல்லாம் கவலையில்லாமல் 16 அவுன்ஸ் அரிசி அனுப்ப உழைப்பாளிகளாகிய நாங்கள் உறுதி கூறுவோம்!

பூண்டி.
15—6—51 கி. துளசி அய்யா

*

"ஜீவனோபாயத்திற்குப் போதுமான அளவு வசதி பெறப் பிரஜைகள் அனைவருக்கும் சம உரிமையுண்டு."

"சமுதாயம் அனைத்திற்கும் நன்மை விளையும் முறையில் பொருளாதார சாதனங்களின் உடைமையும், ஆதிக்கமும் விநியோகிக்கப் பட வேண்டும்."

"பொது நன்மைக்குப் பாதகமான ரீதியில் செல்வமும், உற்பத்தி சாதனங்களும் ஒரு சிலர் கையில் குவிந்து விடாதபடி உள்ள பொருளாதார முறையை அமைக்க வேண்டும்."

"விவசாயத்தையும், கால் நடைகளையும், நவீன, விஞ்ஞான முறைகளில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பசுக்கள் முதலிய பால் கறக்கும் கால் நடைகளையும், வேலைக்கு உதவும் கால் நடைகளையும், கன்றுகளையும் பேணி வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்."

மேலே கண்டவைகள் நமது அரசியல் நிர்ணய சபை மூலம் ஒரு அரசியலமைப்பை இயற்றி, சட்டமாக்கி, அங்கீகரித்து நமக்கு நாமே அளித்துக் கொண்டவை.

எனவே வரப்போகும் மாபெரும் தேர்தல் முடிவடைந்தவுடனே சட்டசபை எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்னை "எத்தனை நிலம் வேண்டும்!" என்பதுதான்.

நவீன முறையில் விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என கூறப்படுகிறது. இது நமது நாட்டிற்கு ஒத்து வருமா!

இந்தியாவில் சாகுபடியாகும் நிலப்பரப்பு முப்பது கோடி அறுபது லட்சம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் எண்ணிக்கை ஏழு

கோடி மூப்பது லட்சம் என்றும் அதே கணக்கு கூறுகிறது. இயந்திரக் கலப்பைகளைக் கொண்டு உழுது விவசாயம் நடத்துவது என்ற நிலை ஏற்பட்டால் எத்தனை பேர்கள் வேலையை இழப்பது! ஏற்கெனவே வேலையில்லாமல் திண்டாடும் பெரும் படையுடன், மற்றொரு பட்டாளத்தையும் சேர்ப்பதா!

டிராக்டர் போன்ற நவீன சாதனங்களை நம்பி இறங்கும்போது கால் நடைச் செல்வங்கள் புறக்கணிக்கப்படலாம். அதனால் ஏற்படும் பல பாதகங்களில் முக்கியமானது, சாண எருப் பஞ்சம்.

சாகுபடி ஆகிக் கொண்டிருக்கும் நிலங்கள் தவிர இனிமேல் விவசாயத்துக்கு லாயக்காக ஆக்கலாம், ஆக்க முடியும் என்கிற நிலங்களையும் கணக்கெடுக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளிகள், விவசாயத்தைப் பற்றித் தெரிந்தவர்கள், தானே விவசாயம் செய்ய உறுதி பூண்டவர்கள் இவர்களையும் கணக்கெடுக்க வேண்டும்.

இந்தக் கணக்குப்படி சவு போட்டால் தலைக்கு எத்தனை ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று கணக்குப் போட்டு நிலங்களைப் பங்கு போட்டு விடலாம்.

இதிலே விவசாயத் தொழிலாளிகளிடம் ஏற்கெனவே சாகுபடி ஆகிக் கொண்டிருக்கும் நிலங்களை விட்டுவிடலாம். ஏற்கெனவே அவர்களிடம் நிலம் இருந்தால் சவுப்படிக் குறைவாக இருந்தால் அதிகம் கொடுக்க வேண்டும். கூடுதலாக இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டும்.



டாக்டர் (மருந்துச் சீட்டை நோயாளியிடம் கொடுத்து):— இந்தா இதை மூன்று நாளைக்குச் சாப்பிடு. உடம்பு சரியாகி விடும்!

நோயாளி (பட்டிக்காட்டான்):— என்னங்க டாக்டர்! இந்தச் சின்னக் காகிதத்தை மூன்று நாளைக்கு எப்படிங்க சாப்பிடுவது?

விவசாயத்தைப் பற்றித் தெரிந்தவர்கள், இனிமேல் தானாக விவசாயம் செய்ய உறுதி பூண்டவர்களிடம் இனிமேல் விவசாயத்துக்கு லாயக்காகும் எனப்பட்ட நிலங்களை சவுப்படி கொடுத்து விடலாம். இது ஒரு மகத்தான 'புரட்சி' தான். ஆனாலும் செய்தே தீர்வது என்று உறுதி பூண்டு ஆரம்பித்தால் செய்ய முடியாதது எதுவுமில்லை!

இம்மாதிரி நிலங்களைப் பிரிவினை செய்து விட்ட பின்பு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பிரச்னை ஒன்று. இன்றைய சமூக அமைப்பில் உள்ள பாகப் பிரிவினை என்ற காரணமாக நிலங்கள் பலவாறாக சிதைக்கப்பட்டு, துண்டாடப்படுகின்றன. இந்த முறையை மாற்றி எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிலம் பிரிக்கப்படாத ஓர் புதிய முறையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் பாகம் பிரிப்பதாயிருந்தால் அவர்கள் மற்ற செல்வங்களைப் பிரித்துக் கொள்ளலாம். நிலத்தை மட்டும் பிரிக்கக் கூடாது. நிலம் மூத்த சகோதரனுக்கே சொந்தம் என்று சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும். இம்மாதிரி சட்டம் செய்து விட்டால் அப்புறம் நிலம் பிரிக்கப்பட வேண்டிய பிரமேயமே இல்லை.

மற்ற சகோதரர்களும் வெவ்வேறு தொழிலுக்குத் திருப்பப்பட்டு விடுவார்கள்.

சில நிலங்களில் அதிகம் விளையலாம், சிலவற்றில் குறைவாய் விளையலாம். எத்தனை விளைந்தாலும் ஒருவர் தனக்குத் தேவை போக பாக்கியை விற்கத்தானே வேண்டும்! அப்படி அதிகம் பணம் சேர்த்தால் அதை வைத்து வேறு தொழில் தான் செய்ய முடியுமே தவிர மேற்கொண்டு நிலத்தை வாங்கிச் சேமிக்கச் சட்டம் இடம் கொடுக்காதே!

உசிலம்பட்டி
10—6—51

கே. வி. முருகன்

★

நாமே பாடுபட்டு உழைப்பவராகவும் குறைந்தது பத்து வருட அநுபவம் பெற்றவராகவுமுள்ள குடும்பத் தலைவரிடம் 30 முதல் 50 ஏக்கர் வரை ஒப்படைக்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட நிலத்தை விற்கவோ, அடகு வைக்கவோ, பங்கு போடவோ உரிமையளித்தல் கூடாது. வழிமுறை வழிமுறையாகக் குடும்பத் தலைவருக்குப் பிறகு தலைமகனோ, தலைமகளோ அந்நிலத்தை அநுபவிக்கலாம். இப்படிப்பட்ட 150 (நூற்றைம்பது) குடும்பங்களை ஐக்கியப் படுத்திக் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்றை ஆரம்பித்து, மேற்படி குடும்பத் தலைவர்களில் ஐவரைக் கூட்டுறவுப் பண்ணை நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். அந்த ஐந்து பிரதிநிதிகள் அதிகமாக மூன்று வருடத்திற்கு மேல் பதவியிலிருப்பதை அநுமதிக்கக் கூடாது. இப் பிரதிநிதிகளை அரசாங்கத்தாரோடு தொடர்பு கொண்டு கூட்டுறவுப் பண்ணைக்கு வேண்டிய நவீன உழு கருவிகள், எரு, விதை, பயிரைக் காக்கும் வகைகள் ஆகியவற்றைப் பெற அநுமதிக்க வேண்டும். விளைச்சலில் தங்கள் உணவுக்குப் போக எஞ்சியதை மொத்தமாக சர்க்காருக்கோ

கூட்டுறவு தானியக் கொள்முதல் ஸ்தாபனத்துக்கோ அல்லது தனிப்பட்ட மொத்த வியாபாரிக்கோ ஆட்சியாளரின் இஷ்டத்திற்கிணங்க விற்க அனுமதித்தல் வேண்டும்.

ஆயிரம் ஏக்கர் உள்ள பெருமகன் சர்க்காரின் உதவியுடன் நவீன பம்பு செட்டு போட்டுக் கிணற்றிலிருந்து நீர் எடுத்துத் தன் நிலத்தை உழுது பயன் கண்டு பொருள் ஈட்டுகிறார். அதே நேரத்தில் அவர் நிலங்களுக்கு அருகாமையிலுள்ள ஏழை எளியவர்களின் 2 முதல் 10 ஏக்கர் வரை உள்ள சிறு பட்டாதார்களின் கிணற்றில் தண்ணீர் வற்றிப் போகிறது. உடல் வருந்தி உழைத்தாலும் பயனற்றுப் போகிறபடியால்—பட்டணத்திற்கு வந்து கூலி வேலை கிடைத்தாலும் குழந்தை குட்டிகளின் அரை வயிற்றையாவது கழுவலாமெனத் துணிந்துள்ளனர். அவர்களின் துயரைத் துடைப்பதற்கு அரசாங்கத்தார் உழுபவனுக்கே நிலம் என்ற திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரக் கோருகின்றோம்.

சென்னை
2—6—51 வி. சுப்ரமண்யம்

★

நிலத்தை முழுதும் பொதுச் சொத்து ஆக்குவதுதான் நம் நிரந்தர நல் வாழ்வுக்கு ஒரே வழி. சாத்வீகமான முறையில் இதைச் செய்தால், நஷ்ட ஈடு கொடுக்க நேரும். நஷ்ட ஈடு என்று ஆரம்பித்து விட்டால், அதற்கு ஒரு முடிவே இராது. பொதுவாக்குவதன் நோக்கமே இதனால் பாழ்பட்டு விடும்.

ஆகவே, உழுபவருக்கே நிலம் என்று ஏற்படுத்தி, நிலத்தைப் பங்கிடுவதுதான் நியாயம். நிலத்தை எந்த விதத்தில் பங்கிடுவது ! நம் நாட்டின் விவசாயக் குடும்பங்களைக் கணக்கிட்டு, மொத்த நிலத்தையும் கணக்கிட்டு, அவரவர் குடும்பப் பளுவை யனுசரித்துப் பங்கிடலாம். எட்டுப் பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு, சுகமான முறையில் ஜீவனம் செய்வதற்கு 20 அல்லது 25 ஏக்கர் நிலம் இல்லாமல் முடியாது. தேவைக்குக் குறைவாகவும் இருக்கக் கூடாது. தேவைக்கு அதிகமாகவும் இருக்கக் கூடாது.

பல கிராமங்களை ஒன்று சேர்த்து, ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி, நில சம்பந்தப்பட்ட விஷயங்களை அதனிடம் ஒப்படைக்கலாம். விவசாய சீர்திருத்தம், பரிசோதனை முதலியவைகளை அந்தப் பஞ்சாயத்து நடத்திக் கொள்ள வசதியும் அனுமதியும் இருக்க வேண்டும். பஞ்சாயத்துகளின் நிலையை உயர்த்தி, அடிக்கடி விஞ்ஞான நிபுணர்களின் தலைமையில், பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் பல பிரச்னைகளையும், பரிசோதனைகளையும் கவனித்துக் கொள்ளலாம்.

இப்படிச் செய்வதால், நிலம் அதிகமாக ஒருவரிடம் தேங்கிக் கிடப்பதும் இல்லை; பெரிய அளவில் பரிசோதனைகள் நடத்தவும் முடிகிறது. உழுபவர் நிலையை உயர்த்தினாலன்றி நாம் எந்த விதத்திலும் முன்னேற முடியாது. 'விழலுக்கு நீர் பாய்ச்ச'வில்லை யென்ற உணர்ச்சி உழவன் மனத்தில் ஏற்பட்டால் ஒழிய, அவன் நிலை உயரவும் முடியாது.

பெங்களூர்
4—6—51 எஸ். நாராயணன்

எங்கள் நிலம் இருக்கும் கிராமத்தில் நிலச் சுவான்களுக்கு வாரம் என்ற திட்டத்தின் படி வரும் மொத்த மகசூலில் இரு பங்கு நிலச் சுவான்களுக்கும், ஒரு பங்கு சம்சாரிகளுக்கும் என்ற திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இத் திட்டத்தினால் மகசூல் அதிகம் வந்தால் இருவருக்கும் அதிகம் கிடைக்கிறது, குறைந்தால் இருவரையும் பாதிக்கிறது என்ற மனப்பான்மை ஏற்பட்டு விவசாயிகள் சோம்பல் கொண்டு, குப்பை, தழை போடாமலும் நன்றாக உழாமலும் விவசாயம் செய்கிறார்கள்.

''தான் ஏன் கஷ்டப்பட வேண்டும், தன் முயற்சியால் வந்த பொருளை ஏன் நிலச் சுவான்கள் அடைய வேண்டும் !'' என்ற எண்ணம் விவசாயிகளுக்கு இருப்பதால் அவர்கள் விவசாயத்தில் ஊக்கம் காண்பிப்பதில்லை. மேலும் இக்கிராமத்தை ஒட்டிப் பெரிய நகரம் இருப்பதாலும், மில்கள் இருப்பதாலும் கிராமவாசிகள் அநேகமாக வேலைக்கு நகரத்திற்கு வருகிறார்கள். சுமார் ரூபாய் இரண்டு முதல் இரண்டரை வரை நாள் ஒன்றுக்குக் கூலியாக இலகுவில் சம்பாதிக்கிறார்கள். வேலையும் சொற்பம். விவசாயத்திலோ சிரமம் அதிகம். நகரத்தின் மில் வேலையையும் விவசாயத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சமயம் யாரும் விவசாயத்தை விரும்ப மாட்டார்கள் !

விவசாயிகளோ பொதுவாக ஏழைகள். படிப்போ மிகவும் சொற்பம். அவன் சாப்பாட்டிற்கே உழைத்து வருவது சரியாக இருக்கிறது. அவனுக்குச் சொந்தமான நிலம் கிடையாது. விவசாயிக்கு என்று சொந்தமாக நிலம் இருந்தால் அவன் பாடுபட்டு அதிக வரவுக்கு வழி செய்வான். பொதுவாக முல்லையாற்றுப் பாசனத்தில் அனேக நிலம் இரு போக சாகுபடிக்கு லாயக்காக இருந்தும் சம்சாரிகள் இரு போக சாகுபடி செய்வதில்லை.

விளாங்குடி
30—5—51 க. மீனாக்ஷிசுந்தரம்

★

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டு, தன்னுடைய நிலமே அடையாளந் தெரியாத நிலச்சுவான்தார்கள் ஒரு பக்கம், அரை ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு அரை வயிற்றுக் கூழுக்கும் போராடுகிற அப்பாவி மக்கள் மற்றொரு பக்கம். நாட்டில் இந்நிலை மாறி ஒவ்வொரு விவசாயிக்கும் குறைந்தது சொந்தமாக 5 ஏக்கர் நிலமாவது இருந்தால் போதுமென்பது எனது அபிப்பிராயம்.

விவசாயி இன்றைக்குப் பணம் கைக்கு வரும் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்கிறான். பணம் தரும் பயிர்களை இவ்வளவு தான் உற்பத்தி செய்ய வேண்டும், உணவுப் பொருள் பயிர்களை இவ்வளவு தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை அரசியலார் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் பஞ்சமும், பணத்தாசையும் ஒழியும். மக்களும் வயிறு நிறையச் சாப்பிடுவார்கள். உதாரணமாக வேர்க்கடலையின் விலை குறைந்தால் அடுத்த வருட மகசூலில் எவ்வளவு உணவு தானியம் உபரியாக உற்பத்தியாகிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். வேர்க்கடலை, பருத்தி, கரும்பு முதலிய

பொருள்களின் விலைகள் விஷம் போல் ஏறியிருக்கிறது. நிலத்திற்கும் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த அடிப்படையில் நிலச் சீர்திருத்தம் செய்து, ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் நிலம் போதுமென்பது எனது முடிவான கருத்தாகும். நிலம் குறையக் குறைய விவசாயி நன்றாக உழைக்க முன் வருகிறான். நிலம் அதிகம் ஆக ஆகச் சோம்பேறியாக மாறிச் சுகமாக வாழ முயல்கிறான்.

புதுப்பாளையம்
6—6—51

கே. நாச்சிமுத்து

★

நம் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தரிசு நிலங்களையும் பொட்டை நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வர வகை செய்ய வேண்டும்.

அவ்வித தரிசு நிலங்கள் அதிக நிலமுள்ளவர்களாகிய நிலச்சுவான்தார்களிடமே ஏராளமாகக் கிடக்கின்றன. அவர்கள் தங்கள் தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வர வகை செய்வதில்லை. தங்கள் சாகுபடி நிலங்களின் குத்தகை வசூல் பணத்தைக் கொண்டு பக்கத்தில் ஏற்கெனவே பண்படுத்திய சாகுபடி நிலங்களை விலைக்கு வாங்கிக் குத்தகைக்கு விடுவார்களே தவிரத் தங்களிடம் தரிசாகக் கிடக்கும் நிலங்களைப் பண்படுத்தி சாகுபடிக்குக் கொண்டு வர மாட்டார்கள். பக்கத்து சிறிய விவசாயிகளும் இவர்கள் விரும்பும் நிலத்தைக் குறைந்த விலைக்காகிலும் கொடுத்துத்தான் தீருவார்கள். அல்லாதவரை, பெரிய நிலச்சுவான்தார்களின் செல்வாக்கு ஆதிக்கம் காரணமாகச் சிறிய விவசாயிகளுக்கு இடையூறுதான் ஏற்படும்.

மற்றும் நிலச்சுவான்தார்களில் தங்கள் தேவைக்கு மீறிய வருமான முள்ளவர் மேலும் மேலும் பொருள், பூமி சேர்ப்பது சுலபம். அல்லாதவரை நகரங்களுக்குச் சென்று உல்லாச வாழ்க்கை நடத்துகின்றார்கள். அயல் நாட்டிற்கு நம் பணம் அதிகம் போவதற்குக் காரணமாக உல்லாச கார்கள் அதிக விலைக்கு வாங்குவதுடன் பெட்ரோல் செலவும் அதிகம் ஏற்படுகிறது. ஆனால் விவசாய முன்னேற்றத்திற்குக் காரணமான டிராக்டர் போன்ற நவீன சாதனக் கருவிகள் வாங்கி உபயோகிப்பாரில்லை.

ஆகையால் உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டுத் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வர நிலச்சீர்திருத்தம் மிக அவசியம். தனிப்பட்ட நபர் ஒன்றுக்கு 20 ஏக்கர் அதிக பட்சம் நிர்ணயிக்கலாம்.

விராலிக்காட்டூர்
30—5—51

ஆர். முத்து

★

ஜமீன்கள் பலவற்றை ஒழித்த சர்க்கார், அவற்றின் பரப்பைக் காட்டிலும் பன் மடங்கு கொண்ட மிராசுகளை நீடித்து வைத்திருப்பது தவறான செயல். நூற்றுக்கணக்கான ஏக்கர்களை ஒருவரிடம் வைத்திருப்பதால், சரிவரக் கவனிக்காது விளைவு குறைகிறது. விளைவு குறைய, குத்தகைப் பாக்கியால், வேறு நபருக்கு நிலம் மாறுகிறது. நிலவளம் கவனிக்கப் பெறாது வந்த வருமானம் போதுமென விடப்படுகிறது.

ஒவ்வொரு கிராமத்தின் நிலவளத்துக்குத் தக்கவாறு 3 முதல் 10 ஏக்கர் வரை விவசாயக் குடும்பம் ஒன்றுக்குப் பிரிக்கப்பட வேண்டும். இரு போக நன்செய்களில் 3 ஏக்கரும், ஒரு போக நன்செயில் 5 ஏக்கரும், மானம் பார்த்த சீமைகளில் 10 ஏக்கரும் நிலம் இருந்தால் விவசாயிக்கு ஆன எளிய வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளும், அரசாங்க வரியும், உணவும் குறைவு இன்றிக் கிடைக்கும். விவசாயக்காரர் சந்ததியார், அல்லது அவரே, வேறு தொழிலுக்குப் போகும்போது, அவருக்கு விற்கும் உரிமை இல்லாமல் செய்து அரசாங்கம் தகுந்த நிலமில்லாதவருக்குக் கொடுக்க முன் வர வேண்டும்.

கைத்தொழில்களில் முதலாளித்வத்தை ஒழிக்காது, விவசாயத்தை ஏன் ஆக்க வேண்டும்? எல்லாத் தொழில்களும் முடிவில் தேசியமயமாகத்தான் போகப் போகின்றன. விவசாயத்தில்தான் ஊழல்கள் அதிகமாயும் தொழிலாளர் உரிமையின்றியும், உற்பத்திக் குறைவு மிகுதியாயும் உள்ளன. ஆதலின் இதில் முதலாளித்வத்தைப் போக்க முதலில் முற்பட வேண்டும். அதனால் விளைவு பெருகி நாடு முன்னேறும்.

சச்சங்குடி
4—6—51

டி. ஆர். கணேசன்

நூல் நிலைய நிதிக்காக - சென்னை செயிண்ட்மேரீஸ் ஹாலில்
8 - 7 - 51 ஞாயிறு மாலை 6 மணிக்கு
ஜி. உமாபதி, ஜே. சுகுமார், ஏ. ரத்னமாலா
முதலியோர் நடிக்கும்
ராஜாஜி கலைக் கழகத்தாரின்
“லட்சியவாதி”
(தமிழ்த் தேசிய நாடகம்)
கட்டணம்: ரூ. 5, 3, 2 & 1
ஜி. உமாபதி, தலைவர் ஜே. சுகுமார், செயலாளர்


திறமை மிக்க வேலைப்பாடு
வெகு நாள் மறையாது
திகழ்கிறது



காசி கோயில்
கி.மு. 500ல் கட்டப்பட்டது.

Stanes

'ஸ்டேன்ஸ்'
சிகப்பு லேபில்
சுத்தமான காப்பி



தி யுனைடெட்
காப்பி ஸப்ளை
கம்பெனி
லிமிடெட்

கோயம்புத்தூர்,
தென் இந்தியா

திருவனந்தபுரத்திற்கு ஏஜண்டு :
மிஸ்டர் ஜி. ஆர். ஹரிஹரன்
செந்திட்டை, சாலை

மதுரைக்கு ஏஜண்டுகள் :
தி ஸ்டேன்ஸ் காபி & ஜெனரல் ஏஜன்ஸி
60, மேல கோபுர வீதி, மதுரை

சீரஸாவின் மன்னி

குயிலி

"அக்கா! அக்கா!" என்று கூப்பிட்டுக்கொண்டே வீட்டுக்குள்ளே நுழைந்தாள், சசிரேகா.

தன் தங்கைக்காக அக்கறையோடு டிபன் தயாரித்துக் கொண்டிருந்த கருணா அவள் குரல் கேட்டவுடன் மிகுந்த ஆவலோடு "என்ன ரேணு! என்ன விசேஷம்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்தாள்.

"அக்கா, உனக்கு இன்றைக்கு ஒரு நல்ல சமாசாரம் சொல்லப் போகிறேன்!" என்றாள் சசிரேகா.

"என்ன சமாசாரம்?" என்றாள் கருணா ஆவலோடு.

"நான் அந்தச் சமாசாரத்தைச் சொன்னால் நீ எனக்கு ஏதாவது 'ஸ்வீட்' பண்ணித் தர வேண்டுமே!" என்றாள் ரேணு கைவிரலை ஆட்டிக் கொண்டே.

"பேஷாய்ப் பண்ணித் தருகிறேன். இது என்ன பிரமாதம்! என்ன விசேஷம் சொல்லு!" என்றாள் கருணா.

"நான் நேற்றைக்கே சொல்லவில்லையா? இன்றைக்கு எங்கள் பள்ளிக்கூடத்திலே சொற்பொழிவுப் போட்டி என்று?"

"ஆமாம் அதற்கென்ன இப்பொழுது?"

"என்னவா? அதிலே யார் யாருக்குப் பரிசு என்று இன்றைக்குத் தலைமை உபாத்தியாயர் சொல்லிவிட்டார்!"

"அக்கா! உனக்கு ஜோஸியம் தெரியுமாக்கும். அப்படியானால் சொல்லு, பார்க்கலாம்."

"சொல்லுகிறேன் பாரு. ஒன்று உன் தோழி கமலாவுக்குக் கிடைத்திருக்கும். இல்லாவிட்டால் பக்கத்து வீட்டுச் சரஸாவுக்குக் கிடைத்திருக்கும்!"

ரேணுகாவின் முகம் கொஞ்சம் சிவந்தது. "ஏன் அக்கா, என்னைப் பார்த்தால் உனக்குப் பரிசு வாங்குகிறவளாகத் தோன்றவில்லையா?" என்றாள் சற்றுக் கோபமாக. பிறகு அழுத்தம் திருத்தமாக, "அக்கா, எங்கள் பள்ளிக்கூடத்திலேயே இன்று எனக்குத் தான் முதல் பரிசு!" என்றாள். கருணாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

இந்த விஷயம் மெள்ளப் பக்கத்து வீட்டை அடைந்தது. அந்த வீட்டு யஜமானி தர்மாம்பாள் இந்த விஷயத்தை அறிந்ததும் தன் பெண் சரஸாவைக் கூப்பிட்டு, "ஏன் சரஸா, இன்றைக்கு உங்கள் பள்ளிக்கூடத்திலே சொற்பொழிவுப் போட்டி நடந்ததாமே! பக்கத்து வீட்டு ரேணுவுக்குக் கூடப் பரிசு கிடைத்ததாமே!" என்றாள்.

"ஆமாம் அதுக்கென்னவாம்?" என்றாள் சரஸா கடுகடுப்பாக.

"நீ அந்தப் போட்டியிலே சேரவில்லையோ? நீயும் அவளோடு தானே படிக்கிறாய்?" என்று அவள் அம்மா குத்தலாகக் கேட்டாள்.

"ஆமாம். அவள் அதைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டாளோ! அந்த டீச்சருக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். அதனாலே தான் அவளுக்குப் பரிசு கிடைத்தது!" என்றாள் சரஸா.

"ஆமாம். உனக்கு ஏதாவது நொண்டிச் சாக்கு கிடைக்கும்! உனக்குப் பரிசு வாங்கத் துப்பு இல்லாவிட்டாலும் இதிலே யெல்லாம் குறைச்சல் இல்லை!" என்றாள் தர்மாம்பாள் கோபத்துடன்.

இதைக் கேட்டு மிகுந்த ஆத்திரமடைந்த சரஸா அங்கிருந்து வேகமாக மாடிக்குச் சென்று விட்டாள்.

★

சரஸாவும், சசிரேகாவும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ராமையர் மிகவும் பணக்காரர். அவர் பெயருக்கே அந்த ஊரில் ஒரு தனி மதிப்பு உண்டு. அவருக்கு ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் அருமைக்கு ஒரு பெண்ணும்தான் குழந்தைகள். பிள்ளையின் பெயர் குமார். பெண்ணின் பெயர் சரஸா.

சசிரேகாவுக்கோ அம்மாவும் கிடையாது. அப்பாவும் கிடையாது. அவள் அக்காவும் அத்திம்பேரும்தான் அவளை ஆதரித்து வந்தார்கள்.

சரஸா தன் அம்மாவிடம் ஏதோ பதில் சொல்லிவிட்டாளே தவிர அவளுக்கு ரேணுவின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எந்த விதத்திலாவது அவளை மட்டம் தட்டவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் சரஸா தன் அண்ணனுக்குச் சசிரேகா எழுதியது போல் ஒரு கடிதம் எழுதி ஒருவருக்கும் தெரியாமல் தன் வீட்டு வாசற் கதவருகில் போட்டாள். சிறிது நேரம் கழித்து அவளே போய் அதை எடுத்துக் கொண்டு வந்து, தன் தாயாரிடம் சசிரேகா அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்ததாகவும் தன்னைப் பார்த்தவுடன் கதவருகில் போட்டுவிட்டு ஓடி விட்டதாகவும் சொல்லிக் கொடுத்தாள்.

அதைப் படித்தவுடன் தர்மாம்பாளுக்கு மிகுந்த கோபம் வந்தது. உடனே அவள் ரேணுகாவை அழைத்துவரச் சொன்னாள்.

அவள் வந்தவுடன் அவளிடம் அந்தக் கடிதத்தைக் காட்டி மிகவும் கோபித்துக் கொண்டாள்.

"இல்லவே இல்லை மாமி. நான் செய்யவேயில்லை!" என்று ரேணு கண்ணீரும் கம்பலையுமாக எவ்வளவோ சொல்லியும், அவள் கேட்கவில்லை.

இதற்குள் வாசலில் ஜனங்கள் கூடி விட்டார்கள். அவ்வளவு பெரிய மனிதர் வீட்டுப் பெண் பொய் சொல்லுவாளா? அவளே சொல்கிறாளே என்று சரஸு பக்கம் சேர்ந்தார்களே தவிர ஒருவரும் ரேணுவின் பக்கம் சேரவில்லை.

ரேணுவின் மனம் உடைந்து போயிற்று. அவள் பள்ளிக்கூடத்துக்குப் போவதை நிறுத்தி விட்டாள். எப்பொழுதும் பைத்தியம் பிடித்தவள் மாதிரி வீட்டிலேயே உட்கார்ந்திருந்தாள். இதைப் பார்த்த சுகுணாவுக்கு மனசு மிகவும் கஷ்டப் பட்டது. தங்கை சந்தோஷமாக இருந்தால் போதும் என்று தோன்றிவிட்டது. தன் கணவனிடம் சொல்லி அந்த ஊரை விட்டே உத்தியோகத்தை மாற்றிக் கொள்ள ஏற்பாடு செய்தாள். சென்னைக்கு மாற்றல் உத்தரவு கிடைத்தது.

ரேணு மதராஸுக்குப் புறப்படும் முன் சரஸுவைப் பார்த்து, "சரஸு, நான் ஊருக்குப் போகிறேன். ஆனாலும் நீ செய்ததற்குத் தெய்வம் உனக்குத் தண்டனை கொடுக்கும்!" என்றாள்.

"தெய்வம் என்றும் உண்மையின் பக்கம் தான் இருக்கும் என்று தெரிந்துகொள்!" என்றாள் சரஸு ஏளனமாக.

"ஆமாம். நானும் அதைத்தான் சொல்கிறேன், சரஸு! தெய்வம் உண்மையின் பக்கம் இருந்து உனக்குத் தண்டனை கொடுக்கும்!" என்றாள் ரேணு, கண்களில் நெருப்புப் பொறி பறக்க.

"சரி, நான் போகிறேன்!" என்று திரும்பியவள் இரண்டடி நடந்து விட்டுத் திரும்ப வந்து "சரஸு, இனிமேலாவது இம்மாதிரி ஒரு பெண்ணின்மேல் அபாண்டமான பழியைப் போடாதே. இதுவே என் கடைசி வேண்டுகோள்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

★

வருஷங்கள் இரண்டு ஓடிச்சென்றன. அன்று வெள்ளிக்கிழமை. விளக்கேற்றி விட்டு ரேணு வாசலில் வந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தெருக் கோடியில் தன் அத்திம்பேரும் அவருடன் இன்னொருவரும் வருவதைப் பார்த்து விட்டு அவள் உள்ளே சென்று விட்டாள்.



"ரேணு!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் அத்திம்பேர். "என்ன?" என்று கேட்டவள் கூட வந்தவரைக் கண்டு திகைத்து விட்டாள்.

"ரேணு, புதிதாக ஒருவர் வேலை செய்கிறார் என்று சொன்னேன் அல்லவா? அவர்தான் இவர்!" என்று அறிமுகப் படுத்தினார் அத்திம்பேர்.

அப்பொழுது அங்கே வந்த சுகுணா வந்தவரைப் பார்த்து, "இவர் அஸ்ஸாமில் இருந்தாரல்லவா?" என்றாள்.

அதற்குள் வந்தவர் "ஆமாம், நான் ராமய்யரின் பிள்ளை குமார்தான்!" என்றார்.

இதற்குள் சுகுணா காப்பி கொண்டு வந்து வைத்தாள். பிறகு தன் கணவனைப் பார்த்து, மெதுவாக "இவர்தான் சரஸுவின் அண்ணா!" என்று சொன்னாள்.

உடனே குமார், "ரேணுகாவுக்குக் கல்யாணம் பண்ணி விட்டீர்களா?" என்றான்.

"இல்லை. வரன் பார்த்துக்கொண்டிருக்கிறோம்!" என்றாள் சுகுணா.

"நீங்கள் ஊரை விட்டுச் சென்ற பிறகு ஒரு நாள் சரஸுவே உண்மையைச் சொல்லி விட்டாள். என் அம்மா கூடத் திரும்பவும் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இருந்தாள். அதற்குள் வெள்ளம் வந்து விட்டது. எங்கள் குடும்பத்தில் நான் ஒருவன்தான் மிஞ்சினேன். என் தங்கை சரஸு செய்த குற்றத்திற்காக நானே உங்கள் ரேணுவை மணந்து கொள்கிறேன்!" என்றான் குமார்.

சுகுணாவும் ஒப்புக்கொண்டாள். அடுத்த முகூர்த்தத்தில் சிரேகாவுக்கும் குமாருக்கும் விவாஹம் நடந்தேறியது.

கல்யாணம் நடந்த பிறகு ஒரு நாள் குமார் "ரேணு, நான் சொன்ன வாக்கைக் காப்பாற்றி விட்டேன்!" என்றான்.

"என்ன வாக்கு?" என்றாள் ரேணு.

"கடைசியாக வெள்ளத்தில் போகும் பொழுது அம்மா என்னைப் பார்த்து 'நீ எப்பொழுதாவது ரேணுவைப் பார்த்தால் அவளுக்குக் கல்யாணமாகாமல்

இருந்தால் நீ மணந்து கொள். இல்லையேல் சகோதரனைப் போல் இருந்து அவளுக்கு உதவி செய்!' என்றான். அவளுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டேன்'' என்றான்.

ரேணுவின் வாயிலிருந்து பாவம் என்ற சொல்தான் வந்தது. மற்ற கஷ்டங்கள் எல்லாம் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

★

வருஷங்கள் நான்கு உருண்டன. ரேணுவுக்கு சேகர் என்ற மூன்று வயதுப் பையன் ஒருவன் இருந்தான்.

அன்று ரேணு உள்ளே என்னவோ வேலையாய் இருந்தாள். வாசலில் இருந்த குழந்தை சேகர் விளையாட்டு மும்முரத்தில் கார் வருவதைக் கூடக் கவனிக்கவில்லை. அப்பொழுது ஒரு பெண் வந்து அவனை மறு பக்கம் தள்ளிவிட்டாள். ஆயினும் கார் அந்தப் பெண்ணின்மேல் ஏறி விட்டது. பலத்த அடியுடன் அவள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள்.

இதை அறிந்த குமாரும் ரேணுவும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள். குமார் ஆபத்துக்கு உள்ளானவளைக் கண்டதும் திகைத்து விட்டான். அது சரஸாவே தான். அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். ரேணு அவளைப் பார்த்தவுடன் '' இவளை எங்கேயோ பார்த்த மாதிரி தோன்றுகிறதே!'' என்றாள். குமார் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வீட்டிற்கு வந்து விட்டான்.

மறுநாள் ஆபீஸிலிருந்து நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றான் குமார்.

சரஸா விழித்துக் கொண்டிருந்தாள். குமாரைப் பார்த்தவுடன் '' அண்ணா, நீயா?'' என்றாள் ஆச்சரியத்துடன்.

'' ஆமாம், சரஸா! உன் அண்ணாதான். நீ காப்பாற்றிய குழந்தையும் என் குழந்தை சேகர்தான்!'' என்றான்.

'' மன்னியை அழைத்து வா, அண்ணா! நான் பார்க்கணும்!'' என்றாள் சரஸா.

'' சரஸா, நீ மன்னியை ஏற்கெனவே பார்த்திருக்கிறாய்!'' என்றான் குமார்.

'' யாரு? நான் பார்த்திருக்கிறேனா?''

'' ஆமாம். ரேணுதான் உன் மன்னி!''

'' ரேணுவா, அண்ணா? அவளை நீ அழைத்துவா. ஆனால் நான் சரஸா என்று நீ சொல்லிவிடாதே. அவளாகத் தெரிந்து கொண்டால் தெரிந்து கொள்ளட்டும்!''

பிறகு குமார் ரேணுவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனான். சரஸா ரேணுவைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்தாள். ஆயினும் தான் யார் என்பதை சொல்லவேயில்லை. அன்று அவளால் பேசவே முடியவில்லை. ரத்தம் அதிகமாக வெளியேறி விட்டதால் அவள் பிழைப்பதே அரிதாயிருந்தது.

மறுநாள் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்தபொழுது ஒரு நர்ஸ் வந்து ஒரு கடிதத்தை ரேணுவிடம் கொடுத்து விட்டு அந்த நோயாளி இறந்து விட்டதாகச் சொன்னாள்.

ரேணு நடுங்கும் கரங்களுடன் அந்தக் கடிதத்தைப் பிரித்தாள் :—


அன்புள்ள ரேணு மன்னி,

இப்படி எழுதியிருப்பதைப் பார்த்து நீ ஆச்சரியப் படலாம். ரேணு, நீ அன்று கடவுள் எனக்குத் தண்டனை விதிப்பார் என்று சொன்னாய். அது பலித்துவிட்டது. ஒரு பெண்ணுக்கு எது சுகமோ அந்தச் சுகம் எனக்குக் கிடைக்கவில்லை. எனது கணவரும், அருமைக் குழந்தையும் வெள்ளத்தில் என்னை விட்டுப் பிரிந்தனர். நீ மதராஸில் இருக்கிறாய் என அறிந்து உன்னிடம் மன்னிப்பு கேட்க வந்தேன். அப்பொழுதுதான் இந்த நிகழ்ச்சி நடந்தது. நான் செய்த குற்றத்திற்கு உன் குழந்தையைக் காப்பாற்றி விட்டேன். என் கடமை முடிந்து விட்டது. நான் போகிறேன். என்னை மன்னித்து விடு.

சரஸா

கடிதத்தைப் படித்ததும் ரேணு ஒரு பெருமூச்சு விட்டாள். ''இவள் சரஸாவா? பாவம்! நமக்காக அவள் உயிரையும் விட்டு விட்டாள்!'' என்றாள்.

குமாரின் வாயிலிருந்து வார்த்தையே வரவில்லை. ஆனால் அவன் கண்களில் மட்டும் நீர் ததும்பி நின்றது.



''ஸார், ஸார்! பிள்ளையார் அந்தப் பக்கம் இருக்கிறார்!''

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

41. ஆபரேஷன் தேவையில்லை!

ஒரு அன்பர்; படித்த மேதாவி. பல நாட்களாகவே வயிற்று வலி இருப்பதாகச் சொல்லி வந்தார். நான், "ஆசனம் பழகுங்கள் சுகமாகும்" என்று சொல்லி வந்தேன். அவருக்கு அதில் சிரத்தையில்லாமையினாலோ அல்லது சமயம் வாய்க்காததினாலோ கவனிக்காமல் இருந்தார். வயிற்று வலியின் கடைசிக் கட்டம் 'அப்பெண்டிஸிடிஸி'ல் வந்து முடிந்தது. ஒரு பெரிய டாக்டர் சோதனை செய்து "அப்பெண்டிக்ஸில் சீழ் கோத்து விட்டது. அது வெடித்தால் உயிருக்கே ஆபத்து. ஒரு வாரத்திற்குள் ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும்" என்ற முடிவைத் தெரிவித்தார். வீட்டில் யோசித்து வருவதாகச் சொல்லி வந்துவிட்டார்.

அவருக்கோ ஆபரேஷன் செய்து கொள்வதில் இஷ்டமில்லை. பயத்தின் காரணமல்ல. கடவுள் தந்த இயற்கை உடலை அறுத்து, ஆபரேஷன் தழும்புடன் தன் ஆயுளை அனுபவிக்க அவர் மனம் ஒப்பவில்லை. ஆசனம் செய்வது என்ற தீர்மானத்திற்கு வந்தார். சர்வாங்காசனம் சொல்லித் தந்தேன்.

பத்து நாட்களுக்குப் பின் அவர் டாக்டரைப் பார்க்கச் சென்றார். அந்த டாக்டர் இவரைப் பார்த்ததும் பயந்து விட்டார். பேச நா வெழவில்லை, பார்வையை எடுக்கவில்லை. அப்பெண்டிக்ஸ் குடல் வெடித்து இறந்தபின், அவருடைய ஆவிதான் தன்னிடம் வந்திருப்பதாக நினைத்து விட்டார். பிறகு அந்த நண்பரே பேச ஆரம்பித்தார். "நான் சாகவில்லை. ஆசனம் செய்து பிழைத்துவிட்டேன். அதைத் தங்களுக்குத் தெரிவித்துப் போகவே வந்தேன்". என்றார். அதன்பின் டாக்டருக்குத் தைரியம் வந்தது. "அப்படியா! ஆசனம் என்றால் என்ன! அதனால் எப்படிப் பிழைக்க முடியும்! எங்கே படுங்கள். சோதிக்கலாம்!" என்றார். சோதித்தார். அப்பெண்டிக்ஸ் குடல் இருக்குமிடத்தை அழுத்தினார். வலி இல்லை. சீழ் கோத்துக் கொண்டிருந்த இடம் தெரியவில்லை. அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. பிறகு நடந்த விருத்தாந்தத்தைக் கேட்டார். ஆசன மகிமையை அன்பர் எடுத்துரைத்தார். அப்படியானால் "அதை விட வேண்டாம். தொடர்ந்து செய்யுங்கள்" என்று டாக்டர் சொன்னார்.

மேற்படி அன்பர் தொடர்ந்து இன்னும் பல ஆசனங்களைச் செய்து நோய்கள் எனும் பிடியிலிருந்தே விடுதலை அடைந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. அவருடைய நண்பர்கள் யார் யார் உண்டோ, அத்தனை பேருக்கும் அவரே பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். பல பேர்களுக்குப் பிரமிக்கத் தக்க விதம், பல நோய்களைக் குணப்படுத்தியும் இருக்கிறார்.

ஆகாரப் பையிலிருந்து சிறு குடல் ஆரம்பிக்கிறது. அது பல படியாக மடங்கி நடு வயிற்றில் இருக்கிறது. அதைத் தொடர்ந்தாற்போல் பெருங்குடல் அல்லது மலக்குடல் ஆரம்பிக்கிறது. மேற்படி சிறு குடலிலிருந்து பெருங்குடல் ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு நாகப்பூச்சியைப்போல், பென்சில் கனத்தில் மூன்று அல்லது நான்கு அங்குல நீளத்தில், ஒரு குடல் வால் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குத்தான் அப்பெண்டிக்ஸ் என்பது. அது நோய் கொள்வதுதான் பயங்கர அப்பெண்டிஸிடிஸ் வியாதியாகும். அந்தக் குடல் வாலின் உபயோகம், இன்னதென்று தெரியவில்லை. பல பெரிய டாக்டர்களாலும் "இது எதற்காக ஏற்பட்டது!" என்று தீர்மானமாய்ச் சொல்ல முடியவில்லை.

ஆனால், ஆகார நியமமில்லாமல், கண்டபடி சாப்பிடுபவர்களுக்குத் தண்டனை அளிப்பதற்காகவே இந்தக் குடல் வால் இயற்கையாய் அமைந்திருக்கிறது என்பது என் முடிவு. சிருஷ்டியில் எந்த ஒரு பாகத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது.

நாம் சாப்பிடும் ஆகாரம் ஆகாரப் பைக்குச் சென்று, பிறகு சிறு குடலுக்குச் செல்லுகிறது. அங்கு சத்துக்கள் கிரகிக்கப்பட்டுப் பெருங்குடலுக்குத் தள்ளப்படுகிறது. அப்படித் தள்ளும் போது இந்தக் குடல் வாலுக்குள்ளும் (அப்பெண்டிக்ஸிலும்) சென்று வருகிறது. அப்படிச் சென்று வரும்போது, அதனுள் சென்ற வஸ்து வெளிவர முடியாவிட்டால், அங்கேயே தங்கி அழுகுகிறது. பிறகு வயிற்றுவலி ஆரம்பமாகிறது. அதற்கு நாம் செய்வதென்ன! மருந்தைச் சாப்பிடுகிறோம். மருந்தின் வேகத்தால், அடைபட்ட இடத்திலுள்ள பொருள் அசைந்து வெளியில் வருகிறது. பிறகாவது ஆகார நியமமாய் இருக்கிறோமா! கண்டபடி தின்ன ஆரம்பிக்கிறோம். மருந்துதான் இருக்கிறதே. அப்படி வலித்தால்தான் என்ன! மருந்து சாப்பிட்டால் போகிறது! மறுபடியும் வயிற்றுவலி பிறகு மருந்து நாளாக ஆக எப்பொழுதோ ஒரு நாள் வந்து கொண்டிருந்த வயிற்றுவலி, அடிக்கடி வர ஆரம்பிக்கிறது. மருந்தென்னும் சாட்டையால் அடித்தடித்து ஓட்டுகிறோம். கடைசியில் மருந்துக்கும் அசையாமல் கழிவுப் பொருள் குடல் வாலிலேயே தங்கி விடுகிறது. பலவீனப்பட்டுப் போகிறது. சக்தியற்றுப் போகிறது. பிறகு அழுக ஆரம்பிக்கிறது. பிறகு சொல்ல முடியாத, பொறுக்க முடியாத வலி உண்டாகிறது. இந்த வயிற்று வலி வந்தவர்கள் பசி வந்தால் சாப்பிடவும் பயப்படுவார்கள். சாப்பிட்டால் வலி பொறுக்க முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு வயிறு

என்றும் குடல்கள் என்றும் பாராமல், பஞ்சு திணிப்பதுபோல் திணித்தார்களோ, அவ்வளவுக்கும் சாப்பிட அஞ்சுவர். வலி பொறுக்க முடியாமல் குளம் குட்டைகளில் விழுந்து இறந்தவர்கள் அநேகர்.

இவர்களுக்கு ஆபரேஷன் செய்து அடைபட்டு, உணர்ச்சியற்றுப் போன குடல்வாலை நீக்கிவிடுவர். சிலருக்கு அடைத்த பொருள்கள் அழுகிச் சீழ் கோத்துக் கொண்டு குடல் வால் வீங்கி விடும். அசாத்திய வலி எடுக்கும். மிக ஆபத்தான நிலை. உடனே ஆபரேஷன் செய்து சீழ் பிடித்த குடல் வாலை அகற்ற வேண்டும். இல்லையானால் சீழ் வெடித்து வயிற்றில் கொட்டி விடும். அவ்வளவுதான்; வாழ்க்கை முடிந்தது.

ஒரு தடவை ஆபரேஷன் செய்து கொண்டவர்கள், அதன் பின்பாவது ஆகார நியமத்துடன் இருக்க வேண்டும். கண்ட நேரத்தில் கண்டதை யெல்லாம் சாப்பிட ஆரம்பிப்பார்கள். மறுபடியும் வயிற்றுவலி வந்துவிடும். ஆபரேஷன் செய்த இடத்தில், மறுபடியும் ஆகாரக் கழிவின் உறுத்தல் ஏற்படும். சிலபேருக்குச் சீழும் பிடித்துவிடும். இவர்களுக்கு விமோசனமே கிடையாது என்று விஞ்ஞானம் சொல்லுகிறது. எந்த டாக்டரும், எந்த ஆஸ்பத்திரியிலும் இரண்டாவது தடவை ஆபரேஷன் செய்ய மாட்டார்கள். செய்தால் உயிருக்கே ஆபத்து. வலியுடன் சில நாட்கள் இருந்து வாழ்க்கையைச் சீக்கிரம் முடிக்க வேண்டியதுதான். இதுதான் தற்போதுள்ள விஞ்ஞானத்தில் முன்னேற்ற மடைந்த டாக்டர்களின் முடிவு.

ஆனால் யோக மார்க்கம் இப்பேர்ப்பட்டவர்களுக்கு அபயம் அளிக்கிறது. அப்பெண்டிஸிடிஸுக்கு ஆபரேஷனே தேவையில்லை. ஒரு தடவை ஆபரேஷன் செய்து கொண்டவர்களுக்கு, மறுபடியும் வயிற்றுவலி வந்தால், அவர்கள் வாழ்க்கையைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சீழ் பிடித்து வெடித்து விடும் என்ற நிலைமையி லுள்ளவர்களுக்கும் ஆபரேஷன் வேண்டியதில்லை. எத்தனையோ பேர், இந்த வலியால் பிடிக்கப்பட்டு ஆசனம் பழகி குணமடைந் திருக்கின்றனர். சர்வாங்காசனமே இதற்கு விமோசனம் அளிக்க வல்லது. இதன் மகிமையை இனித்தான் உலகமும் உணரப் போகிறது. அந்த நாள் அதிக தூரத்திலில்லை.


சர்வாங்காசன நிலையைச் சற்று கவனியுங்கள். சிரசு, கழுத்து, புஜங்கள் மட்டும் தரையில் இருக்க மற்ற பாகங்கள் மேல் நோக்கித் தலைகீழாய் இருக்கிறது. ஒரு புட்டியின் அடியில் தங்கின அழுக்கை, தலைகீழாய் திருப்பின உடன் அங்கு காலி ஆகி வாய்ப்புறம் வந்து விடும். அதைப் போல் குடல் வாலில் அடைபட்ட அழுக்கு வஸ்துக்கள், பூமியின் ஆகர்ஷண சக்தியிலே இருக்கிறது. அந்த அழுக்கு வழக்கம் போல் பெருங்குடலில் சேர்க்கப்படுகிறது. அத்துடன் சர்வாங்காசனத்தால் தைராய்ட் கோளத்தின் ஆட்சி ஓங்க, மற்ற ஜீரணக் கருவிகளும் தங்கள் காரியங்களைச் சரிவரச் செய்கிறது. குடல் வாலும், தலைச்சுமை நீங்கினாற்போல் ஓய்வு பெறுகிறது. சீழ் பிடித்திருந்தாலும், சர்வாங்காசனத்தால் அந்த இடம் காலி ஆகி நல்ல ரத்தம் பாய இடம் கிடைப்பதால் சீழும் மாறி விடுகிறது.

அப்பெண்டிஸிடிஸுள்ளவர்கள் சர்வாங்காசனத்தைத் தினம் காலை மாலை வெறும் வயிற்றில் செய்ய வேண்டும். பத்து நிமிஷத்தில் ஆரம்பித்து 15, 20 நிமிஷங்கள் வரை செய்யலாம். ஒரே வாரத்தில் பாதி அல்லது முக்கால் பங்கு குணமாய் விடும். ஒரு மாதத்தில் பூராவும் குணமடையலாம். பிறகு எப்பொழுதும் செய்தால் நோய் எனும் அரக்கனுக்கு அஞ்ச வேண்டியதே யில்லை.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்!"

என்பது வள்ளுவரின் வாக்கன்றோ! (தொடரும்)

என்ன ஆச்சரியம்!



நீல ரிப்பன்

வேம்பு

மைசூர் பஜாரையும் தாண்டி, பூக்கடையையும் தாண்டி, அந்தச் சந்து திரும்பி விட்டான் கேசவன். அந்தச் சந்தில் திரும்பிய பிறகு நின்று திரும்பிப் பார்த்தான். தன் மனைவியும் அவள் தங்கையும் மெள்ள நடந்து வருவதையும், தொங்கிய முகத்துடன் கூடிய தன் தங்கைக்கு அவள் ஏதேதோ கூறித் தேற்றி வருவதையும் கண்ட கேசவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"என்னாது!......அன்ன நடை போடுறீங்களே......அத்தைப் பாட்டிக் கதை பேசிக்கிட்டு வாராங்களாம், அத்தைப் பாட்டிக் கதை......" என்று கூவினான் கேசவன் சற்று உரத்த குரலில்.

பகல் மூன்று மணியிலிருந்து அலைந்து அலைந்து அவன் கால்கள் அலுத்துப் போனது அவளுக்கல்லவா தெரியும்!

பட்டண வேடிக்கை பார்க்க வேண்டும்; அதுவும் கால்காசு செலவில்லாமல் பார்க்க வேண்டுமென்றால்......! உடம்பு 'அலங்காமல்' முடியுமா! எவ்வளவோ நாட்கள் அவள்—பார்வதி—பட்டணம் சுற்றிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறாள்; கோரிக்கை விடுத்திருக்கிறாள்; பிடிவாத அஸ்திரத்தையும் அவன்மீது கடைசியாகப் பிரயோகித்திருக்கிறாள்.

சென்னைக்கு வந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகியும் வீட்டை விட்டு வெளியே எங்கேயும் போய் அறியாள் அவள். காலையில் எட்டரை மணிக்குள்ளாக வேலைக்குப் போகப் 'பறக்கும்' கணவனுக்கு 'காஸ்தா' செய்ய ஆரம்பிப்பது முதல் இரவு வரையில் வேலை சரியாகத் தானிருந்தது அவளுக்கு. ஞாயிற்றுக்கிழமை—! அதுபோல் ஒரு கிழமை ஊர் உலகம்போல் சந்தோஷமாக இருக்க வருகிறதென்று அவள் அறிந்திருந்தால்தானே! அன்றைக்கும் கேசவன் "வீட்டிலே தங்குவதேது! 'ஓவர்டைம்' வேலை அன்று வந்து குதித்துவிடும்!

அப்படித்தான் ஓடியாடி மூச்சுவிட முடியாமல் சம்பாதித்து யாருக்குச் சேர்த்து வைக்கப் போகிறார்கள்! சேர்த்து வைப்பதா...... அன்றாடம் வயிறு நிறைந்தால் போதாதா!

காலையில் எட்டரை மணிக்குப் போய்—மணியடிக்கும் முன்னமே கியூவில் நின்று கையெழுத்தைப் போட்டுவிட்டு 'டைப் கேஸ்களின்' முன்னால் நின்றானால் கையும் கண்களும் மளமளவென வேலைசெய்யும். ஒவ்வொரு விநாடியும் அணா பைசா வாயிற்றே!

அந்தத் தடவை ஒரு ஞாயிற்றுக்கிழமை எப்படியோ தப்பி வந்துவிட்டது. அன்று அச்சுக்கூடம் விடுமுறை. முதலாளியாகப் பார்த்துக் கதவை மூடி விடுமுறை விடுகிறாரா! சக தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஸ்டிரைக் ஆரம்பித்திருந்தார்கள்!

வீட்டிலும் மனைவி எவ்வளவோ நாட்களாக ஆசைப்பட்ட 'பட்டணம் பார்ப்பதை' அன்று எப்படியாவது நிறைவேற்றத் திட்டமிட்டிருந்தான் கேசவன். ஊரிலிருந்து பார்வதியின் தங்கை பரிமளம் வேறு வந்திருந்தாள். அந்த எட்டு வயதுச் சிறுமிக்குப் பட்டணத்து அத்தான் 'பெரிய உத்தியோகம்' பார்ப்பதாக எண்ணம்! கிராமத்திலிருந்து, பட்டணத்து அக்கா—அத்தானையும் பார்த்துவிட்டு, கரையில்லாத சமுத்திரம்—அலறும் டிராம்—இத்யாதியான பட்டணத்து வேடிக்கைகளைப் பார்த்துவிட்டு வர அவளுடைய பெற்றோர்கள் அவளை அனுப்பியிருந்தார்கள்.

அந்த ஞாயிற்றுக்கிழமை வெய்யில் சிறிது தாழ்ந்தவுடன் எல்லோருமாகக் கிளம்பினார்கள். பார்வதி தன் தங்கைக்குத் தலையில் நிறைய எண்ணெய் தடவி இழைய வாரிப் பின்னிவிட்டிருந்தாள். தானும் நன்றாய்த் தலையை வாரித் தொங்கவிட்டுச் சவுரி கொண்டை முடிந்து புறப்பட்டாள்.

வெளியே கிளம்புவதென்றால் மூன்று ரூபாயாவது இருந்தால்தான் தேவலை என்று கேசவன் எண்ணினான். அடுத்த வாரக்கூலியில் மூன்று ரூபாய் அட்வான்ஸ் கேட்டு வாங்கி விட்டால் ஜமாய்த்துச் சுற்றிவரலாம் என்பது அவன் திட்டம்.

காபி ஹோட்டலில் ஒரு ரூபாய் செலவு; சினிமாவில் வருவாய் செலவு போதாதா!—இது தான் அவன் கற்பனைச் செலவுத் திட்டம்.

ஆனால் அவன் நினைத்ததுபோல ஒன்றும் நடக்கவில்லை. அந்த ஒரு வாரமாகவே முதலாளி 'கர்புர்' என்றிருந்தார். அதற்கேற்றாற் போல் வியாழக்கிழமையே வேலை நிறுத்தம் தொடங்கி விட்டது.


"என்ன அண்ணே......ஸ்ட்ரைக் செஞ்சுப்பூட்டேங்களே......இந்த வார ரேஷன் என்னாகிறது......" என்றான் கேசவன்.

"பெரிய ரேஷன் கண்டுட்டாருடா இவரு! இந்தக் கால் வயிறு சோறு இல்லாட்டிப் போனா முழுகிப் போச்சோ! பத்து பேருக்கு வாரது நமக்கும்தான்!" என்றான் அந்த ஸ்ட்ரைக் வேதாந்தி.

கேசவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. வாரா வாரம் கூலி வாங்கி அன்றாடம் வயிறு கழுவும் அவனுக்கு 'என்ன ஆகுமோ, எப்படியோ!' என்ற வேதனை மனத்தில் குடிபுகுந்து விட்டது.

இதிலே அந்த ஞாயிறு பட்டணம் வேறு சுற்றிப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு சமயம் அவனுக்கு இந்த ஊருக்கே ஏன்தான் வந்தோமோ என்று தோன்றிவிடும். கிராமாந்தரத்திலேயே ஏதாவது கூழோ கஞ்சியோ குடித்துக் கொண்டிருந்தால்......

"என்னங்க, இன்னிக்கு வெளியே கிளம்பலாம்லே......ஏதோ பேஸ்து வச்சவங்க மாதிரி உட்கார்ந்து கொண்டு இருக்கீங்களே" என்ற



மனைவியின் கண்டிப்பான குரல் அவனை நினைவுச் சுழலை விட்டு மீட்டது.

"ஹும்......மூனு மணிக்குத் தயாராயிரு" என்று துணிந்து கூறிவிட்டான் கேசவன்.

'ஏன்! காலணாகூட இல்லாமே பட்டணம் சுத்திப்பாக்க முடியாதா! கடற்கரைக் காத்துக்குக்கூடக் காசா கொடுக்கணும்!' என்ற முடிவுடன் மூன்று மணி வெய்யிலில் மனைவியையும் மைத்துனியையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

அந்த நேரத்தில் பொதுவாகச் சந்தடி நிறைந்திருக்கும் சைனாபஜார் அன்று அமைதியுடனிருந்தது. நடை பாதை ஓரமாக நடந்து சென்றான் கேசவன். சைனாபஜாரிலிருந்து ஹைகோர்ட் கடற்கரைக்கு மெள்ள நடத்தியே அழைத்துச் சென்றான்.

தினமும் எட்டு மணி நேரத்துக்கு மேல் நின்றும் கால் வலிக்காத அவனுக்கு ஏனோ அந்த இரண்டு மைல் தொலைவு இரு நூறு மைல்களாகப் பட்டது. கடற்கரையின் வெண் மணற் பரப்பில் அமர்ந்து தன் இதயத்தில் வீசும் எண்ண அலைகளுடன் போட்டியிடும் கடலலைகளைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தான்.

தொலைவில் மனைவியும் மைத்துனியும் சிரித்துச் சிரித்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

இடையே அவன் மனைவி எழுந்து வந்தாள்.

"என்னுங்க......நாளைக்கு அது ஊருக்குப் போவுதாம். எதனாச்சும் நாம்ப வாங்கித் தர வேண்டாமா!"

மௌனமாயிருந்தான் கேசவன்.

"என்ன வாங்கித் தர நம்மால் முடியும் நாளை ரேஷனுக்குத் துட்டு இல்லே......அந்தப் பொண்ணு வருகிறபோது, குவித்து வைத்திருந்த ரிப்பன் மேலே ஆசைபட்டுடுத்து. அவள் ஊரிலே இதெல்லாம் ஏது! நீலக் கலர் ரிப்பன் பளபளாங்குது என்றது அது......ஒரு ரிப்பனாவது வாங்கலாமே" என்று தொடர்ந்து பேசினாள்.

எங்கேயோ மனத்தை அலைய விட்டுக்கொண்டிருந்த அவன் ஏதோ நினைவாய் "ஹும்..." என்றான்.

மனைவி போய் விட்டாள். அந்தி மயங்கி இருள் கௌவி எதிர் முகங்கூடத் தெரியாத அளவுக்கு இருள் படர்ந்து விட்டது. 'மெர்க்குரி' விளக்குகள் இருளரசன் ஆட்சியில் கம்பீரமாக ஒளிவீசின.

"வா போகலாம்" என்று கூறி எழுந்தான் கேசவன். அந்த இனிய காற்றை அனுபவித்துக் கொண்டு அந்த இரவு பூராவும் உட்காரச் சொன்னாலும் அவன் தயார்தான். கால் இப்படி வலியாய் வலிக்கிறதே! வயிறு வேறு இன்று சதி செய்கிறது!

மீண்டும் சைனாபஜாரின் நடைபாதை ஓரமாக நடந்து சென்றான் மௌனமாகக் கேசவன். பின்னால் ஒவ்வொரு கடை எதிரேயும் நின்று பார்த்துப் பெருமூச்சு விட்ட வண்ணம் பார்வதி, பரிமளத்தையும் கையில் பிடித்தவாறு மெள்ள நடந்து கொண்டிருந்தாள்.

அதோ ரிப்பன் கடை. விளக்கு வெளிச்சத்தில் ஒவ்வொரு வண்ணமும் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தது.

பார்வதி அந்தக் கடையைத் தாண்டக் காலடி எடுத்து வைத்தாள்.

"அக்கா!" என்றாள் பரிமளம். "நீல ரிப்பன்......" என்றாள் அவள். கேசவன் அப்பொழுதுதான் அடுத்த பத்திரிகைக் கடையில்

ஒட்டியிருந்த 'கலெண்டரி'யிலுள்ளதைப் படித்துக் கொண்டிருந்தான்.

"என்னங்க கம்முனு போயிட்டீங்களே...... குழந்தைக் கேக்குது" என்றாள் பார்வதி.

அவளுக்கு என்ன தெரியும் கேசவனின் வேதனை !

ஒரு கணம் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. பசியும் கால் வலியும் மனப் போராட்டமும் சேர்ந்து எரிச்சலைக் கிளப்பின.

"சரிதான். நாழியாகுது, இப்பொழுது வாரையா இல்லையா ! ரிப்பனாம் ரிப்பன். அதுக்குத்தான் கடைப் பக்கமே கூட்டியாரதில்லை" என்று வள்ளென்று விழுந்தான்.

அருகே இருந்த 'மெர்குரி' விளக்கொளியில் அவன் முகக் கோரத் தாண்டவம் பார்வதிக்கு நன்றாகத் தெரிந்தது.

"ஆசையா கேக்குது ரொம்பத்தான் 'பிகு' பண்ணிக்கிறீங்களே......எனக்கு என்னமோ பட்டுச் சேலையும் ஜம்பருமா வாங்கித் தரது பாழாப் போகிறமாதிரி......" என்றாள் கேசவனின் சுபாவம் தெரிந்தும் அவள் அப்படித்தான் பதில் பேசினாள்.

நடு ரோட்டில் என்ன என்று கேசவன் பதில் பேசவில்லை. அந்த இடத்தை விட்டு நகரத் தொடங்கினான்.

வேணுமென்றே தன் கணவர் இப்படித் தட்டிக் கழிப்பதாகப் பார்வதிக்குப் பட்டது; நாளைக்கு ஊருக்குப் போவதற்குள் எப்படியும் ரிப்பன் வாங்கித் தந்துவிடுவதாகக் கூறிவிட்டு ஏதேதோ கதைகள் பேசி அவள் மனத்தை மாற்ற முயன்று கொண்டு மெள்ள நடந்து வந்தான் அவன்.

ஒரு ரிப்பன் வாங்கித் தருவதற்குக் கூட வழியில்லை யென்றால் பட்டணத்து அக்காவைப் பற்றி என்ன எண்ணுவாள் பரிமளம் என்பதை நினைக்கும்போதே பார்வதிக்கு ஏதோ வந்து இதயத்தை அழுத்துவது போலிருந்தது.

"என்ன, அன்ன நடை போடுறீங்க!" என்ற கணவனின் குரல் கேட்டவுடன்தான் வீட்டின் தெருவை அடைந்து விட்டோம் என்ற உணர்ச்சி தோன்றியது அவளுக்கு.

இரவெல்லாம் கேசவனுக்குப் பலவித எண்ணங்கள் மனத்தில் மின்னின. 'ஸ்டிரைக்' என்ன ஆவதோ என்ற எண்ணம்......எல்லாவற்றையும் விட அந்த ரிப்பன் சங்கதிதான் பலமாக அவனைத் தாக்கியது.

மைத்துனி விரும்பிக் கேட்ட ஒரு ரிப்பனைக் கூட வாங்கித் தரத் தன்னால் முடியவில்லையே. என்ன நினைப்பாள் அவள். அத்தானிடம் துட்டு இருந்தாலும் வாங்கித் தருவதற்கு மனமில்லை என்று எண்ணுவாள்...ஊரிலே போய் எல்லோரிடமும் கூறுவாள்.

சேச்சே......நம்மிடம் காசு பணம் இருக்கிறதா என்ன ! தன் வருத்தம் யாருக்குத் தெரியும் ! ஒரு காலணா வேர்க்கடலைக்குக் கூட இல்லாமே நடந்துதானே போனேனும் !......அது தெரிந்திருக்காதா !......

தெரிந்திருந்தால் என்ன......நாம் 'காசு இல்லை' என்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது ! அந்தச் சமயம் மகா கௌரவத்தைக் காப்பாற்ற விரும்பினேனும்......

எண்ணக் கோவைகள் வேதனை ஆரமாகப் படிந்தன.

காலையில் எழுந்தான். அன்று பரிமளம் ஊருக்குப் போகிறாள். மூன்றாவது வீட்டில் அடுத்த கிராமத்துக்குப் போகிறவர்கள் பரிமளத்தை அழைத்துப்போய் விடுவார்கள்.

"எட்டு மணிக்கு வீட்டுக்கு வரேன். அதுக்குள்ளார வராவிட்டால் நீ உன் தங்கையை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் விடு. ஸ்டேஷனில் வந்து பார்க்கிறேன்" என்று கூறி விட்டு வழக்கம்போல் ஆபீஸுக்குப் போவது போல் கிளம்பினான்.

எங்கெல்லாமோ சுற்றியலைந்தான்; யார் இந்தக் காலத்தில் காலணா கொடுக்கிறார்கள் !

ஸ்டேஷனில் பார்வதி காத்திருந்தாள். இப்பொழுதெல்லாம் தன் கணவன் சொன்னபடி செய்வதில்லை என்பது அவளுக்குத் தெரியும். அவள் கண்கள் கணவனைத் தேடின.

வண்டி கிளம்பப் பத்து நிமிஷங்கள்தான் இருக்கின்றன. அதோ கேசவன் வருகிறானே. அவன்கையில் சிறு பொட்டலங்கூட இருக்கிறதே......

நேற்று ஏற்படுத்திய வருத்தமான சூழ்நிலையை இன்று, திடீரென்று சந்தோஷத்தால் மாற்றித் திடுக்கிடச் செய்ய அவன் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

"அத்தான் ஊருக்குப் போய் வாரேன்...... அக்காவை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்



குங்கோ" என்றாள் பரிமளம். இயற்கையாக சந்தோஷத்துடன் தான் இருந்தாள் அவள்.

ரிப்பன் இல்லையே என்று அந்தச் சிறுமி துளிகூட வருத்தப்படாதது கேசவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

'பரிமளம்......ஊருக்கு ஜாக்கிரதையாய்ப் போய்வா......அம்மா அப்பாவை விசாரித்ததாகச் சொல்லு......

'சரி எங்கே திரும்பு பார்ப்போம். நேத்தியே நீ ரிப்பன் கேட்டியே......இந்தா நானே வைச்சுவிடறேன்......மல்லிகைப் பூ கூடத் தான்" என்று அவள் தலையைத் திருப்பினாள். இழைய இழைய வாரப்பட்ட பரிமளத்தின் தலைப் பின்னலின் நுனியில் பட்டுப் பூச்சியின் இறக்கை போன்று நீல ரிப்பன் கட்டியிருந்தது. அவள் தலையிலேயும் மல்லிகைப் பூ!

கேசவன் கையிலே ரிப்பனையும் பூவையும் வைத்துக்கொண்டு பரிமளத்தையும், பார்வதியையும் மாறி மாறிப் பார்த்தான்.

வண்டி கிளம்ப மணியடித்தது. பரிமளம் வண்டியில் ஏறி உட்கார்ந்து "அத்தான் போய்வரேன்......அக்கா போய்வரேன்" என்று கூறியதெல்லாம் அவன் காதில் விழவில்லை.

அன்று எப்படியாவது ரிப்பன் வாங்கிவிட வேண்டும் என்று காலையிலிருந்து எங்கெங்கோ சுற்றிய அவனுக்கு ஏழுமணி வரை ஒரு செல்லாத காசு கூடக் கிடைக்கவில்லை. பஸ் ஸ்டாண்டில் பிச்சை எடுக்கிறானே, அவன் குவளையில் கூட 'டங்' 'டங்' கென்று காலணாக்கள் விழுந்தன. அங்குமிங்கும் ஏதோ பறிகொடுத்தவனைப் போல் வாடிய முகத்துடன் அலைந்து கொண்டிருந்த அவனைச் சட்டென்று தோளைத் தட்டிக் கூப்பிட்டார் ஒருவர். அவர் தூக்க முடியாமல் தவித்த பழக்கூடையை பஸ் ஸ்டாண்ட் வரையில் எடுத்து வரச் சொன்னார்.



"ஆறு அவுன்ஸ் ரேஷனில் மக்கள் உணவு பற்றாமல் பசியால் வாடும் பரிதாப நிலைபற்றி திவான் பகதூர் தியாகராஜன் அவர்கள் பேச முன் வந்துள்ளார். அவருக்கு உங்கள் சார்பிலே இம்மலர் மாலையைச் சூட்டுகிறேன்."

ஒரு நிமிஷம் கேசவன் யோசித்தான். அவன் கால்கள் தளர்ந்தன. கௌரவம்!—கௌரவமாவது மண்ணாங்கட்டியாவது என்று சட்டெனப் பதில் பேசாமல் கூடையைச் சுமந்தான். தன்னை மறந்து அவன் பஸ் ஸ்டாண்டை அடைந்ததும், அவர் ஆறணாவை அவனிடம் கொடுத்தார்.

பசி காதை அடைத்தது. எனினும் அவன் மனத்தில் நேற்றைய ரிப்பன் விஷயமும் இவள் சொன்ன பதிலும் பதிந்திருந்தனவே! பணமிருந்தும் மனமில்லாதவனாகத் தன்னை நினைத்து விடுவார்களே—அதை மாற்ற வேண்டும் என்பதற்காக அரையணா மல்லிகைப் பூவும் ரிப்பனும் வாங்கிக் கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினான்.

ஆனால் அவனை அவன் மனைவி முந்திக் கொண்டிருந்தாள்.

பதில் பேசாமல் இருவரும் மௌனமாக வீட்டையடைந்தனர். சாப்பிட்ட பிறகுதான் பார்வதி பேசினாள்.

"என்ன அப்படிப் பார்த்தீர்களே. ஸ்டேஷனில்......நீங்கள் வாங்காவிட்டால் நானும் அதுபோல் சும்மா இருந்துவிட முடியுமா...... ஓரணா அரையணா என்று எட்டணா சேர்த்து வைத்திருந்தேன். என்னிக்காவது வாய்க்கு ருசியா சேட் கடை பட்சணம் சாப்பிடலாமென்று. 'அக்கா வீட்டுக்கு வந்தேன் ஒரு ரிப்பன் கூட வாங்கித்தர மாட்டேன்னு சொல்லிட்டாள்' என்று பரிமளம் போய் ஊரிலே சொன்னா என்ன செய்யுறது! சுய கௌரதையைக் காப்பாத்த வேண்டாமா! ரிப்பன் வாங்கிவிட்டேன். நீங்க வாங்குவீர்கள் என்று எப்படி எனக்குத் தெரியும்......ரிப்பன், சோப்பு, பவுடர் எல்லாத்து மேலேயும் உங்களுக்கு வெறுப்பாச்சேன்னு நான் கூட வாங்கிக்கலே" என்றாள் கம்பிய குரலில்......

கேசவனுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. கௌரவம்—இதுதான் மனிதனை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது...என்று எண்ணிக் கொண்டே சட்டென எழுந்தான். "பார்வதி இப்படித் திரும்பேன்" என்று கூறிக்கொண்டே அவள் முகத்தைத் திருப்பினான். பூவைத் தலையிலே சூட்டினான். பின்னலின் நுனியிலே கட்டித் தொங்கிய சணலை அறுத்தெறிந்தான். ரிப்பனைச் சூட்டினான்.

"நல்லாயிருக்கு. யாராவது பார்க்கப் போறாங்கோ" என்று சொன்ன பார்வதியின் முகம் வெட்கத்தால் சிவந்தது.

கேசவனுக்கோ மனத்தில் பெரிய நிம்மதி உண்டானது போலிருந்தது.



'கோலினாஸ்'
புன்னகையில்
வசீகரம்
இருக்கிறது!

நுரைதான் இந்த
வித்தியாசத்திற்குக் காரணம்.

அதிக சிக்கனமானதுங்கூட
ஏனெனில் அரை அங்குல
அளவே போதுமானது!





சமமற்ற பிரஷில்
உபயோகிப்பதே
உத்தமம்

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:—
ஜியாப்ரேமானர்ஸ் & கோ. லிட்., பம்பாய் 1
கிளைகள்:-கல்கத்தா - மதராஸ் - டில்லி.



அந்த
தலைவலியை
குணப்படுத்திக்கொள்ள

'ஆஸ்ப்ரோ'

3 வில்லைகள் அணா 1.
30 வில்லைகள் அணா 15.



பசியில்லையா? வயிற்று வலியா? சோர்வா?

உங்களுக்கு வேண்டியது மருந்து போர்ட் அங்கீகரித்துள்ள இந்த எளிய ஔஷதம்தான். உங்களைப்போலவே அநேகர் தம் வாழ்க்கையையே பெரும் தொல்லையாகக் கருதி வந்தவர்கள்தான். பிறகு அவர்கள் பைல் பீன்ஸ் உட்கொண்டார்கள். ஆனந்தம், உற்சாகம், பலம் முதலியன மந்திர ஜாலம்போல அவர்களுக்கு வந்து சேர்ந்தன.

தலைமுறை தலைமுறையாக உலகப் பிரசித்தி வாய்ந்த மருந்து போர்ட் அங்கீகரித்துள்ள பைல் பீன்ஸ் உங்கள் உடல் நிலையை ஒழுங்குபடுத்தி சரியான முறையில் இயங்கச் செய்யும். பைல் பீன்ஸ் மலச் சிக்கலை வெளியேற்றுகிறது. வயிற்றுவலி, பசியின்மை, அஜீர்ணம், பித்தம், தலைவலி, சோர்வு, அயர்ச்சி முதலியவற்றை உண்டாக்கக் கூடிய கொடிய அசுத்தங்களை அது போக்குகிறது. அதிக கனத்தைக் கொடுக்கும் முகாந்திரங்களைக் களைந்து விட்டு பைல் பீன்ஸ் உங்களை ஒல்லியாக இருக்கச் செய்கிறது. பைல் பீன்ஸ் உங்களுக்கு வலிவும் உணர்ச்சியும் அளிக்கிறது. எல்லோரும் உங்களை விரும்பும்படியான வசீகரத் தோற்றத்தையும் மகிழ்ச்சியையும் பைல் பீன்ஸ் உங்களுக்குத் தருகிறது.

பைல் பீன்ஸ் ஒழுங்காக உட்கொண்டு உங்கள் வாழ்க்கையை முன்னைவிட சிறப்பாக ஆக்கிக்கொள்ளுங்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



FBY: 7



உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...



ஒரு தனவந்தர்கூட, தினமும் ப்ளு ஜில்லெட் பிளேடை உபயோகிக்கும் சாதாரண மனிதனைவிட ஆனந்தமான க்ஷவரத்தை அனுபவிக்க முடியாது. மிகவும் கூராக தீட்டப்பட்ட இதன் விளிம்புகள் வழவழப்பான, சுகபோக க்ஷவரத்தை உங்களுக்கு அளிக்கிறது. மின்சாரத்தால் பதப் படுத்தப்பட்டதும், பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டதுமான இந்த ஐந்து பிளேடுகளால் அதிக தடவைகள் க்ஷவரம் செய்து கொள்ளலாம். விலை மிகவும் சரசமாயிருப்பதால், ஒவ்வொரு மனிதனும் உலகில் மிகவும் நாகரீகமான மனிதர்களின் விரும்பத்தக்க கூட்டத்தில் சேரலாம்.

ப்ளு ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணா

கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றி விருக்கும் அருந் தொண்டையும்

மகாத்மா காந்தி

என்ற நூலில் அழகாக விளக்கி யிருக்கிறார்

(விலை அணா எட்டு)

(தபால் செலவு தனி)

•

சசிதேவி எழுதிய

விஜயா

முதலிய கதைகள்

விலை ரூ. 2-8-0

(தபால் செலவு தனி)


•

கிடைக்குமிடம்:


"கல்கி" காரியாலயம்

கீழ்ப்பாக்கம் :: சென்னை

ஜுவல் பதித்த ரோ. கோ. கை கடிகாரங்கள் ரூ. 17-8-0



ஸ்விஸ் தயாரிப்பு, சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரங்கள். பத்து வருஷ உத்தரவாதம். ரோ. கோ கேஸ், வட்டம் அல்லது நீண்ட சதுர வடிவம் 7 ஜுவல் ரூ. 17-8-0; உயர் ரகம் க்ரோம் கேஸ், நடு செகண்டு முள் உடன் ரூ. 20/-; லேடீஸ் சைஸ் 8 ஜுவல் ரோ. கோ. கேஸ். ரூ. 23/-; நீண்ட சதுரம் க்ரோம் கேஸ் 8 ஜுவல் ரூ. 23/-; 15 ஜுவல் தட்டை வடிவம் ரூ. 30/-; நீண்ட சதுர வடிவம் 9 ஜுவல் ரோ. கோ. கேஸ் ரூ. 26/-; உயர்ந்தது ரூ. 28/-; 15 ஜுவல் ரோ. கோ. ரூ. 35/-; பாக்கெட் கடிகாரம் ரூ. 14/-.




சிகரெட் லைட்டர்: நிக்கல் கேஸ், வாட்டர் ப்ரூப் திக்கனமானது. இதை வாங்கினால் ஆயுள் பூராவும் தீக்கல் நெருப்புக் குச்சி வாங்க வேண்டிய அவசியமே இல்லை. விலை ரூ. 2/-; உயர் ரகம் ரூ. 3/-; சிறந்தது ரூ. 4/- & 5/- ஒரு டஜன் கற்கள் அணா 14.

U. S. A. பவுண்டன் பேனாக்கள்: சோல்டு கோல்டு நிப்பு. கிளிப்புடன் ரூ. 2/-; உயர்ந்தது ரூ. 2/8/- கோல்டு காப்புடன் (பார்க்கர் 51 போன்றது) ரூ. 4/8/-; உயர்ந்தது ரூ. 5/8/- தபால் செலவு அணா 14. இரண்டாக ஆர்டர் செய்வோருக்கு தபால் செலவு இலவசம்

IMPERIAL WATCH CO. (K)

Post Box No. 12220 :: CALCUTTA - 5



வளரும் குழந்தைகளின்

போஷிப்பிற்கு இன்றியமையாதது

குழந்தைகளின் உடலைப் பராமரித்து வளர்ப்பதில் ஈடு இணையற்ற ஏஜண்டாக விளங்குகிறது விடோபெரின். உடலின் ரத்தமின்மை, வைடமின்கள் குறைவு, மற்றும் உடலுக்குப் பலவீனத்தை பயக்கும் கோளாறுகள் பலவற்றையும் போக்க இது சிறந்த டானிக்காக விளங்குகிறது.

விடோபெரின்


தயாரிப்பாளர்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள்:

பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி நெ 63 சென்னை

BZ 36 TM.



உங்கள் சேமிப்புக்கு ஒரு வேலை கொடுங்கள்
உங்களுக்கும் உங்கள் நாட்டுக்கும் நலனுண்டு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


பலனளிக்கும் வேலை

[illegible]

வெகுநாள் நீடித்து இருப்பதற்காக

ஏசிசி

சிமெண்டால் கட்டப்பட்டது



தி பம்பாய் ஹாஸ்பிட்டல்.

★

சிமெண்டுகளின் உபயோகங்களையும் அவைகளை எப்படி உபயோகிப்பது என்கிற விஷயங்களைப் பற்றி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 1, மௌண்ட் ரோடு, மதராஸிலிருந்து இலவசமாக ஆலோசனைகள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

ஸ்ரீ சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்



Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road Kilpauk, Madras

FAS-534

நவ நாகரீக
பெண்கள் விரும்புவது





டி.எஸ்.ஆர்.
கோகுல்
ஹேர் ஆயில்

டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :
மெஸர்ஸ். சுராஜ் ஏஜன்ஸீஸ்
37, ஜானி ஜஹான்கான் ரோடு
ராயப்பேட்டை, மதராஸ்

கோவை, பாலக்காடு அன்டு நீலகிரிக்கு
சோல் ஏஜண்டுகள் :
B. பால பட்டாபி செட்டியார்
346, வைசியாள் தெரு — கோயமுத்தூர்
ஸ்டாக்கிஸ்டுகள் :
மெஸர்ஸ். சண்டிகா & கோ.
முதன் அக்ரஹாரம், சேலம் டவுன்

காது மந்தமா ?

நன்கு கேட்டு அனுபவிக்க

"மெய்கோ"

கேட்கும் சாதனமே

சிறந்தது

•

விலை மற்றும் இதர விவரங்களுக்குப்
ஆங்கிலத்தில் எழுதவும்

Modern Radio Co.,

KHALEELI MANSIONS, (K)
35, MOUNT ROAD, MADRAS-2

ஆங்கிலக் கல்வி

தத்தம் இல்லத்திலிருந்தே, பிறர் உதவியின்றி ஒரே வருடத்திற்குள் நான்காம் பாரத்திற் கொப்பான ஆங்கில அறிவைப் பெறலாம். ஆங்கில எழுத்துகள் அறியாதவர்களும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். 4 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.


•

கேம்பிரிட்ஜ் காலேஜ்
(K) கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B:—S. S. L. C. தேறி கல்லூரி படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு, பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். 6 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

REGD. NO. M. 4392


இக் கைகள் அழகை
உருவாக்குகின்றன, ஆனால்...



... உருவாக்கும் கைகளும்கூட
அழுக்கு அடைகின்றன!

அழுக்கடைந்த கைகள்
மறைந்திருக்கும்
அபாயத்தைத்
தாங்குகின்றன !

அழுக்கில் கண்களுக்கு
புலப்படாத கிருமிகள் இருப்பதால்!



லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

L. 177-50 TM